மு.மு.இஸ்மாயீல்

நயத்தக்க நாகரிகம்

வானதி
பதிப்பகம்

நயத்தக்க நாகரிகம்

மு. மு. இஸ்மாயீல்

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

முதற் பதிப்பு : மே, 1981
8-5-81 புதுவைக் கம்பன் விழாவில் வெளியிடப்பெற்றது.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 7

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

பதிப்புரை

இலக்கியச் செல்வர் மாண்புமிகு தலைமை நீதிபதி டாக்டர் மு. மு. இஸ்மாயீல் அவர்களின் ஆறு இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பை, நூல் வடிவில் வழங்குவதை வானதி பெருமையாகக் கருதுகிறது.

இந்நூலில் மகுடம் சூடியுள்ள முதற் கட்டுரையான 'நயத்தக்க நாகரிகம்' என்னும் கட்டுரை, இந்நூலுக்கெனவே கனம் தலைமை நீதிபதி அவர்கள் அண்மையில் எழுதியது. மற்ற கட்டுரைகள் எல்லாம், அவர்கள் சிறப்பு மலர்களுக்கென அவ்வப்போது எழுதியவை. மலர்களுக்கென எழுதப்பெற்ற கட்டுரைகளைப் பரவலாக எல்லா மக்களும் படித்திருக்க முடியாது. பயனுள்ள கட்டுரை மணிகளை எல்லா மக்களும் படித்துப் பயன் பல பெற வேண்டும் என்ற நல்ல நோக்குடனேயே, வானதியில் இப்பொழுது நூலாக வெளிவருகிறது

இந்நூலிலுள்ள கட்டுரை மணிகள், இலக்கியத்திலுள்ள நயத்தை எல்லாம் பாமரரும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வண்ணம், நீதிபதி அவர்கள் தமக்கே உரிய இனிய எளிய தமிழ் நடையில் தந்துள்ளார்கள். இவற்றைப் படித்தவுடன் இதிலுள்ள இலக்கிய இதிகாசங்களின் மூல நூல்கள் முழுவதையும் முழுமையாகப் படிக்க வேண்டுமென்ற பேரார்வத்தைத் தூண்டும் முறையில், அவற்றிலுள்ள நயத்தை எல்லாம் நயம்பட எடுத்துரைக்கின்றூர்கள். இலக்கியத்தின் இன்சுவைகளை— அவற்றிலுள்ள நயத்தை, இலக்கியத்தின் முக்கிய பாத்திரங்களின் நாகரிகமான நற்செயல்களை எல்லாம் தாம் நன்கு ரசித்து

அநுபவித்ததோடு மட்டுமல்லாது, அவற்றை சாதாரண மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டுகிற ஆற்றல் எல்லோருக்கும் அமையாது. அது தலைமை நீதிபதி இஸ்மாயீல் அவர்களுக்கே கைவந்த கலை என்பதற்கு இக்கட்டுரை மணிகளே சான்று.

இக் கட்டுரைத் தொகுப்பு நிச்சயம் மேல்வகுப்பு மாணவர்களுக்குப் பாடநூலாக அமையும். மக்களுக்குப் பயனுள்ள நூலாக அமையும். இலக்கியச் செல்வர்களுக்கு நல்ல ரசனையுள்ள விருந்தாக அமையும். எல்லோருக்கும் பயன்படக்கூடிய ஒரு நல்ல இலக்கியத் திறனாய்வு நூலை அளித்து, தமிழ் இலக்கிய உலகத்துக்குப் பெருமை சேர்க்கும் மதிப்பிற்குரிய தலைமை நீதிபதி இஸ்மாயீல் அவர்களைப் போற்றிப் பாராட்டுகிறேன். தமிழ் மக்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையில், வானதி பதிப்பகத்தின் பெருமைமிக்க வெளியீடாக நூல் வடிவில் வெளியிட்டுள்ளேன்.

இனியவை பல நல்கும் இந்நூலை வெளியிட அநுமதித்த மதிப்பிற்குரிய தலைமை நீதிபதி உயர்திரு இஸ்மாயீல் அவர்களுக்கும், இந்நூலுக்குக் கலைமகளே வந்து வாழ்த்துக் கவிதை பாடியதுபோல், வாழ்த்துக் கவிதை வழங்கிய கல்விக் கடல் புலவர் திரு எஸ். கே. ராமராஜன் அவர்களுக்கும், இந்நூல் செம்மையாக வர ஒப்புநோக்கி உதவிய தமிழ்ச் செல்வர் திரு புலியூர்க் கேசிகன் அவர்களுக்கும், இந்நூலை விரைவில் அச்சிட்டுக் கொடுத்த மாருதி அச்சகத்தாருக்கும், இந்நூலை வரவேற்கத் துடிக்கும் தமிழ் உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

அன்புள்ள,

ஏ. திருநாவுக்கரசு

வானதி பதிப்பகம்

கலைமகள் வாழ்த்து!

கல்விக்கடல், புலவர் S. K. இராமராஜன்

திங்களினிற் களங்கத்தைத் துடைத்து விட்டுச்
சிறிதுசிறி தாயரிந்து மதுவைச் சேர்த்து
மங்கலமார் பண்பாட்டை நாள மாக்கி
மறைச்சுரும்பு பண்பாட—மருகிக் கென்றே—
செங்கண்ணன் படைத்தளித்த மலரின் கண்ணே
திசைமுகத்தோன் பெருந்தேவி பூங்க ரத்தில்
பொங்கியநன்னு லொன்றை யினிதே ஏந்திப்
புவனத்தை மறந்திருந்தாள்: யோகி போல.

எப்பொழுதும் மலர்க்கரத்தில் வீற்றி ருக்கும்
எழில்வீணை உள்ளத்தில் ஊடல் கொண்டு
வெப்பமுறு பெருமூச்சு விட்டோர் பக்கல்
மிக்குவரு பொறுமையுடன் இருந்த தம்மா!
இப்படித்தான் இவள் செய்வாள்: உலகின் கண்ணே
எவரேனும் இனியநூல் வழங்கு வாரேல்
அப்பொழுதே நமைமறப்பாள்: பிரமன் கூட
அப்புறத்தே காதலுக்கா ஏங்கி நிற்பான்,

வள்ளுவன்நற் றிருக்குறளைப் படைத்த போது
 மருவுமென்மேற் சிலந்திவலை பின்னிற் றம்மா!
தெள்ளுபுகழ்க் கம்பன்றன் காவி யத்தில்
 சிந்தையினைப் பறிகொடுத்தாள் பற்பல் லாண்டு!
விள்ளரிய பாரதியின் கவிதைக் குள்ளே
 வீற்றிருந்தாள் பலதிங்கள்! இன்றும் ஏனோ
தள்ளிவிட்டாள் நம்மை: இன்று வந்த இந்நூல்
 தாரணியில் எவன்படைத்து நல்கி னானோ?

ஊடலுடன் முணுமுணுக்கும் வீணைப் பேச்சை
 ஒப்பில்லாள் செவிமடுத்துப்—'பண்கட் கெல்லாம்
ஈடில்லாக் கொளு கொம்பே! சீற்றம் வேண்டா:
 இணையற்ற தமிழ் நாட்டிற் கம்ப னுக்காய்ப்
பாடுபடும் சீருடையார்: பண்பு மிக்கார்:
 பாச்சுவையை விளக்குவதிற் றிறமை மிக்கார்:
நாடுபுகழ் இஸ்மாயீல் என்னும் நம்பி
 'நயத்தக்க நாகரிகம்' எனும்நூல் ஈந்தார்.

மங்கையரின் எழில்கண்டோர் மதுவை உண்டோர்
 மாமதியின் நிலாவெள்ளம் தனிற்கு ளித்தோர்
பொங்குபெருங் கருங்கடலைக் கண்டோர் கொள்கைப்
 பொலிவுடைய இஸ்மாயீல் நூலை ஆய்ந்தோர்
கங்கையினிற் கரைந்திட்ட பனியைப் போலக்
 கருத்தழிந்து செயல்மறந்து பொலிவார் என்று
பங்கமிலா வீணை! நீ உணர வில்லை
 பண்பில்லாச் சீற்றம்நீ கொள்ளல் ஆமோ?

வண்ணமுறு வீணையே! கேட்டி இன்று
  வானதியின் பதிப்பகம்இன் றென்பால் வந்து
நண்ணரிய களிப்பில்யான் மூழ்கும் வண்ணம்
  'நயத்தக்க நாகரிகம்' என்னும் நூலைக்
கண்ணியமாய்க் கொண்டுவந்து தந்த தாலே
  காயத்ரி மந்திரமும் நினைதல் விட்டுப்
புண்ணியத்தின் பயன்என்றே நுட்ப மாகப்
  பூரித்தேன்: உனைஉறையில் இட்டு வைத்தேன்.

உலகுதொழு வான்மீகி இனிதே நல்கும்
  ஒப்பற்ற காவியமாம் கடலின் கண்ணே
நலமருளும் புலமையெனும் மலையை நாட்டி
  நம்கம்பன் கடைந்தெடுத்த அமுதை ஆய்ந்து
புலமையினால் என்னுள்ளம் உவகை பூப்பப்
  பொலிவுடனே தந்திட்ட இந்த நூலில்
பலரின்று வரைஉணர்த்தா நுட்பம் தன்னைப்
  பாங்குடனே காண்கின்றேன்: ஓங்கு கின்றேன்.

மனிதகுலப் பண்பாட்டை உயர்த்து தற்கே
  மாகவிஞர் நன்னூலைப்புனைவர், ஆனால்
நனியுயர்ந்த பேரறிவுச் செல்வ ரேயந்
  நயப்பாட்டை உணர்ந்திடுவார்: தொலைநோக்காடி,
தனிவிசும்பிற் காணுகின்ற காட்சி எல்லாம்
  சலிப்புடனே நாற்பதின்பின் அணிகண் ணாடி,
இனிமையுறக் கண்டிடுமா? சில நுட் பங்கள்
  இறைவனே உள்ளிருந்து காட்ட வேண்டும்,

வள்ளுவன்நற் றிருக்குறளைப் படைத்த போது
மருவுமென்மேற் சிலந்திவலை பின்னிற் றம்மா!
தெள்ளுபுகழ்க் கம்பன்றன் காவி யத்தில்
சிந்தையினைப் பறிகொடுத்தாள் பற்பல் லாண்டு!
விள்ளரிய பாரதியின் கவிதைக் குள்ளே
வீற்றிருந்தாள் பலதிங்கள்! இன்றும் ஏனோ
தள்ளிவிட்டாள் நம்மை: இன்று வந்த இந்நூல்
தாரணியில் எவன்படைத்து நல்கி னானோ?

ஊடலுடன் முணுமுணுக்கும் வீணைப் பேச்சை
ஒப்பில்லாள் செவிமடுத்துப்—'பண்கட் கெல்லாம்
ஈடில்லாக் கொளு கொம்பே! சீற்றம் வேண்டா:
இணையற்ற தமிழ் நாட்டிற் கம்ப னுக்காய்ப்
பாடுபடும் சீருடையார்: பண்பு மிக்கார்:
பாச்சுவையை விளக்குவதிற் றிறமை மிக்கார்:
நாடுபுகழ் இஸ்மாயீல் என்னும் நம்பி
'நயத்தக்க நாகரிகம்' எனும்நூல் ஈந்தார்.

மங்கையரின் எழில்கண்டோர் மதுவை உண்டோர்
மாமதியின் நிலாவெள்ளம் தனிற்கு ளித்தோர்
பொங்குபெருங் கருங்கடலைக் கண்டோர் கொள்கைப்
பொலிவுடைய இஸ்மாயீல் நூலை ஆய்ந்தோர்
கங்கையினிற் கரைந்திட்ட பனியைப் போலக்
கருத்தழிந்து செயல்மறந்து பொலிவார் என்று
பங்கமிலா வீணை! நீ உணர வில்லை
பண்பில்லாச் சீற்றம்நீ கொள்ளல் ஆமோ?

வண்ணமுறு வீணையே! கேட்டி இன்று
  வானதியின் பதிப்பகம்இன் றென்பால் வந்து
நண்ணரிய களிப்பில்யான் மூழ்கும் வண்ணம்
  'நயத்தக்க நாகரிகம்' என்னும் நூலைக்
கண்ணியமாய்க் கொண்டுவந்து தந்த தாலே
  காயத்ரி மந்திரமும் நினைதல் விட்டுப்
புண்ணியத்தின் பயன்என்றே நுட்ப மாகப்
  பூரித்தேன்: உனைஉறையில் இட்டு வைத்தேன்.

உலகுதொழு வான்மீகி இனிதே நல்கும்
  ஒப்பற்ற காவியமாம் கடலின் கண்ணே
நலமருளும் புலமையெனும் மலையை நாட்டி
  நம்கம்பன் கடைந்தெடுத்த அமுதை ஆய்ந்து
புலமையினுல் என்னுள்ளம் உவகை பூப்பப்
  பொலிவுடனே தந்திட்ட இந்த நூலில்
பலரின்று வரைஉணர்த்தா நுட்பம் தன்னைப்
  பாங்குடனே காண்கின்றேன்: ஓங்கு கின்றேன்.

மனிதகுலப் பண்பாட்டை உயர்த்து தற்கே
  மாகவிஞர் நன்னூலைப்புனைவர், ஆனுல்
நனியுயர்ந்த பேரறிவுச் செல்வ ரேயந்
  நயப்பாட்டை உணர்ந்திடுவார்: தொலைநோக்காடி
தனிவிசும்பிற் காணுகின்ற காட்சி எல்லாம்
  சலிப்புடனே நாற்பதின்பின் அணிகண் ணுடி
இனிமையுறக் கண்டிடுமா? சிலநுட் பங்கள்
  இறைவனே உள்ளிருந்து காட்ட வேண்டும்,

ஞாலமெலாம் புகழ்கின்ற கவிஞர் கோமான்
நற்கம்பன், நீதிபதி கனவில் வந்து
கோலமுறு ரகசியத்தைப் பகர்கின் ருனே?
கோதற்ற நுண்ணுணர்வின் பயனே? அன்றிச்
சீலமுளார்க் கிறையருளும் கொடையோ? என்று
சிந்தித்துச் சிந்தித்து வியந்து போற்றி
ஆலமரம் போல்தழைக! என்றே யானும்
அடிக்கடிநல் வாழ்த்துரைப்பேன் கேட்டு ளாய்நீ!

வீறுமிகு கோதண்ட ராம வள்ளல்
மெய்யுற்ற நிழல்போலப் பிரியாத் தம்பி
சீறுகின்ற போர்க்களத்தைக் கண்ணிற் காணுச்
சீலமுறு பரதனைஏன் புகழ்ந்தான் என்று
நூறுமுறை என்னுள்ளம் கேட்ட துண்டு
நுண்ணறிவோ மௌனத்திற் பதுங்கிக் கொள்ளும்
பேறுபெற்ற நீதிபதி யதனை ஆய்ந்து
பேசுகின்ருர்: ஈதன்ருே கவியின் உள்ளம்.

மாதலியின் தேரைக்கண் டுலக நாதன்
மாருதிபால் இலக்குவன்பால் பேசும் பேச்சில்
போதமுண்டு பண்புண்டு நாக ரிகப்
பொலிவுண்டு வலிவுண்டு காண்மின் என்று
காதலுடன் வரைந்திட்ட திறனை நோக்கிக்
கம்பன்செய் தவமிவரே என்று கண்டேன்;
பூதலமேல் தமிழ்நாடு பாக்கி யத்தைப்
புரிந்துவிடும்; தமிழன்னை வீறு கொள்வாள்,

கம்பனொரு களஞ்சியமாம்: அதனுள் புக்குக்
கதிர்வீசும் பொற்கலங்கள் கொண்டு வந்து
நம்பிகளே! நங்கைகளே! புனைமின் என்று
நல்குகின்றார் நீதிபதி: உலகம் இன்றும்
செம்பொருளாய் உள்ளதற்கு வழுதிப் பாட்டால்
திருத்தமுற விளக்குகின்றார்; இதனைத் தேர்ந்தால்
உம்பருல கவனியிலே குடிபோ காதா?
உண்மை;யிதை அறியும்நாள் கதிர்போல் ஓங்கும்.

மூலசக்தி நம்மனமே என்று கண்டு
மூவாத திருக்குறளைப் பிழிந்து காட்டும்
கோலமுறு தண்மைதிண்மை தொன்மை என்று
குலவுகின்ற கட்டுரையே அறிவின் வேராம்:
சீலமுடன் பல்லாண்டு பல்லாண் டாகத்
தேர்ந்தாலும் தோய்ந்தாலும் வியப்பைக் காட்டிக்
காலமெலாங் கடந்தபொருள் இதயந் தன்னிற்
காட்சிதரும் 'பேசாத பொருளில்' அம்மா!

தங்கத்தாற் செய்திட்ட கோவில் போன்று
தகவுடனே பொலிந்திட்ட உலகம் இன்று
மங்குகின்ற நிலைகண்டு—தீமை போக்கல்
மாண்புடைய பிரார்த்தனையால் ஆகும் என்று
சிங்கம்நேர் பாரதியின் வழிமேற் கொண்டு—
செப்பியநற் கட்டுரையைப் பல்கால் ஆய்ந்து
பங்கமில்லா வுள்ளத்தில் வைப்பா ராகில்
பாழ்மனத்திற் பேரின்பம் குடிபு காதா?

மண்ணகத்தும் விண்ணகத்தும் உளஒன் றற்கே
வணக்கம்செய் நீதிபதி; கற்ருேர் எல்லாம்
எண்ணத்தில் எம். எம். இஸ் மாயீல் என்றே
இயம்பவொளிர் சீராளர் கண்ணில் லார்க்குக்
கண்ணளிப்போர்; நயத்தக்க குணத்தின் குன்றம்;
கனிந்தளித்த இந்நூலில் நீயும் தோய்ந்தால்
பண்ணெல்லாம் மறந்திடுவாய்; அன்ஞர் மேலும்
பல்லாண்டு வளர்க' என்ருள்; கலையின் தாயே!

அன்பன்,

S. K. இராமராசன்
'கம்பராமன்'

கம்ப நிலையம்,
வேலூர், சேலம்
1 - 5 - 1981

முகவுரை

இந்நூல் என்னுடைய இன்னுமொரு கட்டுரைத் தொகுப்பு. இதில் ஆறு கட்டுரைகள் இடம்பெற்றிருக் கின்றன. முதல் கட்டுரையைத் தவிர, மற்ற ஐந்து கட்டுரை களும் சில சிறப்பு மலர்களுக்காக எழுதப்பெற்றவை. அவை எந்தெந்த மலரில் வெளியாயின என்பது கட்டுரையின் முடிவில் கொடுக்கப்பெற்றிருக்கிறது. இந்நூலில் இடம்பெற்றிருக்கும் முதல் கட்டுரை இந்நூலுக்காகவே எழுதப்பெற்றது. அதன் தலைப்பே இந்நூலின் பெயராகவும் அமைந்திருக்கிறது.

நீண்டகாலமாக நாகரிகம் என்பது, பழந்தமிழ் நூல்களில் இடம்பெருத சொல் என்றும், இன்று நாம் எதை நாகரிகம் என்று சொல்கிறோமோ அதை உணர்த்துவதற்காகப் பின்னர் பயிலப்பெற்ற சொல் என்றும், நான் தவருக எண்ணி யிருந்தேன். இந்த முதல் கட்டுரைக்கு என்ன தலைப்பைக் கொடுக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்த பொழுதுதான் என்னுடைய தவறு எனக்கு விளங்கிற்று. 'நாகரிகம்' என்ற சொல்லை வள்ளுவனே தன்னுடைய ஒப்பற்ற நூலில் பயின்றுள்ளானென்பது தெரிந்தது.

> "பெயக் கண்டும், நஞ்சு உண்டு அமைவர்—நயத்தக்க
> நாகரிகம் வேண்டுபவர்"

என்பது வள்ளுவனின் குறள். இந்தக் குறள் 'கண்ணோட்டம்' என்னும் அதிகாரத்தின் கடைசிக் குறள். இந்தக் குறளுக்குப் பரிமேலழகர்,

"நஞ்சு பெயக் கண்டும் உண்டு அமைவர் - பயின்ருர் தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண்மறுக்க மாட்டாமையின் அதனை உண்டு பின்னும் அவரோடு மேவுவர், நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் - யாவரானும் விரும்பத்தக்க கண்ணேட்டத்தினை வேண்டுபவர்"

என்று உரை எழுதுவார். அப்படி உரை எழுதிவிட்டு,

"நாகரிகம் என்பது கண்ணேட்டமாதல், 'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்' என்பதனுலும் அறிக. அரசர் அவரை ஒருது கண்ணேடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ் செய்துழி என்பது இவ்விரண்டு பாட்டாலும் கூறப் பட்டது"

என்று கூறுவார்.

இங்கு பரிமேலழகர் மேற்கோளாகக் காட்டுவது 'நற்றிணை நானூறு' 355-ஆவது பாடலில் ஆருவது, ஏழாவது வரிகளாகக் காணப்படுபவை. இவ்வரிகளுக்குப் பொருள் என்னவென்ருல், "நட்புடையாளர் கண்ணேட்டமுடையார்க்கு எதிரே சென்றிருந்து, 'இதனை நீர் உண்பீராக!' என்று நஞ்சைக் கலந்து கொடுத்தாலும், நட்பின் மிக்க அக் கண்ணேட்ட முடையார் அது நஞ்செனக் கண்டவிடத்தும், அதை உண்ணவே செய்வர்" என்பதாகும். இப்படிப் பார்க்கும்பொழுது நற்றிணையில் இடம் பெற்றிருக்கும் இக்கருத்து வள்ளுவருடைய கருத்தோடு முழுமையாக ஒன்றியிருப்பதைக் காண்கிருேம்.

ஆக, நாகரிகம், நாகரிகர் என்ற சொற்கள் பழங்கால இலக்கியங்களிலேயே பயிலப்பெற்றிருக்கின்றன என்பது தெளிவாகிறது.

இதுவன்றியும், கொங்குவேளிர் இயற்றிய 'பெருங்கதை' என்னும் நூலிலும் இச்சொல் ஆளப்பெற்றிருக்கிறது.

உஞ்சைக் காண்டம், நீராட்டரவம் காதையில் அரிவை மகளிரைப்பற்றி அடியிற் கண்ட வரிகள் இடம்பெற்றிருக் கின்றன:

> "கலங்கவின் பெற்ற கண்ணூர் களிகை
> நலங்கவின் கொண்ட நனிநா கரிகத்
> தம்மென் சாய லரிவை மகளிர்"

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள், தம்முடைய பதிப்பில் 'நாகரிகம்' என்ற சொல்லுக்கு அடிக்குறிப்பாக இவ்வாறு பொருள் கொடுக்கிறார்கள்: 'நாகரிகம்—மிக்கத் திருத்தம்; நகர சம்பந்தமான செப்பம்'.

எனவே, நாகரிகம் என்ற சொல் வள்ளுவத்திலும், நற்றிணையிலும் கண்ணோட்டம் என்ற பொருளைக் கொடுத்துப் பின்னர் மிக்கத் திருத்தம், நகர சம்பந்தமான செப்பம் என்ற பொருள்களையும் கொடுக்கிறது. ஆனால், நாகரிகம் என்ற சொல் பண்பையும், பண்பாட்டையும், இங்கிதத்தையும் குறிக்குமென்று கொண்டு நான் இந்நூலின் முதற் கட்டுரையை எழுதியிருக்கிறேன். நாகரிகம் என்பது டாக்டர் ஐயர் அவர்கள் கூறியிருப்பதுபோல நகர சம்பந்தமான செப்பத்தை மாத்திரம் குறிக்குமென்று கொள்வது, நாகரிகம் என்ற அந்தச் சொல்லுக்கு அதற்குரிய பரந்த பொருளைக் கொடுப்பதாகாது என்பது தெளிவு.

இன்று நாம் நகரத்தையும், நாட்டுப்புறத்தையும் பிரித்துப் பேசி,நாகரிகம் நகரத்தில் மாத்திரம்தான் காணப்படுகிறதென்று சொல்வதற்கேற்பப் பார்ப்போமானால் இந்தக் குறுகிய பொருள் பொருந்தும். அதைவிட்டு, வள்ளுவத்திலும், நற்றிணையிலும் குறிக்கப்படும் கருத்திற்கேற்ப இச்சொல்லின் பொருளைக் காண்போமானால் அது மிகப் பரந்ததாகவே இருக்கும்; இருக்க முடியும். அந்தப் பரந்த பொருளில் அதைக்கொண்டுதான் நான் என்னுடைய முதல் கட்டுரையை எழுதியிருக்கிறேன்.

வழக்கம்போல இக்கட்டுரைத் தொகுப்பை வெளியிடும் துணிவை எனக்குக் கொடுத்தது என்னுடைய பேச்சையும், எழுத்தையும் பெருமளவில் வரவேற்று, என்னிடத்தில் அன்பையும், பாசத்தையும் சொரிந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுடைய பரிவுதான். அந்த அன்பிலும், பரிவிலும் பூரண நம்பிக்கை கொண்டுள்ள நான், இந்தத் தொகுப்பையும் தமிழுலகம் வரவேற்குமென்று எதிர்பார்க்கிறேன்.

நடமாடும் இலக்கியக் களஞ்சியமும், எங்கும், யாருக்கும் தானே முன்வந்து அன்பைப் பொழியும், எளிமையே உருவான வருமான புலவர் இராமராஜன் அவர்கள், என்மீது வைத்திருக்கும் அன்பின் காரணமாக, வலிய முன்வந்து, இந்நூல் முழுவதையும் படித்து, இந்நூலையும், என்னையும் கலைமகள் வாழ்த்துவதாகக் 'கலைமகள் வாழ்த்து' என்ற தலைப்பில் கவிதை வடிவில், இந்நூலுக்கு ஒரு பாராட்டுரை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியையும், மரியாதையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலில் அடங்கியிருக்கும் இரண்டு முதல் ஆறுவரையிலான கட்டுரைகளை முதலில் வெளியிட்ட சிறப்பிதழ்களின் ஆசிரியர்களுக்கு என் நன்றி.

இந்நூலை ஒப்புநோக்கிப் பிழைதிருத்த உதவிய புலவர் புலியூர்க் கேசிகன் அவர்களுக்கும், வழக்கம்போல் இந்நூலை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட வானதி பதிப்பகத்தாருக்கும், இதனை நல்ல முறையில் அச்சிட்ட மாருதி அச்சகத்தாருக்கும் என்னுடைய உளங்கனிந்த நன்றி.

மயிலை,
1-5-1981

மு. மு. இஸ்மாயீல்

பொருளடக்கம்

நயத்தக்க நாகரிகம்

மனித சமுதாயம் தோன்றிய நாள்தொட்டு, மக்கட் பிரிவினர் அனைவரிடையேயும் கதைகள் இடம்பெற்றிருக்கவே செய்திருக்கின்றன. கதைகள் முழுக்க முழுக்கக் கற்பனையாகவும் இருக்கக்கூடும்; அனுபவத்தின் அடிப்படையாகவும் இருக்கக்கூடும். முழுக்க முழுக்கக் கற்பனையாக இருக்கும் கதைகளும்கூடக் கதாசிரியனுடைய சொந்த அனுபவமாக இல்லாமல், அவனுக்குமுன் வாழ்ந்த, அல்லது அவன் காலத்தில் வாழும், பிறருடைய அனுபவத்தில் உதயமானவையாகவும் இருக்கக்கூடும். எப்படி யிருந்தபோதிலும், இந்தக் கதைகள், நாம் இன்று பத்திரிகைகளில் படிப்பதுபோலப் பொழுது போக்கிற்காகவே தோன்றியவையென்று சொல்ல முடியாது.

இரு பெருங் கதைகள்

நம்முடைய நாட்டில் பண்டைக்காலத்தில் தோன்றி, இன்றும் நடமாடி வருகின்ற ஆயிரக்கணக்கான கதைகள் வெறும் பொழுதுபோக்கிற்காகவே உண்டானவை என்றில்லாமல், மக்கள் வாழ்வின் உறுதிப்பொருள்களை வலியுறுத்துவதற்காகவும் உண்டானவையாகும். மக்கள் வாழ்வுக்குத் தேவையான உறுதிப்பொருள்களைச் சூத்திரவடிவில் எடுத்துக் கூறினால் அது இலக்கணமாகும். அதற்கு மாறாக, ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியிலிருந்தோ, குறிப்பிட்ட ஒருவருடைய வாழ்விலிருந்தோ, பிழிந்தெடுக்கின்ற சாரமாக அமைகின்ற வகையில் அந்த உறுதிப்பொருள் இருக்குமானால், அந்த நிகழ்ச்சியைக் கூறுவதோ, அந்த வாழ்வினைப் பாடுவதோ இலக்கியமாகவும், காப்பியமாகவும் ஆகிவிடுகிறது.

இப்படி இலக்கியமாகவும், காப்பியமாகவும் நம் நாட்டில் அமைந்தவை எண்ணற்றவை. அவற்றில் என்றும் அலுப்புத் தட்டாமல், மக்களுடைய கற்பனையையும், அக்கறையையும், ஈடுபாட்டையும் காலாகாலத்திற்குத் தம்மிடத்தே இருத்திக் கொண்டிருக்கும் கதைகளில், பிரதானமானவை இராமாயண மும், மகாபாரதமுமாகும்.

இவ்விரண்டையும் பற்றிப் பேசாத நாளில்லை; கேட்காத மக்களில்லை. இவை, ஆரம்பத்தில் நம் நாட்டில் வடமொழியில் பிறந்தவையாயினும், பின்னர் நம் நாட்டிலுள்ள பிற மொழி களிலும் ஆக்கப்பெற்றன.

மூல ஆசிரியனின் உரிமை

இத்தகைய கதைகளைப் பின்னர் வந்தவர் இலக்கிய மாகவோ, காப்பியமாகவோ ஆக்கும்பொழுது சிற்சில சங்கடங் களுண்டு. முதன்முதலாக ஒரு கதையைப் படைப்பதாக இருந்தால், அந்தக் கதை எப்படி அமையவேண்டுமென்பதை நிர்ணயித்துக்கொள்ளும் உரிமை பூரணமாக அதன் ஆசிரியருக்கு உண்டு. ஆகவே, அவருடைய எண்ணத்தின்படி கதையை அமைத்துக்கொள்ளலாம்; கதையில் வரும் பாத்திரங்களைப் படைக்கலாம்; அந்தப் பாத்திரங்களின் சிந்தனைக்கும், சொல்லுக்கும், செயலுக்கும், உருவமும், வடிவமும் கொடுக் கலாம்.

பழைய கருவும் புதிய வடிவும்

ஆனால், ஏற்கனவே மக்களிடையே வழங்கிவருகிற கதை யொன்றைத் தன்னுடைய காப்பியத்திற்குக் கருவாகக் கவிஞன் ஒருவன் கொள்வானேயானால், அவனுடைய காரியம் மிகக் கடினமான ஒன்றாக இருக்கும். கதை ஏற்கனவே தெரிந்த கதை என்பதனால், அதைப் படிப்பவரிடையே சற்று அலட்சிய மனப்பான்மை இருக்கக்கூடும்; "நமக்குத் தெரிந்ததைத்தானே இவன் சொல்லப் போகிறான்? புதிதாக எதைச் சொல்லிவிடப் போகிறான்?" என்ற எண்ண ஓட்டத்தில் புதிய காப்பியத்தை

விருப்புடன் படிப்பதற்குத் தடையேற்படக்கூடும். ஆனால், இவையெல்லாவற்றையும் மீறி, கதை பழைய கதையாக இருந்தபோதிலும், புதியதாக ஒரு கதையைச் சொல்வதைப் போன்ற—படைப்பதைப் போன்ற—உணர்வையும், அனுபவத்தையும் உண்டாக்க வேண்டுமானல், அந்தக் காப்பிய கர்த்தா, அல்லது கதாசிரியன் மிக மிகத் திறமையுள்ளவனக இருக்க வேண்டும்.

அமரத்துவம் தருவன

இந்தத் திறமைக்குப் பல தன்மைகள் காரணமாக இருக்க முடியும். அவனுடைய ஒப்பற்ற கற்பனை, அற்புதமான சொல்வளம், அமரத்துவம்பெற்ற தத்துவச் செறிவு, யாரையும் ஈர்க்கக்கூடிய அறிவுத் தெளிவு, படிப்பவர்களின் மனத்தையும் கேட்பவர்களின் மனத்தையும் இனிக்க வைக்கும் சொல்நயம், பிறர் அனைவரையும் அதிசயத்திலாழ்த்தும் வரம்பற்ற பரந்த அறிவு ஆகிய பலவும், இந்தத் திறமையின் பகுதிகளாக அமைந்து, காப்பியத்திற்கு அமரத்துவத்தைக் கொடுத்துவிடக் கூடும்.

இராம காதையின் தனித்தன்மை

ஆனல், ஒரு கதாசிரியனே, காப்பிய கர்த்தாவோ இவற்றேடு மனஅமைதி பெறுவதில்லை. "தெரிந்த கதைதான்; பார்த்த பாத்திரங்கள்தாம்; எல்லோரும் பயின்ற நிகழ்ச்சிகள் தாம்; முடிவு என்ன என்பதும் எல்லோரும் அறிந்ததுதான்." என்றபோதிலும், பழைய கதையினுடைய முக்கியமான அங்கமெதற்கும் பங்கம் வராமல், அந்தக் கதையைச் சொல்கின்ற முறையிலும், அந்தக் கதையின் பாத்திரங்களைப் பேச வைக்கின்ற, செயல்படுத்துகின்ற வகையிலும், கதையினூடே நிகழும் நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுகிற முறையிலும் கலைஞன் தன்னுடைய தனித்தன்மையைக் காட்டி, ஒப்பற்ற கவிநயத்தையும், கவர்ச்சியையும் அதற்களித்துவிட முடியும் அத்தகைய ஒரு படைப்பே கம்பனுடைய இராம காதை.

இராமாயணம் ஆதியில் ஸம்ஸ்கிருத மொழியில் வால்மீகி முனிவரால் படைக்கப்பட்டது. வால்மீகி காலம்தொட்டு அந்தக் கதை இந்தியநாட்டு மக்களுடைய உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து, அவர்களுடைய வாழ்வோடு ஒன்றிப்போய்விட்டது. இதன் காரணமாகவே, இந்தக் கதையைப் பின்னர்வந்த பலரும் பல மொழிகளில் பாடியிருக்கிறார்கள்.

எழிலுடைய மாற்றங்கள்

ஆனால், அப்படிப் பாடியவர்கள் ஒவ்வொருவரும் காப்பியத் தலைவனாகிய இராமனிடத்தும், தலைவியாகிய சீதையினிடத்தும், பிற முக்கிய பாத்திரங்களாகிய இராவணன், அனுமன், விடணன், பரதன் போன்றோரிடத்தும் தங்களுடைய உள்ளத்தைச் செலுத்தியிருந்த முறைக்கும், நெறிக்குமேற்ப அந்தக் கதையைச் சிறுசிறு மாற்றங்களுடன் படைத்திருக்கிறார்கள். இந்த மாற்றங்கள், அவற்றை அணுகுகின்ற கோணத்திற்கேற்பப் புதிய படைப்புக்கு எழிலும், ஏற்றமும் கொடுத்திருக்கின்றன.

வால்மீகி தன்னுடைய இராமாயணத்தைப் படைத்ததற்கும், கம்பன் தன்னுடைய இராமகாதையைப் படைத்ததற்குமிடையேயுள்ள காலம் வெகு நீண்டது. இந்த நீண்ட காலத்தில் இந் நாட்டு மக்கள் இராமாயணக் கதையைப் பன்னிப் பன்னிப் படித்ததோடும், கேட்டதோடுமல்லாமல், அதன் பாத்திரங்கள் பற்றியும், அதன் நிகழ்ச்சிகள் பற்றியும், அது உணர்த்தும் உறுதிகள் பற்றியும், ஒரு திட்டமான, அசைக்க முடியாத கருத்தினைத் தங்கள் உள்ளங்களிலே பதியவைத்துவிட்டிருந்தார்கள்.

கம்பனின் தனிப்பெருமை

இந்தச் சூழ்நிலையில்தான் கம்பன் தன்னுடைய இராமாவதாரத்தைப் பாடினான். இப்படிப் பாடுவதில்தான் அவனுடைய சங்கடமும், பெருமையும் ஒருங்கே அமைந்தன. ஏற்கனவே எல்லோருக்கும் தெரிந்திருந்த கதையைப் பாடுவதென்பதில்

சங்கடமுண்டு. ஆனால், அப்படி எல்லோருக்கும் தெரிந்திருந்த கதையைப் பாடுவதிலேயே என்றும் மாறாத, வாடாத, அழியாத புதுமைகளைப் புகுத்தி, அந்தக் கதைக்குப் புதியதோர் எழிலையும், ஏற்றத்தையும் கொடுத்தது அவனுடைய பெருமை.

இப்படிப் பழைய கதைகளைப் புதிய காப்பியங்களாக வடிக்கும் கவிஞர்கள் தலைசிறந்த கலைஞர்களாக இருந்தால், ஏற்கனவே தெரிந்திருந்த கதையைச் சொல்வதோடும், அது உணர்த்தும் வாழ்வின் உறுதிகளை வலியுறுத்துவதோடும் அமைந்துவிடுவதில்லை. தொடக்கத்திலிருந்து நாகரிகமும், பண்பாடும் தொடர்ந்து வளர்ந்திருப்பதற்கேற்ப, அந்தக் கதைகளின் பாத்திரங்கள்மீது நாகரிகத்தையும், பண்பாட்டையும், இங்கிதத்தையும் ஏற்றிப் பொலிவுபெறச் செய்கிறார்கள். இந்தச் செயலில் ஈடிணையற்றவன் கம்பன். எனவேதான், கம்பனுடைய இராமகாதை, வால்மீகியின் இராமாயணத்தின் மொழிபெயர்ப்பாகவோ, எதிரொலியாகவோ இல்லாமல், படிக்குந்தோறும் புத்தம்புதிய ஒளியையும், பொலிவையும் சிந்தும் அமரகாவியமாக அமைந்துவிட்டது.

பழைய பொன்னிலே புதிய நகை!

இது எப்படியென்றால், பழைய பாத்திரத்தைத் தேய்த்து விளக்குவது போலவும், பழைய நகையை மெருகேற்றுவது போலவும், பழைய நகையை அழித்துவிட்டு அந்தப் பொன்னைக் கொண்டே புதியதொரு நகையைச் செய்வது போலவும் ஆகும். இவையெல்லாம் நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பார்ப்பவைதாம். களிம்பேறிய பித்தளைப் பாத்திரத்தைப் புளிபோட்டுத் தேய்த்தபிறகு, அதில் புதியதொரு ஒளியுண்டாகிறது. அணிந்து அழுக்குப்படிந்த தங்கநகையினை, அழுக்கை நீக்கி மெருகிடும்பொழுது, அது கண்ணைப் பறிக்கின்ற அளவுக்குப் பளபளக்கிறது. நீண்டகாலம் உபயோகித்த பொன் நகையொன்றை உருக்கி, அதே பொன்னைக் கொண்டு சற்று மாறுபட்ட நகையொன்றைச் செய்யும் பொழுது, அது புத்தம் புதிய நகையாகவே தோற்றமளிக்கிறது.

வாழ்வதற்கும் உதவும்

இத்தகைய மெருகு வேலையை—நகாசு வேலையை—செய் வதில் கம்பனுக்கு இணை கம்பனே தானென்று சொல்ல வேண்டும். இம்மாதிரியான, கம்பன் செய்த ஓரிரு அற்புதங் களை நாம் இப்பொழுது காணலாம். இந்த அற்புதங்கள் ஏதோ சிந்தித்து, ஆனந்தப்படுவதற்கு மாத்திரமென்றில் லாமல், வாழ்க்கையில் பண்பாட்டுடனும், நாகரிகத்துடனும், இங்கிதத்துடனும் வாழ்வதற்கும், பழகுவதற்கும் உதவுமென் பதை நாம் சேர்த்துப் பார்ப்போமானால், இத்தகைய திறமையை நாம் மனமாரப் பாராட்டவும், பலனை முழுமை யாக அனுபவிக்கவும் முடியும்.

தரமறிந்து பேசும் தகைமை

நாம் எல்லோரும் 'சமம்' என்று சொன்னபோதிலும், ஒவ்வொருவரும், தாம்தாம் வகிக்கின்ற பதவியின் காரண மாகவும், செய்கின்ற தொழிலின் காரணமாகவும், புரிகின்ற பணியின் காரணமாகவும் பலதரத்தில் இருக்கவே செய் கிறோம். இப்படிப் பலதரத்திலிருக்கின்ற நாம், எல்லாத் தரத் திலிருப்பவர்களையும், எல்லாச் சமயங்களிலும் ஒரே மாதிரியாக அழைத்துவிடவும் முடியாது; உத்திரவிடவும் முடியாது. நம்முடைய அன்றாட வாழ்க்கையிலேயே நாம் நம்முடைய தாயிடத்தில் பேசுவதுபோல, நம் மனைவியினிடத்தில் பேசுவ தில்லை; நாம் நம்முடைய தாயிடத்தில் பேசுவதைப்போல, நம் தந்தையிடத்தில் பேசுவதில்லை; நாம் நம்முடைய அண்ண னிடத்தில் பேசுவதைப்போலத் தம்பியிடத்தில் பேசுவதில்லை; நாம் நம்முடைய மகனிடத்தில் பேசுவதைப்போல, மகளிடத் தில் பேசுவதில்லை. இவர்களனைவரிடமும் சொல்கின்ற செய்தி ஒன்றாக இருந்தாலும், கேட்கின்ற கேள்வி ஒன்றாக இருந் தாலும், அதைச் சொல்கின்ற முறையும், கேட்கின்ற விதமும் அவரவர்களுடைய உறவின் நிலைக்கும், வயதின் தன்மைக்கு மேற்ப மாறுபடவே செய்யும். இதையும், கதை சொல்கின்ற ஒரு கதாசிரியன் தன்னுடைய கதையினூடே எடுத்துக் காட்டித்தான் ஆகவேண்டும்.

I. அனுமன் இராமன் சந்திப்பு

இவர்களே தர்மம்!

சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு சென்றுவிட்ட பிறகு, கவந்தன், சபரி ஆகியவர்களுடைய ஆலோசனையின்படி சுக்கிரீவனுடைய உதவிகொண்டு, சீதை இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக, இராமனும் இலக்குவனும், சுக்கிரீவன் ஒளிந்துகொண்டிருக்கும் ரிஷியமுக பர்வதத்திற்கு வருகிறார்கள். இப்படி வரும் அவர்களைப் பார்த்துச் சுக்கிரீவன், 'இவர்கள் வாலியால் அனுப்பப்பட்டவர்களோ' என்று பயந்து நடுங்குகிறான். சுக்கிரீவனுக்குத் தைரியம் சொன்னதோடு, வருபவர்கள் யார் என்பதை விசாரித்துக்கொண்டு வருவதாக அனுமன் புறப்பட்டு வருகிறான். அப்படிப் புறப்பட்டு வருகிற அனுமன், இராமனிடத்தில் வருகிறான். இராம இலக்கு வர்க்கு எதிரே வந்து அவர்களைச் சந்திப்பதற்கு முன்னால், தூரத்திலிருந்தே அவர்களை அனுமன் பார்க்கிறான். அப்படிப் பார்த்து, மனத்திற்குள் ஒரு முடிவுக்கு வருகிறான். அதாவது, 'இவர்களே தர்மம்' என்று. அந்த முடிவுக்கு வந்தபிறகு, அனுமன் அவர்கள் முன்வந்து 'கவ்வை இன்றாக, நுங்கள் வரவு' என்று கூறுகிறான். அப்படிக் கூறிய அனுமனிடத்தில், இராமன், 'எவ்வழி நீங்கியோய்! நீ யார்?' எனக் கேட்கிறான். இப்பொழுது, இப்படி இராமன் அனுமனைப் பார்த்துக் கேட்பதின் பொருத்தத்தைத்தான், நாம் பார்க்கப்போகிறோம்.

'நீ யார்?' என்றான்

'நீ எங்கிருந்து வருகிறாய்? நீ யார்!' என்பதுதான் இராமனுடைய கேள்வி. இப்படி இராமன் அனுமனைக் கேட்டதில் ஏதாவது சிறப்பிருக்கிறதா? கேட்பவனோ சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமன்; தசரத புத்திரன். எதிரில் வந்து நிற்பவனோ மாணவப் படிவத்திலுள்ளவன். ஆகவே, தசரத புத்திரனாகவும், சக்கரவர்த்தித் திருமகனாகவுமிருக்கின்ற இராமன் எதிரிலே வந்து நிற்கின்ற, மாணவப் படிவத்திலிருக்கிற,

அனுமனைப் பார்த்து 'நீ யார்?' என்று கேட்பது மிக இயற்கையான முறையில் கேட்பதாகும்.

தன்னை அறிவிக்கின்றான்

இப்படிக் கேட்ட இராமனுக்குத் தான் வாயுதேவனுக்கு அஞ்சனை வயிற்றில் பிறந்தவனென்றும், தன் நாமம் அனுமன் என்றும், சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவனென்றும், அவர்கள் வருவதைக்கண்டு அச்சமுற்ற சுக்கிரீவன் ஏவ, விசாரித்துத் தெரிந்துகொள்ள வந்தவனென்றும், அனுமன் பதில் கூறுகிறான். அனுமன் பதில் சொன்ன முறையிலிருந்தே அவனுடைய ஆற்றலையும், அறிவையும், கல்வி அமைதியையும், நிறைவையும் உணர்ந்து கொண்ட இராமன், அனுமன் கல்லாத கலை உலகத்து எங்குமில்லையென்றும், அவன் வேதக்கடலுமே யாவானென்றும், தன் தம்பியிடத்தில் கூறிவிட்டு, சுக்கிரீவனைக் காட்டுமாறு அனுமனிடத்தில் கூறுகிறான்.

தங்களை யார் என்பேன்?

அனுமன், இராம இலக்குவர்க்கு முகமன் கூறிய பிறகு, அவர்கள் யாரெனத் தெரிந்துகொள்ள விரும்புகிறான். அப்படி யாரெனத் தெரிந்துகொள்ள விரும்பிய அனுமன், தன்னைப் பார்த்து இராமன் 'நீ யார்?' என்று கேட்டது போல, 'நீங்கள் யார்?' என்று கேட்கவில்லை. அதற்கு மாறாக, அவன் அவர்களிடத்தில் எப்படிக் கேட்டானென்பதைக் கம்பன்,

> "யார் என விளம்புகேன் நான், எம் குலத் தலைவற்கு, உம்மை?
> வீர! நீர் பணித்திர்!' என்றான், மெய்ம்மையின் வேலி
> போல்வான்;"

என்று பாடுவான். இப்படி அவன் கேட்டதில் என்ன சிறப்பிருக்கிறது? அதற்கு மாறாக, 'நீங்கள் யார்?' என்று கேட்டிருந்தால், அதில் என்ன குறை இருந்திருக்க முடியும் என்பதை, நாம் இப்பொழுது பார்க்கவேண்டும்.

நாகரிகம், நிரம்பி மணக்கிறது

இருவரும் யாரென்பதை முன்னரே நாம் கூறிவிட்டோம். இராம-இலக்குவர் இருவரும் கோசல நாட்டின் சக்கரவர்த்தி யாகிய தசரதனுடைய புத்திரர்கள். எதிரிலிருப்பவனே மாணவ உருவில் வந்திருப்பவன். அதுமாத்திரமன்று; 'எரிகதிர்ப் பரிதிச் செல்வன் செம்மலுக்கு ஏவல் செய்வேன்', அதாவது, 'சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவன்' என்று, 'நீ யார்?' என்று கேட்ட இராமனிடத்தில், அனுமன், பதிலாக ஏற்கனவே சொல்லிவிட்டான். அதுவன்றியும், இராம-இலக்குவரைத் தூரத்திலிருந்தே நோக்கி, 'இவர்களே தர்மம்' என்ற முடிவுக்கு வந்தவன் அனுமன். அத்தகையவன் இராம இலக்குவரைப் பார்த்து, 'நீங்கள் யார்?' என்று கேட்பது மரியாதைக் குறைவாக நடந்து கொள்வதாக ஆகும். அதே சமயத்தில், சுக்கிரீவன் இருக்குமிடத்தைக் காட்டுமாறு அவர்கள் கேட்ட தனுல், அவர்கள் யாரென்று தெரிந்துகொண்டு, அதைச் சுக்கிரீவனிடத்தில் சொல்லவேண்டும். எனவேதான், 'யார் என விளம்புகேன் நான், எம் குலத் தலைவற்கு?' என்று கேட்கிருன். கருத்தைப் பார்ப்போமானுல், அவர்கள் யாரென் பதைத் தெரிந்து கொள்ளத்தான் அனுமன் விரும்புகிருன். ஆனுல், அதைக் கேட்கின்ற முறையில் இங்கிதம் பொங்கு கிறது; நாகரிகம் நிறைந்து நிற்கிறது; பண்பு கொழிக்கிறது.

இப்படியாகப் பழைய கதையை, பழைய நிகழ்ச்சியைச் சொல்வதிலேயே கம்பன் வாழ்க்கை முறையையும், ஒழுக்க நெறியையும், பண்பாட்டு வழிகளையும் போதிக்கச் செய்கிருன். இதற்கொத்தாற்போல் இன்னென்றையும் காண்போம்.

II. தேவேந்திரன் தந்த தேர்

இராம-இராவண யுத்தம் நடக்கிறது. இராவண வதம் நடக்கவேண்டிய நாள். இராவணன் தேரேறிப் போர்க்களத் திற்கு வருகிருன். 'இராவணன் தேர் ஏறு படலம்' என்று, கம்பன் ஒரு படலத்தையே செய்து, சுமார் 35 பாடல்கள் பாடு கிருன். இராவணனைப் பற்றிய வருணனையும், அவன் தேர்

ஏறியது பற்றிய வருணனையும், அவன் தேர் ஏறுவதற்கு முன்னர்ச் செய்த பூசை, தானம் ஆகியவை பற்றியும் அற்புதமாகப் பாடியுள்ளான் கம்பன். இப்படி இராவணன் போர்க்களத்திற்கு வந்த பிறகு, இராமனும் தேரில் ஏறுகிறான். இதற்கும் 'இராமன் தேர் ஏறு படலம்' என்று ஒரு படலத்தைக் கம்பன் பாடுகிறான்.

ஆர் புகல வந்தாய் ?

அன்று இராவண வதம் நடக்கப்போகிறது என்பதையறிந்த தேவர்கள், இந்திரனுடைய தேரை மாதலியுடன் இராமன் ஏறிக்கொள்வதற்கு அனுப்புகிறார்கள். அப்படி மாதலி கொண்டுவந்த தேர் பல பாடல்களால் சிறப்பிக்கப் பெறுகிறது. போர்க்களத்தில் அப்படித் தேரைத் தன்முன் கொண்டு வந்து நிறுத்திய மாதலியைப் பார்த்து இராமன், 'வந்தாய், பொன்னின் ஒளிர்தேர் இது கொடு, ஆர்புகல?' (பொன்னால் ஒளிர்கின்ற இந்தத் தேரை யார் சொல்லக் கொண்டுவந்தாய்?) என்று வினவுகிறான். தேர் இந்திரனுடையதென்று கூறி, அதனுடைய பெருமையையும் விளக்கிய மாதலி,

> "தேவரும், முனித் தலைவரும், சிவனும், மேல்நாள்
> மூஉலகு அளித்த அவனும், முதல்வ! முன்நின்று
> ஏவினர்; சுரர்க்கு இறைவன் ஈந்துள இது..."

என்று பதில் கூறுகிறான். (சுரர்க்கு இறைவன்—தேவர்களுடைய தலைவனாகிய இந்திரன்.)

உனது நாமம் நவில்க!

இப்படி மாதலி கூறியபிறகு, 'நீ உனது நாமம் நவில்க' என்று இராமன் கேட்கிறான். இங்கும் இந்தக் கேள்வியினுடைய பொருத்தத்தையும், சிறப்பையும் காணவேண்டும்.

இராவணனைக் கொல்வதற்காகப் போர்க்களத்தில் நிற்கிறான் இராமன். அந்த இராமனிடத்தில், தேவேந்திரனுடைய

தேரை மாதலி கொண்டுவருகிறுன். அப்படிக் கொண்டுவந்ததும் தேவர்களுடைய ஆணைப்படிதான். அதை இராமனுடைய முந்தின கேள்விக்குப் பதிலாக மாதலியே சொல்லிவிடுகிறுன். எனவே, வந்திருப்பவன் தேவேந்திரனுடைய தேர்ப்பாகன் என்பது இராமனுக்குத் தெரிந்துவிட்டது. இனி தெரிய வேண்டியது, அந்தத் தேர்ப்பாகனுடைய பெயர். எனவே, அவனைப் பார்த்து 'நீ உனது நாமம் நவில்க' என்று கேட்பது தான், இராமனுக்குப் பொருத்தமாகும்.

இங்கும்கூட வேருென்றையும் காணலாம். மாணவப் படிவத்தில் வந்த அனுமனைப் பார்த்து, இராமன், 'நீ யார்?' என்று கேட்டான். தேவேந்திரனுடைய தேரைக் கொண்டு வந்த பாகனைப் பார்த்து, 'நீ உனது நாமம் நவில்க' என்று கேட்கிருன். இந்த வேறுபாட்டிலும்கூட ஒரு சிறப்பு இருக்கத் தான் செய்கிறது. 'கவ்வை இன்ருக, நுங்கள் வரவு!' என்று கூறிய அனுமனிடத்தில், முதன்முதலாக இராமன் பேசுகிருன். ஆகையால் 'நீ யார்?' என்று கேட்கிருன். இங்கோ, யாருடைய ஆணைப்படி இந்தத் தேரைக் கொண்டுவந்தாய்?' என்று, முன்னதாகவே இராமன் மாதலியைக் கேட்டுவிட்டான், அதற்குப் பதில் சொன்ன பிறகு, அந்தத் தேர்ப்பாகனுடைய பெயரைத் தெரிந்துகொள்ள விரும்புகிருன். இதற் கேற்பவே 'நீ உனது நாமம் நவில்க' என்ற கேள்வி அமைந் திருக்கிறது.

III. இராமனும் சூர்ப்பணகையும்

இப்பொழுது இன்னெரு காட்சியை எடுத்துக் கொள்வோம். இராமன், இலக்குவன், சீதை மூவரும் கோதாவரி நதியினைச் சேர்ந்து, அதன் வளங்களைக் கண்டு மகிழ் கிருர்கள். பின்னர்ப் பஞ்சவடி எனும் பருவச்சோலைத் தனி இடம் அதனை நண்ணி, தம்பியால் சமைக்கப்பட்ட இனிய பூஞ்சோலை எய்தி இருந்தனன் இராமன். அந்த வேளையில் அங்குச் சூர்ப்பணகை வருகிருள்; இராமனைக் காண்கிருள்;

இராமனது அழகில் ஈடுபட்டு, அவனிடத்துக் காமவெறி கொண்டவளாகிறுள். அதன் காரணமாக, இராமன் முன்னுல் சென்று நிற்பதான செய்கை தேடுவாள் ஆயினுள்.

வந்தது ஒரு மெல் அமுதம்!

கோரப் பற்களையுடைய அரக்கியானபோதிலும், மந்திர பலத்தால் தான் விரும்பிய வடிவைப் பெறும் சக்தி பெற்றவளாதலால், அழகிய வடிவெடுத்து,

> "பஞ்சி ஒளிர், விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க,
> செஞ் செவிய கஞ்சம் நிகர், சீறடியள் ஆகி,
> அம் சொல் இள மஞ்ஞை என, அன்னம் என, மின்னும்
> வஞ்சி என, நஞ்சம் என, வஞ்ச மகள் வந்தாள்."

அப்படி வந்த சூர்ப்பணகையை இராமன் பார்க்கிறுன். அதாவது நூபுரமும், மேகலையும், நூலும், அறல் ஓதிப் பூ முரலும் வண்டும், இவை பூசலிடும் ஓசை, ஒரு தையல் அங்கே வருகிறுளென்பதை அறிவிப்பதை உணர்ந்த இராமன், அவ்வோசை வந்த திக்குக் குறித்து எதிர் விழித்தான். அப்படி எதிர் விழித்தபொழுது, வந்து நின்ற சூர்ப்பணகையைக் கண்டு, அவள் அழகை வியக்கிறுன்.

"விண் அருள வந்தது ஒரு மெல் அமுதம் என்ன..." அவளை இரு கண்ணின் எதிர் கண்டான்.

நவ்வியின் ஒதுங்கி அயல் நின்றுள்!

பூ உலகம், வானுலகம், நாகர் உலகம் ஆகிய மூவுலகத்திலுமில்லாததாகிய ஒப்பற்ற மேன்மையான பெண் வடிவைப் பார்த்து, அவன், 'யாரிவள்? இவள் பெற்றிருக்கும் அழகுக்கு எல்லையிருக்க முடியுமோ? மகளிர்க்குள் இவளுக்கு ஒப்பானவர் யார்?' என்று மனத்தில் நினைக்கிறுன். அந்த வேளையில் சூர்ப்பணகை இராமன் அருகில் வந்து வணங்கி நிற்கிறுள். அப்படி, அவள் நிற்பதைக் கம்பன்,

"அவ் வயின், அவ் ஆசை தன் அகத்துடைய அன்னுள்,
செவ்வி முகம் முன்னி, அடி செங்கையின் இறைஞ்சா,
வெவ்விய நெடுங் கண்—அயில் வீசி, அயல் பாரா,
நவ்வியின் ஒதுங்கி, இறை நாணி, அயல் நின்ருள்"

என்று பாடுவான்.

இப் பாடலின் பொருளேக் கூர்ந்து நோக்குவது அவசிய மாகும். அதாவது, அந்தச் சமயத்தில் ஆசை தன்னகத் துடையவளாகிய அவள், இராமனுடைய அழகிய முகத்தை நோக்கி, அவனுடைய திருவடிகளேச் சிவந்த தன் கைகளால் தொழுது, கொடிய நீண்ட தன் கண்களாகிய வேல்களே வீசி, பக்கங்களில் பரத்திக்கொண்டு, மருண்ட மான்போல ஒரு புறத்தில் விலகிச் சிறிது நாணி அருகில் நின்ருள்.

ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு?

அப்படி வந்துநின்ற பெண்ணேப் பார்த்த இராமன் என்ன கேட்டானென்பதைக் கம்பன்,

" 'தீது இல் வரவு ஆக, திரு! நின் வரவு; சேயோய்!
போத உளது, எம்முழை ஓர் புண்ணியம் அது அன்ருே?
ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு?' என்ருன்
வேத முதல்; பேதை அவள் தன் நிலே விரிப்பாள்:"

என்று பாடுவான்.

அவளேத் 'திரு' என்றும், 'சேயோய்' என்றும் விளிக்கிருன் இராமன். அவளுடைய அழகைப் பார்த்து இராமன் வியந்தா. னென்பதை முன்னரே கண்டோம். அதற்கேற்ப, திருமகள் போன்றவளே என்ற பொருளில் 'திரு' என்று விளிக்கிருன் அதுவல்லாமல், 'சேயோய்' என்றும் விளிக்கிருன். இந்தச் 'சேயோய்' என்ற சொல், 'செம்மை' என்ற சொல்லிலிருந்து பிறந்தது என்றும் கொள்ளலாம்; 'சேய்' என்ற சொல்லிலிருந்து பிறந்தது என்றும் கொள்ளலாம். இந்த இரண்டு சொற்களுக் கும் சில பொதுப் பொருள்களுண்டு. அவையாவன : 'சிவப் பு'

'பெருமை', 'அழகு'. இவையல்லாமல், 'செம்மை' என்ற சொல்லுக்குச் 'செவ்வை', அதாவது, 'நல்ல தன்மை', 'நேர்மை', 'சுத்தம்' என்ற பொருள்களுமுண்டு. எப்படிப் பார்த்தாலும், அவளுடைய அழகைப் பார்த்து, தான் முன்னர்த் 'திரு' என்று விளித்ததற்கேற்பவே, சிவப்புநிறம் உடையவளே, அழகையுடையவளே, பெருமையுடையவளே என்றெல்லாம் சூர்ப்பணகையைப் பார்த்து இராமன் விளித்தானென்று கொள்வது பொருத்தமுடையதாகும். அப்படி விளித்து, 'நின் வரவு தீதுஇல் வரவு ஆகுக' என்று வரவேற்பளிக்கிறான். அப்படிக் கூறுவதோடல்லாமல் அவளைப் புகழவும் செய்கிறான். அதுதான் இரண்டாமடியில் காணப்படுவது. 'நீ இவ்விடத்தில் வரும்படி நிகழ்ந்தது எம்மிடத்திலுள்ள ஒரு புண்ணியத்தால் அல்லவோ' என்று கூறுகிறான். அப்படிக் கூறிவிட்டுத்தான், 'ஏது பதி?' — அதாவது உன் ஊர் எது? 'ஏது பெயர்?' —உன்னுடைய பெயர் என்ன? 'யாவர் உறவு?' உன்னுடைய சுற்றத்தார்கள் யார்? என்று கேட்கிறான். அப்படிக் கேட்டவன் 'வேத முதல்' என்று கம்பன் கூறுவான். அப்படிக் கேட்டவனுக்குப் 'பேதை அவள் தன் நிலை விரிப்பாள்' என்று கவிஞன் கூறி, அவள் என்ன விரித்தாளென்பதை அடுத்து வரும் அடிகளில் பாடுவான்.

மூன்று கேள்விகள்!

நாம் இப்பொழுது காண்பது இராமன் அவளைப் பற்றி விசாரித்ததன் பொருத்தத்தையே யாகும். மூன்று செய்திகளை அவளிடத்தில் இராமன் கேட்கிறான். அவளுடைய ஊர், அவளுடைய பெயர், மற்றும் அவளுடைய உறவினர். இப்படி இந்த மூன்றையும் கேட்பதில் அப்படியென்ன தனிச் சிறப்பிருக்கிறது?

யாராவது ஒருவர் நம்முன்னே தோன்றுவாரேயானால், அவருடைய பெயர் என்ன என்று நாம் கேட்பது மிக இயல்பான கேள்வி. அடுத்து உங்கள் ஊர் எது என்று கேட்பதும் இயல்பான கேள்விதான். பழக்கமுள்ளவராயிருந்தால் அவர் பெயரும்,

ஊரும் தெரிந்திருக்கும். சில சமயங்களில் பெயர் தெரிந்திருக்காவிட்டாலும், எந்த இடத்தைச் சேர்ந்தவர் என்ருவது தெரிந்திருக்கும். இங்கோ, ஒப்பற்ற அழகியாக இராமன்முன் தோன்றியிருப்பவளோ, அவனுக்குப் பழக்கமில்லாதவள். ஆகையினுலேயே 'உன் பெயர் என்ன?', 'உன் ஊர் என்ன?'' 'உன் உறவினர் யாவர்?' என்று கேட்கிருன். இதில் இன்னெரு சிறப்பையும் காணவேண்டும்.

கானிடை வந்த காரிகை!

இராமன் இருக்கும் இடமோ கானகம். பஞ்சவடியில் சீதையுடனும், இலக்குவனுடனும் வசித்துக்கொண்டிருக்கிருன். அத்தகைய வனத்தினுடைய சூழ்நிலையில் எதிரில் வந்து நிற்கும் நங்கையோ வனதேவதைபோல அழகுடனும், தோற்றப் பொலிவுடனும் இருக்கிருள். அவ்விடத்தில் அத்தகைய பெண்ணெருத்தியை இராமன் எதிர்ப்பார்த்திருக்க முடியாது. எனவேதான், திடீரென்று வனச்சூழலில் இத்தகைய அழகு கொப்பளிக்கும் பெண்ணெருத்தி தன்முன் வந்து நின்ற உடனேயே, அவளுடைய பெயரென்ன, ஊரென்ன என்று மிக இயல்பாக இராமன் கேட்கிருன். அதுவல்லாமல், அவளுடைய உறவினர்கள் யாரென்றும் கேட்கிருன். இதற்கும் ஒரு தக்க காரணமிருக்கிறது.

கானகத்தின் நடுவில், இத்தகைய அழகியொருத்தி தனியாக வந்து நிற்பது, இராமனைப் போன்ற யாருக்கும் வியப்பளிக்கவே செய்யும். எனவேதான், அவள் கானகத்திற்கிடையே தனியாக வந்திருப்பதற்குக் காரணமென்னவென்று வினவும் வகையில், அவளுடைய உறவினர்கள் யாரென்று கேட்கிருன். நல்லுறவினர்கள் அவளுக்கிருப்பார்களேயாயின் அத்தகைய அழகியொருத்தி தனிமையில் கானகத்திற்கு வந்திருக்க மாட்டாள். இந்தச் சூழலில் அவளைப் பார்த்து, 'உன் பெயரென்ன? உன் ஊரென்ன? உன் உறவினர்கள் யார்?' என்று இராமன் கேட்பது மிக்க இயல்பாகவும், பொருத்தமாகவும் அமைந்துவிடுகிறது.

வந்ததே புண்ணியம்!

இந்தத் தன்மையைப் பார்ப்பதற்கு இன்ஞென்றையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மாயையினுல் அழகி யொருத்தியின் உருவத்தை எடுத்துக்கொண்டு சூர்ப்பணகை அங்கே தோன்றியிருந்தாலும்கூட, அவள் உண்மையில் அரக்கி, மாயத்தினுல் இவ்வேடத்தை எடுத்துக் கொண்டிருக்கிருளென்று அப்பொழுது இராமனுக்குத் தெரிய நியாயமில்லை. ஒரு மானிடப்பெண் என்றுதான் அவளை இராமன் நினைத்திருக்க முடியும். அம் மானிடப் பெண்ணே மூவுலகிலும் அவளுக்கு ஒப்பானவர் யாருமில்லையென்று சொல்லுமளவுக்கு அழகியாக இருக்கிருள். அந்த அழகு இராமனை எந்த அளவுக்கு ஈர்க்கிறது என்ருல், அவள் அங்கு வந்ததே இராமனும் அவனைச் சேர்ந்தவர்களும் செய்த புண்ணியம் என்று, எண்ணக்கூடிய அளவுக்கு ஈர்க்கிறது.

காமத்தும் மாருத பெண்ணியல்பு!

வந்தவள், இராமனிடத்தில் காம வேட்கை கொண்டவள் தான். ஆனுல், அது அப்பொழுது இராமனுக்குத் தெரியாது. அதற்கு மாருக, எதிரில் வந்து நின்றவளோ, இராமனுடைய திருமுகத்தை நோக்கி, அவனுடைய அடிகளைத் தன்னுடைய அழகிய கைகளால் தொழுது, கண்களால் அவனை நேராகப் பார்க்காமல், பக்கங்களில் பார்த்துக்கொண்டு, மருண்ட மான் போல ஒருபுறத்தில் ஒதுங்கி, சிறிது நாணி, அயலே நிற்கிருள். அவளுடைய இந்தச் செயல் யாருக்கும் எவ்வித ஐயத்தையும் எழுப்ப முடியாத செயல். அதற்கு மாருக, நல்ல குலத்தில் பிறந்த பெண்ணெருத்தி செய்யும் இயல்பான செயல். இந்தச் சூழ்நிலையில்தான், அவளைப் பார்த்து இராமன் கேட்கும், நாம் முன்னுற் கண்ட இயல்பான கேள்விகள் பிறக்கின்றன.

இவையெல்லாம் கவிஞனின் நகாசு வேலை. யார் யாரிடத்தில் எந்த வேளையில் எப்படிப் பேசவேண்டும், என்ன கேட்க வேண்டுமென்பதை நமக்கு உபதேசிக்கின்ற முறையில், கவிஞனுடைய இந்தச் செயல் அமைந்து நிற்கிறது.

IV. தேவராசன் தேரும் ஆராய்ச்சியும்

அரக்கர் மாயமோ?

இராம-இராவண யுத்தத்தின் கடைசி நாளன்று, இராமனிடம், தேவர்கள் இந்திரனுடைய தேரை மாதலியோடு அனுப்பியதைக் கண்டோம். மாதலியைப் பார்த்து, 'இத்தகைய தேரை, யாருடைய உத்திரவின்பேரில் நீ கொண்டு வந்தாய்?' என்று இராமன் கேட்டதற்கு, மாதலி விரிவாகப் பதில் சொல்கிறான். இந்தப் பதிலினூடே தேரின் ஒப்பற்ற தன்மையையும் விளக்குகிறான். இதைக் கேட்ட இராமனுடைய செயலைக் கம்பன்,

> "ஐயன் இது கேட்டு, 'இகல் அரக்கர் அகல் மாயச்
> செய்கைகொல்?' எனச் சிறிது சிந்தையில் நினைந்தான்;"

என்று பாடுவான்.

இல்லை, இனி ஐயம்!

தேரையும் பார்க்கிறான்; தேரைப் பற்றி மாதலி சொன்னதையும் கேட்கிறான். அரக்கர்களுடைய மாயத்தைக் கண்டவன் இராமன். எனவே, 'இந்தத் தேர் வந்திருப்பதும் அந்த அரக்கர்களுடைய மாயைதானோ?' என்று மனத்தில் தோன்றுகிறது. இப்படித் தோன்றிய ஐயத்தைத் தீர்க்கும் வகையில், அந்தத் தேரை இழுத்துக்கொண்டு வந்த குதிரைகளே மாதலி கூறியது உண்மை என்பதை வெளிப்படுத்தின என்று கம்பன் கூறுகிறான். குதிரைகள் அப்படி வெளிப்படுத்திவிடவே, இராமன், 'இல்லை இனி ஐயம்' என எண்ணுகிறான்.

கருதுகின்றது சொல்வீர்?

சந்தேகத்திற்கிடமில்லாமல் மாதலி சொன்னது உண்மை; தேர் தேவேந்திரனுடையது; தேவர்கள், இந்த யுத்தத்தில் அவனுக்குப் பயன்படுவதற்காக இந்தத் தேரை அனுப்பியிருக்

கிருர்கள், என்று இராமன் உறுதியான முடிவுக்கு வந்து விட்டான். இருந்தபோதிலும், அவன் உடனே தேரில் ஏறிக் கொள்ளவில்லை. இராமன் என்ன செய்தானென்பதைக் கம்பன்,

''மாருதியை நோக்கி, இள வாள் அரியை நோக்கி,
'நீர் கருதுகின்றதை நிகழ்த்தும்' என, நின்ருன்
ஆரியன்; வணங்கி, அவர், 'ஐயம் இலை, ஐயா!
தேர் இது புரந்தரனது' என்றனர், தெளிந்தார்.''

என்று கூறுவான். அதாவது, அனுமனையும், இலக்குவனையும் நோக்கி, 'உங்களுடைய கருத்து என்ன?' என்று இராமன் கேட்கிருன். அவர்களும், இராமனை வணங்கி, 'இதில் சந்தேக மில்லை, இது தேவேந்திரனுடைய தேர்தான்' என்று கூறுகிருர்கள்.

இப்படி இராமன் கேட்டதாகவோ, அனுமனும் இலக்குவனும் இவ்வாறு பதிலிறுத்ததாகவோ வால்மீகி இராமாயணத்தில் இல்லை. கம்பன் மாத்திரம் இப்படியொரு நிகழ்ச்சியை அமைக்கவேண்டிய அவசியமென்ன? இதில் ஏதாவது அவனுடைய நயமும், திறனும் வெளிப்படுகிறதா? என்று பார்க்க வேண்டும்.

கம்பன் அமைத்த கவின்!

யுத்த களத்தில் இராமனேடு பலர் இருக்கிருர்கள் சுக்கிரீவன் இருக்கிருன்; வீடணன் இருக்கிருன்; அங்கதன் இருக்கிருன்; இன்னும் எத்தனையோ பேர் இருக்கின்றனர். அவர்கள் எல்லோரையும் விட்டுவிட்டு, அனுமனையும், இலக்கு வனையும் நோக்கி இராமன் இக்கேள்வியைக் கேட்கிருனென்ருல், அதற்கு ஏதாவதொரு விசேஷம் இருக்க வேண்டுமல்லவா? இப்பொழுது இலக்குவனைப் பார்த்து இந்தக் கேள்வியை இராமன் கேட்டதிலுள்ள விசேஷத்தைச் சற்று ஆராய்வோம்.

இலக்குவன் சிறந்த அறிவாளி. பின்னர் நடக்கப்போவதை முன்கூட்டியே ஆய்ந்து தெளிந்துகொள்கிற திறமையுள்ளவன்.

தன் அண்ணனின்மேல் வைத்திருக்கும் ஈடிணையற்ற பாசத்தின் காரணமாகச் சில சமயங்களில் அவசரப்படுவதுண்டு. இதைத் தவிர, மற்ற எல்லா அம்சங்களிலும் சிறந்த அறிவாளி இலக்குவன் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இலக்குவன், தெளிந்த அறிவாளன்!

இராவணனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, சீதையின்முன் மாயமானாக மாரீசன் வந்து உலவுகிறான். அந்த மானைக் கண்டவுடனே, சீதை, அதனிடத்து மயங்கி, 'பற்றித் தருக' என்று இராமனைக் கேட்கிறாள். அந்த மானினுடைய தன்மையைக் கண்டு, அத்தகைய மான் உண்மையான மானாக இருக்க முடியாது என்று சற்றும் சிந்திக்காமல், இராமனும் அந்த மானைப் பிடிக்கும் எண்ணத்தைக் கொண்டான். அதனை யுணர்ந்த இலக்குவன், 'அத்தகைய மான் உண்மையான மானாக இருக்கமுடியாது, அது மாயமான்' என்று இராமனிடத்தில் தெரிவிக்கிறான். அதனைக் கம்பன்,

"காயம், கனகம்; மணி, கால், செவி, வால்;
பாயும் உருவோடு இது பண்பு அலவால்;
மாயம் எனல் அன்றி, மனக் கொளவே
ஏயும்? இறை மெய் அல"

என்று இலக்குவன் சொன்னதாகக் கூறுவான். இலக்குவனுடைய வாதம் மிக இயற்கையான வாதம். மானுடைய அமைப்பையும், தோற்றத்தையும் கண்டு, அது உண்மையான மானாக இருக்க முடியாதென்ற முடிவுக்கு அவன் வருகிறான்.

மாயம், மெய் அல!

அப்படித்தான் கருதுவதற்குரிய காரணங்களையும் எடுத்துக் காட்டுகிறான். " 'உடம்போ பொன்னிறமானது (காயம்—உடம்பு); கால், செவி, வால்களோ மாணிக்கமயமானவை. இவற்றோடு, பாய்கின்ற வடிவத்தோடு கூடிய இது

மானுக்குரிய பண்பைக் கொண்ட உண்மையான மானென்று சொல்ல முடியாது. 'மாயை' என்று சொல்வதல்லாமல், வேறுவிதமாக இதைக் கொள்வதற்குக் காரணமில்லை. இது உண்மையான மானன்று" என்று இலக்குவன் கூறுகிறான்.

இல்லாதன இல்லை!

இதைக் கேட்ட இராமன் இலக்குவனுக்குப் பதில் கூறுகிறான். அதனைக் கம்பன்,

"நில்லா உலகின் நிலை, நேர்மையினால்,
வல்லாரும் உணர்ந்திலர்; மன் உயிர்தாம்
பல் ஆயிரகோடி பரந்துளவால்;
இல்லாதன இல்லை —இளங் குமரா!"

என்று பாடுவான்.

ஏதோ வேதாந்தம் பேசுகிறான் இராமன் என்பது தெற்றெனத் தெரிகிறது. அப்படிப் பேசும்பொழுது இலக்குவனை 'இளங்குமரா' என்று விளிக்கிறான். அதாவது, இளமையின் காரணமாக இலக்குவன் இந்தத் தத்துவத்தை உணர்ந்து கொள்ளவில்லையென்பது தொனிப்பொருள். என்ன தத்துவம் அது? 'உலகமோ நிலையற்ற உலகம். அந்த உலகத்தின் தன்மையை அறிவில் வல்லவர்களும் முழுமையாக அறிந்திருக்கிறார்களென்று சொல்வதற்கில்லை. இவ்வுலகிலுள்ள உயிர்களும் பல்லாயிரக்கணக்கில் பரந்திருக்கின்றன. எனவே, இவ்வுலகிலில்லாதவையென்று சொல்லக்கூடியன எவையுமில்லை' என்பதுதான், இலக்குவனுக்கு இராமன் உணர்த்தப்புகும் தத்துவம்.

ஆசை கொள்ளார் யார்?

இப்படி இலக்குவனுக்குத் தத்துவத்தைக் கூறிவிட்டுச் சீதையோடு சென்று மானைக் காண்கிறான். அதைப் பார்த்து

மகிழ்கிறான். அப்பொழுதுகூட இலக்குவனை விளித்து, 'இதைப் பார். இதற்கொப்பாகக் கூடியது என்ன இருக்கும்? தனக்குத் தானே உவமையாகுவதல்லாமல், தனக்கு உவமையாகக் கூடியது வேறெதுவும் இந்த மானுக்கில்லை. இதனுடைய பற்களோ ஒளிவீசுகிற முத்துக்களைப் போலுள்ளன; பசிய புல்லின்மீது மேய்கின்ற இதனுடைய மென்மையான நாக்கோ மின்னலைப் போலிருக்கிறது; இதன் உடம்பு செம்பொன் மயமாக இருக்கிறது; இம் மான்மேல் காணப்படும் புள்ளிகளோ வெள்ளிபோல் விளங்குகின்றன' என்று கூறுகிறான். எந்தக் காரணங்களைக் கொண்டு அந்த மான் உண்மையான மானாக விருக்க முடியாது, மாயமானாகத்தா னிருக்க முடியுமென்று இலக்குவன் கூறினானோ, அதே காரணங்களைக் கூறி, இப்பொழுது இராமன் அந்த மானினுடைய அழகை வருணிக்கிறான்.

இத்துடன் அமையாமல், மேலும் இலக்குவனை விளித்து, இராமன், 'இத்தகைய மானைப் பார்த்து, அதில் ஆசை கொள்ளாத ஆண்—பெண் யாருமே இருக்க மாட்டார்கள்' என்று சொன்னதோடல்லாமல், 'ஊர்வன பறப்பன யாவும் உருகிய மனத்தையுடையவையாகி, விரிசுடர் விளக்கில் விட்டில் விழுவதுபோல விழும்' என்றும் கூறுகிறான்.

இப்படி இராமன் சொல்லியும், இலக்குவன் அமைதி பெற வில்லை. அந்த மானை நோக்கி, 'சீரியது அன்று இது' என்று சிந்தையில் தெளிகிறான். அப்படித் தெளிந்த தம்பி, 'இது கனக மானாயின், நாம் மீள்வதே மேன்மை' எனக் கூறுகிறான்.

அரக்கர் வஞ்சம்!

இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, சீதை இடையில் புகுகிறாள். இராமனைப் பார்த்து, 'விரைவாக இந்த மானைப் பிடித்துத் தருவாயானால், நாம் வனவாசம் முடிந்து நாட்டுக்குச் செல்லும்போது, இதனுடன் இனிமையாக விளையாடுவதற்கு என்னால் முடியும்' என்று கூறுகிறாள்.

உடனே இலக்குவன் சற்று விளக்கமாக,

"வெய்ய வல் அரக்கர் வஞ்சம் விரும்பினர் வினையின் செய்த
கைதவ மான் என்று, அண்ணல்! காணுதி கடையின்"
என்றான்.

முன்னர் வெறும் 'மாயம்' என்று சொன்னவன், இப்பொழுது இது 'அரக்கர் வஞ்சம்' என்று சொல்கிறான்.

தெளிதல் தேற்றாம்!

இப்படிச் சொன்ன இலக்குவனுக்கு இராமன், மேலும் பதில் சொல்கிறான்: 'நீ சொல்வதுபோல இது அரக்கருடைய மாயமாயிருக்குமானால், என்னுடைய அம்பினால் இந்த மான் இறக்கும்பொழுது, அரக்கர்களைக் கொல்வேனென்று முனிவர்களுக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதாகவும் ஆகும்; அப்படியில்லாமல், இது உண்மையான மானாக இருக்குமேயானால், இதை என்னால் பற்றிக்கொண்டு வந்துவிட முடியும். ஆக, இரண்டில் எது நடந்தாலும் தீமையில்லையே! இப்பொழுது என்ன சொல்கிறாய்?' என்று இலக்குவனைக் கேட்கிறான்.

இப்பொழுதும் இலக்குவன் விட்டபாடில்லை.

"பின் நின்றார் இனையர் என்றும் உணர்கிலம்; பிடித்த மாயம்;
என் என்றும் தெளிதல் தேற்றாம்; யாவது ஈது என்றும் ஓராம்."

என்று கூறுகிறான். .முதலில் 'மாயம்' என்று சொன்னான்' பின்னர் 'அரக்கர் வஞ்சம்' என்று சொன்னான். இப்பொழுது இன்னும் ஒரு படி மேலே சென்று, 'இந்த மானை முன்னே ஏவி விட்டு, பின்னே நிற்பவர்கள் இத்தன்மையர் என்று அறிய மாட்டோம்; அவர்கள் கொண்ட மாயை யாது என்றும் நாம் சிந்தித்துத் தெரிந்து கொள்ளவில்லை; இந்த மானும் எது என்று அறிந்தோமில்லை' என்று பேசுகிறான்.

அப்படிப் பேசிய இலக்குவனிடத்து மேலும் இராமன் கூறுவான். 'பகையுடைய அரக்கர்கள் பலரென்ற காரணத்தினாலும், அவர்கள் பயிலும் மாயம் மிகையானது என்ற

காரணத்தினுலும், அவர்களைக் கொல்வதாக நாம் கொண்ட விரதத்தை விடுவது நகைப்புக்கு இடமாகுமாதலினுல், நான் எண்ணுகிற செயல் நல்லதே' என்பது இராமனுடைய பதில்.

எண்ணிச் செய்தலின் அமைதி

இந்தப் பதில் இலக்குவனுக்குத் திருப்தியளிக்கவில்லை. எனவே, தன் அண்ணனை, 'அண்ணலே!' என்று விளித்து, 'அடுத்தவும் எண்ணிச் செய்தல், அமைதி அன்ருே?' என்று கேட்கிருன். இதில் ஒரு சிறந்த அறிவுறுத்தல் தொனிக்கிறது.

'அரக்கர்களை நாம் கொல்வதாக விரதம் பூண்டது உண்மைதான்; அப்படி அரக்கர்களைக் கொல்லப்போகும் பொழுதும், அதை எண்ணிப் பார்த்துச் செய்வதே நன்று' என்பதுதான் இலக்குவனுடைய கட்சி. இதைக் கூறிவிட்டு, அவன் மேலும் கூறுவான். 'அந்த மானை முன்னே ஏவிவிட்டுப் பல அரக்கர்கள் பின் நிற்கிருர்கள்; என்ருலும், நான் சென்று அவர்களை என்னுடைய அம்பால் கொல்வேன்; நான் சொல்வது தவருக இருந்து, மான் உண்மையான மானுக இருந்தால், நானே அதைப் பற்றிக்கொண்டு வருவேன்' என்று கூறுகிருன்.

நீயே பற்றி நல்கலை போலும்!

சீதைக்கு மான்தான் வேண்டும். அதை இராமன் பற்றிக் கொண்டு வந்து தந்தாலென்ன? இலக்குவன் பற்றிக்கொண்டு வந்து தந்தாலென்ன? ஆனுல், இங்கே விதி விளையாடுகிறது. இப்படி இலக்குவன் சொன்ன மாத்திரத்தில், சீதை சீறுகிருள். 'நாயக! நீயே பற்றி நல்கலை போலும்?' என்று கேட்கிருள். இதைக் கேட்டுச் சீதையின் புலவி நோக்கி, இராமனே அந்த மானைப் பிடித்துக்கொண்டு வருவதற்காகப் போகக் கிளம்பு கிருன். சீதையைக் காக்குமாறு இலக்குவனிடத்தில் சொல்லிப் போகிருன்.

மானைத் துரத்திக்கொண்டு போகும் இராமன், அந்த மான் தன்னை வெகுதூரம் இழுத்துக்கொண்டு போன முறைபி

விருந்தும், அது செய்த செயல்களிலிருந்தும் அது மாயமானென் பதை உணர்ந்துகொள்கிருன். அதன்மீது அவன் அம்பு தொடுக்க, மாயமானுகிய மாரீசன் அலறி வீழ்கிருன். விழும் பொழுது எட்டுத் திக்குகளுக்கும், அப்பாலும் கேட்கும்படியாக அழைத்துவிட்டுக் கீழே விழுகிருன். அப்படி அழைத்தது 'ஏ சீதா, ஏ லக்ஷ்மணு' என்ற அழைப்புத்தான்.

நான் உய்ய வந்தவன்!

அப்படி அவன் விழ்ந்த பிறகுதான், இராமன், இலக்குவன், முன்னர் எச்சரித்ததை எண்ணிப் பார்க்கிருன். அவனையும், அவன் அறிவையும் பாராட்டுகிருன். இதனைக் கம்பன்,

"வெய்யவன், தன் உருவொடு வீழ்தலும்,
'செய்யது அன்று' எனச் செப்பிய தம்பியை
'ஐயன் வல்லன், என் ஆர் உயிர் வல்லன்; நான்
உய்ய வந்தவன் வல்லன்' என்று உன்னினுன்"

என்று பாடுவான்.

இலக்குவனைக் கேட்டது ஏன்?

முன்னர் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சி, அரக்கர் மாயையைப் பற்றி இராமனைவிட இலக்குவன் நன்ருகத் தெரிந்திருந்தா னென்பதை விளக்கும். அதை நினைவில் கொண்ட இராமன், இப்பொழுது தன்முன் கொண்டுவந்து நிறுத்தப்பெற்ற தேரைப்பற்றி முதலில் அரக்கர் மாயையோ என்று ஐயப்பட்டுப் பின்னர் மாயை இல்லை என்று தெளிந்தவிடத்தும்கூட, இலக்குவனை நோக்கி, 'உன் கருத்தைத் தெரிவி' என்று கேட்கிருன்.

இந்த நிகழ்ச்சியோடு பொருத்திப் பார்க்கும் பொழுது தான், இங்கு இலக்குவனை இராமன் கேட்பதின் சிறப்பு வெளிப்படும்.

மாருதியும் மயங்கினுன்

அடுத்து, மாருதியை இராமன் ஏனிப்படிக் கேட்கிருனென்பதை நோக்கவேண்டும். இலக்குவன் அரக்கருடைய மாயையை உணர்ந்தவன். அது மாயை என்பதை முன்னரே தெரிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றவன். ஆனுல், அனுமனே அரக்கருடைய மாயையை உணர்ந்தவன்தானென்ருலும், ஒரிரு வேளைகளில் அந்த மாயையை உண்மையென்றே நம்பியவன். அதற்கு ஓர் உதாரணம் மாயா சீதைப் படலமேயாகும்.

இந்திரஜித்து, தன்னுடைய பெரும்போர் பயனற்றுப் போக, தந்திரங்களில் இறங்குகிருன். அப்படி அவன் செய்த ஒன்று, ஒரு மாயா சீதையைப் படைத்து, அந்த மாயா சீதையை அனுமன் முன்னுல் வெட்டி வீழ்த்துவதாகும். இந்திரஜித்தினுடைய நோக்கமென்னவென்ருல் சீதை கொல்லப்பட்டுவிடுவாளேயானுல் இராம-இலக்குவர் துயரத்தினுல் தங்களுடைய வலிவை இழந்துவிடுவார்கள்; ஆகையினுலே அவர்களை எளிதாக வென்றுவிடலாமென்பது ஒன்று. மேலும், சீதையை மீட்பதற்காகத்தான், அவர்கள் இந்தப் போரைத் தொடங்கியிருக்கிருர்கள்; எந்தச் சீதையை மீட்பதற்காக அவர்கள் இந்தப் போரைத் தொடங்கினுர்களோ, அதே சீதை கொல்லப் படுவாளேயானுல், போரை மேலும் நடத்துவதற்கு அவர்களுக்கு அவசியமில்லாமல் போய்விடும். இரண்டிலும் இந்திரஜித்து போட்ட கணக்குத் தப்புக் கணக்குத்தான்.

காரணம், பலமுறை எடுத்துக் காட்டியதுபோல, சீதையை இராவணன் வஞ்சகமாகத் தூக்கிக்கொண்டு போவதற்கு முன்னரே, அரக்கர்களை வேரறுப்பதாக முனிவர்களுக்குத் தண்டகாரண்யத்தில் இராமன் வாக்குக் கொடுத்துவிட்டான். ஆகையினுல், சீதையை இந்திரஜித்து கொன்ற பிறகும்கூட, இராம-இலக்குவர் அரக்கரை அழிப்பதற்குக் காரணமிருக்கிறது. இதையறியாத இந்திரஜித்து மாயா சீதையைக் கொன்ருன்.

ஆனுல், இதனைக் கண்ட அனுமன் இந்திரஜித்துக் கொன்றது அசோகவனத்தில் சிறையிருக்கும் உண்மையான

சீதையையே என்று நம்பி, நொந்து, அளவற்ற துயரில் மூழ்கி, அப்படியே இராமனையும் அந்த நிலைக்கு ஆக்கிவிட்டான்.

திசை திருப்பும் போரியல்

அதுமாத்திரமன்று, மாயா சீதையைக் கொன்ற இந்திரஜித்து, அயோத்திக்குச் சென்று, அங்கிருக்கிற இராமனுடைய தம்பிமார்களையும், தாய்மார்களையும் கொல்வதாகப் போக்குக் காட்டி, ஆகாய மார்க்கமாக வடதிசை நோக்கிப் போனான். இங்கும் அவனுடைய நோக்கம் இராம-இலக்குவருடைய கவனத்தைத் திசைதிருப்பிவிட்டுத் தான் நிகும்பலையில் யாகம் செய்ய வேண்டுமென்பதுதான். இந்த இந்திரஜித்தின் மாயத்தையும், அப்பொழுது அனுமன் புரிந்துகொள்ளவில்லை. இந்திரஜித்து உண்மையிலேயே சீதையைக் கொன்றுவிட்டு, அயோத்திக்குச் சென்றானென்று நம்பி, அப்படியே இராமனிடத்தில் சொல்லவும் செய்கிறான்.

அனுமனைக் கேட்டதன் பொருத்தம்

இப்படியெல்லாம் அரக்கருடைய மாயத்தினால் மயங்கியவன் அனுமன். ஆகவே, அந்த அனுமனையும் மாதலி கொண்டுவந்த தேர் மாயத்தேராயிருக்குமோ என்று கேட்பது பொருத்தமேயாகும். இவ்வடிப்படையில் இலக்குவனைக் கேட்பதற்கும், அனுமனைக் கேட்பதற்கும் வேறுபாடிருக்கிறது. இருந்தபோதிலும், 'மாயை' என்ற கருத்தில் இருவரைக் கேட்பதிலும் பொருத்தமிருக்கிறது. இதற்கெல்லாம் மேலாக அனுமனைக் கேட்பதில் வேறொரு அற்புதமான பொருத்தமுமிருக்கிறது.

முதல் நாள் போரிலேயே இராவணன் போர்க்களத்திற்கு வந்துவிடுகிறான். அவன் ஆடம்பரமாகத் தன்னுடைய தேரில் ஏறிப் போர்க்களத்திற்கு வருகிறான். இராவணன் போர்க்களத்திற்கு வந்துவிட்டானென்பதைக் கேட்ட பிறகுதான், இராமனும் மகிழ்ந்து, போர்க்கோலம் பூண்டு, களத்திற்கு வருகிறான்,

ஏறு, என் தோள்மேல்!

இராவணனோ தேரின்மேலேறி நின்று போர் செய்ய வந்திருக்கிறான். இராமனோ தரையில் நடந்து போருக்குப் போகிறான். இந்த நிலையில் அனுமன் என்ன செய்தானென்பதை இரண்டு அருமையான பாடல்களில் கம்பன் விளக்குவான்:

"தேரில் போர் அரக்கன் செல, சேவகன் தனியே
பாரில் செல்கின்ற வறுமையை நோக்கினன், பரிந்தான்,
'சீரில் செல்கின்றது இல்லை இச் செரு' எனும் திறத்தால்,
வாரின் பெய் கழல் மாருதி கதுமென வந்தான்."

"நூறு பத்துடை நொறில் பரித் தேரின்மேல் நுன்முன்
மாறு இல் பேர் அரக்கன் பொர, நிலத்து நீ மலைதல்
வேறு காட்டும், ஓர் வெறுமையை; மெல்லிய எனினும்,
ஏறு நீ, ஐய! என்னுடைத் தோளின்மேல்' என்றான்."

அதாவது, இராவணன் தேரில் வருவதையும், இராமன் தனியே பூமியில் நடப்பதையும் அனுமன் நோக்கினான். இராமனிடத்து அன்பு கொண்டான். இப்படிச் சமமில்லாமல் இவ்விருவரும் நின்று போர் புரிவது சிறப்பாகாதென்ற கருத்தினால், விரைவாக இராமனைச் சேர்ந்தான்.

அப்படிச் சேர்ந்த அனுமன், இராமனைப் பார்த்து, 'இந்தப் போருக்கு வந்திருக்கும் இராவணன் ஆயிரம் குதிரைகளைக் கொண்ட தேரின் மேலிருந்து உன் முன்னால் போர் செய்ய, நீ தரையில் நின்று போர் செய்வது, ஏதோ நீ எளியவனென்று எண்ணும்படியாகவிருக்கும். ஆகையினால், நான் மெலியவனா யிருந்தாலும், என்னுடைய தோளின்மேல் ஏறிக்கொள்க' என்று வேண்டிக்கொண்டான்.

இப்படி அனுமன் வேண்டிக் கொண்டதை 'நன்று, நன்று, என்று இராமன் ஏற்றுக்கொள்ள, அனுமனுடைய தோளின் மேல் ஏறிக்கொண்டு இராவணனோடு இராமன் போர் செய்தான்,

தேரும், திண்தோளும்

இராமனுக்குத் தேரில்லாத பொழுது அவனைத் தன் தோளி லேற்றிக் கொண்டவன் அனுமன். இப்பொழுதும் இராவணன் தேர் ஏறி இராமனுடன் போர் செய்ய வந்திருக்கிறான். முறைப்படி அனுமனுடைய தோளிலேறிக் கொண்டுதான் இராமன், இராவணனோடு போர் செய்யவேண்டும். ஆனால், இப்பொழுதோ, தேவர்களுடைய விருப்பப்படி, தேவேந்திர னுடைய தேரை மாதலி திடீரென்று கொண்டுவந்திருக்கிறான். இன்று தேவேந்திரனுடைய தேர் வந்திருக்கிறது என்பதற்காக, உடனே அதிலேறிக் கொள்வது, முன்னர் அனுமன் செய்த பேருதவியை மதிக்காததாகவும், அலட்சியப்படுத்தியதாகவும் ஆகும். ஆகவேதான், இப்பொழுது இந்த இந்திரனுடைய தேரைக் கொண்டு வந்து அதில் ஏறிக்கொள்ளுமாறு மாதலி இராமனைக் கேட்டபொழுது, இராமன் அனுமனைப் பார்த்து 'உன்னுடைய கருத்து என்ன?' என்று கேட்கிறான்.

இராமனுடைய கேள்வியில் அமைந்திருக்கும் சொற்களை நோக்கினால், வேறுவிதமாகவும் இதனையணுகலாம். 'இது மாயம்' என்ற ஐயம் நீங்கிய பிறகல்லவா இராமன் இக்கேள்வியைக் கேட்கிறான்? ஆகையால், 'இது மாயமா, அல்லவா என்பதுபற்றி உன் கருத்தைக் கூறு' என்று இராமன் அனுமனைக் கேட்டானென்று கொண்டால், பொருள் சிறக்காது. அதற்கு மாறாக, 'நான் தரையில் நின்றுகொண்டு, தேரிலேறி வந்திருந்த இராவணனோடு போரிடச் சென்றபோது, அன்று நீ என்னை உன் தோள்களின்மேல் ஏற்றிக் கொண்டாய்! இப்போது இந்திரனுடைய தேர் வந்திருக்கிறது. அதில் நான் ஏறிக்கொள்ளலாமா?' என்று அனுமனுடைய சம்மதத்தைக் கேட்பதுபோல், இக்கேள்வி அமைந்திருக்கிறதென்று கொண்டால், பொருள் எவ்வளவோ சிறக்கும்.

இராமனுடைய இந்தச் செயல் பண்பின் உச்சமாகவும், நாகரிகத்தின் சிகரமாகவும் இருப்பதை நாம் காண்கிறோம்,

V. இலக்குவனும் பரதனும்

சிங்கக் குட்டியும் நாய்க் குட்டியும்

இன்னொரு நிகழ்ச்சியையும் நாம் நோக்குவோம். இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டுமென்றும், பரதன் நாட்டையாள வேண்டுமென்றும் கைகேயி தசரதனிடம் வரம் பெற்றுவிட்டா ளென்பதைக் கேட்டான் இளையோனாகிய இலக்குவன். கேட்ட மாத்திரத்தில் யாவராலும் மூட்டாத காலக்கனைத்தீ என மூண்டு எழுந்தான்! இராமனுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டைப் பரதன் ஆளக் கைகேயி வரம் பெற்றுவிட்டாளென்பதை எவ்வளவு கொடுமையாக இலக்குவன் கருதினானென்பதைக் கம்பன்,

> "'சிங்கக் குருளைக்கு இடு தீம் சுவை ஊனை, நாயின்
> வெங்கண் சிறு குட்டனை ஊட்ட விரும்பினாளே?
> நங்கைக்கு அறிவின் திறம்! நன்று, இது!' என்னா,
> கங்கைக்கு இறைவன் கடகக் கை புடைத்து நக்கான்."

என்று பாடுவான்.

இராமனைச் சிங்கக் குட்டியென்றும், பரதனைக் கொடிய கண்களையும், இழிவையுமுடைய நாய்க் குட்டியென்றும் இங்கே இலக்குவன் குறிப்பிடுவான். இராமனிடத்து இலக்கு வனுக்குள்ள ஈடிணையற்ற பாசம், பரதனை இப்படிக் கேவல மாகக் குறிப்பிட, அவனைச் செய்கிறது. கைகேயி தசரதனிடத் தில் வரம் கேட்ட சமயம் பரதன் அயோத்தியிலில்லை; கேகய நாட்டுக்குச் சென்றுவிட்டான். ஆக, கைகேயி தசரதனிடம் வரம் கேட்டதற்கும், பரதனுக்கும் சம்பந்தமில்லை. எனவே, பரதன் குற்றமுள்ளவன் என்று சொல்வதற்கு எந்தக் காரணமும் இலக்குவனுக்கில்லை.

அதுவல்லாமல், இராமனும், பரதனும் இலக்குவனுக்குச் சகோதரர்களே. இராமனுக்கு அடுத்தவன் பரதன் என்பதைத் தவிர இராமனுக்கும் பரதனுக்குமிடைய இலக்குவன் வேறுபாடு

கற்பிப்பதற்கு நியாயமேயில்லை. அப்படியிருந்துங்கூட, இராமனுக்குக் கிடைக்கவேண்டிய அரசைத் தசரதனிடமிருந்து வரமாகப் பரதனுக்காகக் கைகேயி பெற்றுவிட்டாளென்பதை இலக்குவனுல் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதன் காரணமாகவே, இராமனைச் சிங்கக்குட்டியென்றும், பரதனைக் கொடிய கண்களையும், சிறுமையுமுடைய நாய்க்குட்டியென்றும் கூறுகிறுன். பரதன் சம்பந்தப்பட்ட வரையில் இத்தகைய இழிசொல் அபவாதமேயாகும்.

படைகொடு வந்தான்!

பின்னர், தசரத மரணத்திற்குப் பிறகு, கேகய நாட்டிலிருந்து அயோத்திக்குத் திரும்பிய பரதன், கானகம் சென்று, இராமனை அயோத்திக்குத் திரும்பக் கொணர்ந்து அரசாளச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு, சுற்ருரும், படைகளும் சூழக் கானகத்திற்குச் செல்கிறுன்.

படைகள் வருவதன் காரணமாக மேலெழுந்த புழுதித் திரளும், குதிரைகளும், தேர்களும், யானைகளும் எழுப்புகிற முழக்கமும், காலாட்படைகளின் பேரொலியும், பெரிய, வலிய சேனையொன்று வருவதை இலக்குவனுக்கு உணர்த்தின. அந்த அளவில் இலக்குவன் ஒரு நெடிய குன்றின் மீதேறி வருகின்ற படையைக் கண்டான். கண்டமாத்திரத்தில் அவன் என்ன முடிவுக்கு வந்துவிட்டானென்பதைக் கம்பன் அடியிற் கண்டவாறு கூறுவான்:

"'பரதன், இப் படைகொடு, பார் கொண்டவன், மறம்
கருதி, உள் கிடந்தது ஓர் கறுவு காதலால்,
விரதம் உற்று இருந்தவன்மேல் வந்தான்; இது
சரதம்; மற்று இலது' எனத் தழங்கு சீற்றத்தான்."

இதன் பொருள் என்னவென்ருல், 'பூமி முழுவதையும் கைக்கொண்டவனுகிய பரதன் அதைத் தானே அரசாள வேண்டுமென்ற பேராசையினுல் வனத்தில் விரதத்தைக் கைக்

கொண்டுள்ள இராமன்மேல் போருக்கு வந்திருக்கிறுன்; இது உண்மை; இது தவிர வேறெதுவுமில்லை' என்பதுதான்.

ஆத்திரப் பேச்சு

இங்கும் இலக்குவன் அவசரத்திஞலும், ஆத்திரத்திஞலும் தகாத முடிவுக்கு வந்துவிடுகிறுன். பரதனைப்பற்றி மிகக் கேவலமாக மனத்தில் எண்ணுகிறுன். பரதன் கானகம் வந்ததை 'மறம் கருதி' என்று குறிப்பிகிறுன். அவன் மனத்திலே ஓர் 'கறுவு காதல்' கிடந்தது என்று குறிப்பிடுகிறுன். 'கறுவு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு, 'சினம்', 'மனவைரம்', அதாவது, 'விரோதம்', 'பகைமை' என்பது பொருள்.

இங்கு 'இராமனிடத்துப் பரதனுக்கு மனத்தில் சினமுண்டு, பகைமையுண்டு. அந்தப் பகைமையை மனத்திற்கொண்டுதான் இராமன்மேல் போர் தொடுக்க வந்திருக்கிறுன் பரதன்' என்ற முடிவுக்கு இலக்குவன் வருகிறுன்.

இருமையும் இழந்தவன்

பரதன் சம்பந்தப்பட்டவரையில் இதைவிட ஒவ்வாத ஒரு குற்றச்சாட்டை யாரும் சுமத்திவிட முடியாது. பரதன் அத்தகையவன்! இப்படிச் சீற்றம்கொண்ட இலக்குவன், இராமனிடம் வந்து, 'உன்னை வெல்லப் பெரும் சேனையுடன் உண்மையில் பரதன் வந்திருக்கிறுன்' என்று சொல்லிவிட்டு, போர்க்கோலம் பூண்டு, வீரஉரை பகர்கிறுன். அப்படி இலக்குவன் சொன்னவற்றிலொன்று,

" 'இருமையும் இழந்த அப் பரதன் ஏந்து தோள்
பருமையும், அன்னவன் படைத்த சேனையின்
பெருமையும், நின் ஒரு பின்பு வந்த என்
ஒருமையும், கண்டு, இனி உவத்தி, உள்ளம் நீ"

என்பது.

இப்பாடலில் பரதனை, 'இருமையும் இழந்தவன்' என்று இலக்குவன் குறிப்பிடுகிறான். இலக்குவன் செய்யப் போகும் போரில், பரதன் நிச்சயமாக மாளப்போகிறானென்பதில் இலக்குவனுக்குச் சந்தேகமில்லை. அதன் காரணமாக, இம்மை மறுமையாகிய இரண்டையும் இழக்கப் போகிறான் என்கிறான்.

மறுமையை இழக்கப்போவது எதன் காரணமாகவென்றால், தவம் செய்வதற்காக வனத்திற்குச் சென்றிருந்த அண்ணன் மேல் அரசின் மேலுள்ள பேராசையின் காரணமாகப் போர் தொடுத்தலால்தான். அப்படிச் சொல்லும்பொழுதே, தான் இராமனுக்குப் பின் பிறந்தவனென்பதையும், அதன் காரணமாகத் தான் பெற்றிருக்கும் ஒப்பற்ற சக்தியையும் அவன் சுட்டிக்காட்டத் தவறவில்லை. 'நின் ஒரு பின்பு வந்த என் ஒருமை' என்ற சொற்கள் இதனைக் குறித்து நிற்கும்' இருமையும் இழந்த பரதன் என்று சொல்வதோடு அமையாமல், இலக்குவன் மேலும் பேசுகிறான் :

" ஒரு மகன் காதலின் உவகை நோய் செய்த
பெருமகன் ஏவலின் பரதன் தான் பெறும்
இரு நிலம் ஆள்கை விட்டு, இன்று, என் ஏவலால்
அரு நரகு ஆள்வது காண்டி—ஆழியாய்!"

தமையனுக்குத் துரோகம் செய்ய வந்தவன் என்று பரதனை இலக்குவன் கருதியதனால் அவன், 'அரு நரகு ஆள்வது காண்டி' என்று கூறுவான்.

பரதனைச் சற்றும் தெரியாத ஒரு கீழ்மகன்கூட இவ்வளவு கேவலமாகத் திட்டமாட்டான். என்றாலும், அவனுடைய தம்பியாகிய இலக்குவன், இராமனிடத்துக் கொண்டிருந்த பாசத்தின் காரணமாக, இப்படியெல்லாம் திட்டிவிட்டான். ஆனால், உண்மையில், பரதன் இம்மாதிரியான எந்தத் திட்டுக்கும் உரியவனல்லன்.

தரும தேவன்!

இலக்குவனுடைய கடும் சீற்றத்தையும், அவன் புகன்ற கொடிய சொற்களையும் கேட்ட இராமன், இலக்குவனுக்குச்

சமாதானம் சொல்கிறன். இலக்குவனுடைய வீரத்தைப் பாராட்டியதோடு, 'பரதனைப் பற்றி இப்படியெல்லாம் பேசலாமா? அவன் இங்கே வந்தது என்னிடத்தில் வைத்திருக்கும் அன்பின் காரணமாகத்தானென்று, ஏன் எண்ணிப் பார்க்கக் கூடாது?' என்றும் கேட்கிறன். இத்துடன் அமையாமல், பரதனைப் புகழ்ந்து,

"சேண் உயர் தருமத்தின் தேவை, செம்மையின்
ஆணியை, அன்னது நினைக்கல் ஆகுமோ?
பூண் இயல் மொய்ம்பினய்! போந்தது ஈண்டு, எனைக்
காணிய; நீ இது பின்னும் காண்டியால்"

என்றும் கூறுவான்.

நோக்குக இளையோய்!

பின்னர்ப் பரதன் அருகிலே வந்தபொழுது, அவனுடைய உருவத்தை முழுமையாக இராமன் பார்க்கிறன். அவனுடைய தவக்கோலத்தையும் நோக்குகிறன். அப்படிப் பார்த்த உடனேயே இராமனுடைய நெஞ்சம் நெகிழ்ந்துவிடுகிறது. அதே சமயத்தில், பரதனைப்பற்றி இலக்குவன் கூறிய கொடிய சொற்கள் அவன் நெஞ்சில் நிற்கவே செய்கின்றன. ஆகவே, அவன் பரதனுடைய மேன்மையை இலக்குவனுக்குக் காட்டி,

"......................................
'ஆர்ப்பு உறு வரி சிலை இளைய ஐய! நீ,
தேர்ப் பெருந் தானையால் பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு'

என்று கூறுகிறன்.

இளவல் நின்ற நிலை!

அப்பொழுது இலக்குவனுடைய நிலை என்னவாயிற்று என்பதைக் கம்பன்,

"எல் ஒடுங்கிய முகத்து இளவல் நின்றனன்—
மல் ஒடுங்கிய புயத்தவனை வைது எழும்
சொல்லொடும் சினத்தொடும் உணர்வு சோர்தர,
வில்லொடும் கண்ண நீர் நிலத்து வீழவே."

என்று விளக்குவான்.

கம்பனுடைய இந்தப் பாட்டின் அருமை கூர்ந்து நோக்கத் தக்கது. இலக்குவன், முன்னர்ப் பரதனைப் பற்றிக் கொடுமை யாகப் பேசியதற்காக, இராமன் இலக்குவனிடன் சற்றுக் கடுமையாகவே பேசுகிறான். இலக்குவனும் தான் பரதனைப் பற்றி எண்ணியதும், பேசியதும், சற்றும் நியாயமற்றது என்பதை முழுமையாக உணர்ந்து கொள்கிறான். அதன் காரணமாகக் கழிவிரக்கமும் கொள்கிறான்.

ஆனால், அதை வார்த்தையினால் :வெளிப்படுத்தவில்லை. அதற்கு மாறாக, என்ன நடந்ததென்பதைக் கம்பன் தனக்கேயுரிய திறமையோடு சொல்வான். 'எல்லொடுங்கிய முகத்துடன் இளவல் நின்றான்' என்று அதனைக் குறிப்பிடுவான்.

முன்னர் வீரத்தோடு பேசும்பொழுது அவனுடைய முகத்திலிருந்த ஒளி, பொலிவு அனைத்தும் இப்பொழுது ஒடுங்கி விடுகின்றன. அத்தகைய முகத்தினனாக இலக்குவன் நிற்கிறான். முன்னர், பரதனைப்பற்றித் தான் சொன்ன, கொண்ட, 'சொல்லொடும் சினத்தொடும் உணர்வு' சோர்ந்தவனாக இலக்குவன் ஆகிவிடுகிறான். முகத்திலே பொலிவு ஒடுங்குகிறது. முன்னர்ப் பகர்ந்த கடும் சொல்லும், அதனால் தோன்றிய சினமும், அதற்கான உணர்வும் சோர்ந்துவிடுகின்றன.

இந்த நிலையில் இரண்டு செயல்கள் நடைபெறுகின்றன. அதாவது, இரண்டு நிலத்தில் விழுகின்றன. ஒன்று, இலக்குவன் கண்களிலிருந்து நீர்; மற்றொன்று, இலக்குவன் தோளிலிருந்த வில். இவையிரண்டும் ஒருசேர விழுந்துவிடுகின்றன.

இலக்குவனுடைய கழிவிரக்கத்தை இதைவிடச் சிறப்பாக வெளிப்படுத்திவிட முடியாது. இலக்குவன் வாயினல் என்ன பேசியிருந்தாலும் முன்னர்ப் பரதனைப்பற்றி அவன் பேசிய கடுஞ்சொல்லுக்குப் பிராயச்சித்தமாக ஆகிவிடாது. அதற்கு மாருக, இலக்குவனுடைய மனநிலை என்னவாயிற்றென்பதை இவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுவதன் மூலமாக இலக்குவனுடைய உண்மையான கழிவிரக்கத்தை அற்புதமாகக் கவிஞன் எடுத்துக் காட்டிவிடுகிருன்.

பரதனைப்பற்றி இலக்குவன் இழிவாகப் பேசியதற்கெல்லாம், இலக்குவன் இப்படிக் காட்டிய கழிவிரக்கம் போதாதென்று, கம்பன் கருதினுன் போலும். அதற்காகவே, வால்மீகி சொல்லாத ஒரு நிகழ்ச்சியைக் கற்பனை செய்கிருன்.

இறப்பும் காணேன்!

மாயா சீதையை வெட்டிவிட்டு, அயோத்தி சென்று, இராமனுடைய தம்பிமாரையும், தாயரையும், பிறரையும் கொன்று வீழ்த்துவேனென்று இந்திரஜித்து ஆகாய மார்க்கமாகச் செல்வதுபோலப் போக்குக் காட்டினுனென்று கம்பன் பாடுகிருன் என்பதை முன்னர்க் கண்டோம். சீதையை இந்திரஜித்து உண்மையிலேயே கொன்று விட்டானென்றும், அயோத்திக்கு இந்திரஜித்து ஆகாய மார்க்கமாகச் சென்று விட்டானென்றும் அனுமன் நம்பிவிட்டான். அதை இராமனிடத்திலும் சொல்லிவிட்டான். இராமனும் இதை உண்மையென்று நம்பி பெருந் துக்கத்திலாழ்ந்துவிடுகிருன்.

தன்னையும் தன் விதியையும் நொந்துகொள்கிருன்.

"நினைவதன் முன்னம் செல்லும் மானத்தின் நெடிது போனுன்,
வினை ஒரு கணத்தின் முற்றி மீள்கின்ருன்; வினையேன் வந்த
மனை பொடி பட்டது, அங்கு; மாண்டது, தாரம் ஈண்டும்;
எனையன தொடரும் என்பது உணர்கிலேன்! இறப்பும் காணேன்!"

என்று இராமன் பேசியதாகக் கம்பன் கூறுவான்.

'நினைவதன் முன்னே செல்லும் மானத்தில் இந்திரஜித்து சென்றதின் காரணமாக ஒரு கணத்தில் அயோத்தி பொடி பட்டுப் போகும்; இங்கோ, மனைவியாகிய சீதை மாண்டு போனாள்; வேறு என்ன வினை என்னைத் தொடரும் என்பதை நான் உணர்கிலேன்; எனக்கு மரணமும் வரமாட்டேனென் கிறதே' என்றெல்லாம் நொந்து கொள்கிறான்.

'இந்திரஜித்து அயோத்திக்குச் சென்று நாகபாசத்தையும், பிரம்மாத்திரத்தையும் பிரயோகிப்பானேயானால், அயோத்தி யிலுள்ளவர்களை உயிர்ப்பிக்கக் கருடனும் அங்கு வர முடியாதே? மருத்து மலையைக் கொண்டுவர மாருதியும் அங்கிருக்க மாட்டானே? அவர்களுக்கு யார் உயிர் கொடுப்பர்?' என்றெல்லாம் புலம்புகிறான்.

இத்தகைய புலம்பலுக்கிடையே, இராமன் அயோத்திக்கு விரைந்து செல்ல, அதாவது ஆகாய மார்க்கமாக இந்திர ஜித்தைத் தொடர்ந்தோ, அவனுக்கு முன்னோ, அயோத்தி செல்ல—மார்க்கமுண்டா என்று கேட்கிறான். அக்கணத்தில் அனுமன் தன் தோளில் அவர்களை ஏறிக் கொள்ளுமாறும், காற்றின் வேகமும் பின்னடைய இக்கணத்திலேயே அயோத்தி மூதூர் எய்துவேன் என்றும் கூறுகிறான்.

யாரோ பரதனும்?

இராமனுடைய கேள்விக்குப் பின்னாலும், அனுமனுடைய இந்த வேண்டுகோளுக்கு முன்னாலும், கம்பன் இலக்குவனைப் பேசவைக்கிறான். இலக்குவன் பேசுவது பரதனைப் பற்றித் தான். அப்படி அவன் என்ன சொன்னானென்பதைக் கம்பன், இரண்டு அழகிய பாடல்களில் எடுத்துக் காட்டுவான்:

"அவ் இடத்து, இளவல், 'ஐய! பரதனை அமரின் ஆர்க்க,
எவ் விடற்கு உரியான் போன இந்திரசித்தே அன்று;
தெவ் இடத்து அமையின், மும்மை உலகமும் தீந்து அருவோ?
வெவ் இடர்க் கடலின் வைகல்; கேள்' என,
விளம்பலுற்றான்."

" 'தீக் கொண்ட வஞ்சன் வீச, திசைமுகன் பாசம் தீண்ட,
வீக் கொண்டு வீழ, யானே பரதனும்? வெய்ய கூற்றைக்
கூய்க்கொண்டு, குத்துண்டு அன்னான் குலத்தொடு
நிலத்தன் ஆதல்,
போய்க் கண்டு கோடி அன்றோ?' என்றனன், புழுங்கு
கின்றான்."

முதல் பாடலின் பொருள் என்னவென்றால், 'பரதனைப் போரில் வெல்வதற்கு இந்திரஜித்தால் முடியாது என்பதோடல்லாமல், மூன்று உலகங்களாலும் முடியாதே! பகைப்புலத்துப் பொருந்துவதானால் மூவுலகமும் பரதனுக்கு முன்னர்த் தீர்ந்துவிடுமே! அப்படியிருக்க, நீ ஏன் இடர்க்கடலில் மூழ்குகிறாய்?' என்று இராமனைக் கேட்கிறான். இந்தப் பாடலில் பரதனுடைய வீரம் பொதுவாகவே இலக்குவனால் பேசப்படுகிறது.

ஆனால், அடுத்த பாடலிலே தன் வீரத்தோடு பரதனுடைய வீரத்தை ஒப்பிட்டு இலக்குவன் பேசுகிறான். இரண்டாம் பாட்டின் முதலடியில் காணப்படும் 'தீக் கொண்ட வஞ்சன், என்பது இந்திரஜித்தைக் குறிப்பிடும். இப்பொழுது எதை இலக்குவன் நினைவில் கொண்டுவருகிறானென்றால், இந்திரஜித்து வீசிய பிரம்மாத்திரத்தினால் தான் மரணம் அடைந்து வீழ்ந்ததையே ஆகும். அதை நினைவிற் கொண்டுவந்து, 'இந்திரஜித்தினுடைய பிரம்மாத்திரத்தினால் வீழ்ந்துவிடுவதற்குப் பரதனும் நானோ?' என்று கேட்கிறான். அதாவது, தன்னைவிட வீரத்தில் பரதன் சிறந்தவன் என்பதை வெளிப்படையாக இலக்குவன் குறிப்பிடுகிறான்.

'இந்திரஜித்து வீசிய பிரம்மாத்திரத்தினால் நான் மாண்டு கிடந்தேன். ஆனால், அப்படியெல்லாம் இந்திரஜித்தினால் பரதனைக் கொன்றுவிட முடியாது' என்று கூறுகிறான். கூறிவிட்டு, மேலும் சொல்வான். 'பரதன் போர் செய்வதனால்' இந்திரஜித்து கூற்றைக் கூவிக்கொண்டு, குத்துண்டு, தன்னுடைய சுற்றத்தோடு நிலத்தில் உயிர் துறந்து வீழ்ந்திருப்பதை நீ போய்க் கண்டுகொள்ளப் போகிறாய்' என்று மனம் புழுங்கியவனாகக் கூறுகிறான்.

இளையவன் பண்பு!

இலக்குவனுடைய இந்தக் கூற்றில் இரண்டு சிறப்புகளிருக்கின்றன. ஒன்று, இராமனைத் தேற்றுவது; மற்றொன்று, முன்னர்ப் பரதனைத் தான் கேவலமாகப் பேசியதற்குப் பிராயச்சித்தம் செய்வதுபோல, இப்பொழுது அவனுடைய வீரத்தைப் புகழ்வது.

அயோத்திக்குச் சென்று நாகபாசத்தையும், பிரம்மாத்திரத்தையும் இந்திரஜித்து வீசினனென்றால், அவற்றால் கட்டுண்டவர்களைக் காப்பதற்குக் கருடனும் வரமுடியாதே. மருத்து மலையைக் கொண்டு வருவதற்கு அனுமனும் இருக்க மாட்டானே என்று இராமன் வருந்தினனல்லவா? அத்தகைய இராமனைத் தேற்றுவதற்காக இலக்குவன் இப்படிக் கூறுகிறான்.

நாகபாசத்தினலும், பிரம்மாத்திரத்தினலும் அடிபட்டவன் இலக்குவன். பரதன் இலக்குவனைவிட வீரத்தில் சிறந்தவன். ஆதலினல், அவன் இப்படியெல்லாம் கட்டுப்பட மாட்டான். 'ஆகையினல், நீ வருந்த வேண்டாம்' என்று இராமனைத் தேற்றுவது ஒன்று.

அடுத்தது, கானகத்திற்கு வந்து இராமனை நாட்டுக்கு அழைத்துச் செல்வதற்காக வந்த பரதன், இராமன்மேல் போர் தொடுப்பதற்காக வந்திருக்கிறான் என்று தவறாக எண்ணிப் பரதனைப்பற்றி எவ்வளவு கேவலமாக இலக்குவன் முன்னர்ப் பேசினன்? அப்பொழுது பரதனைத் தான் போரிலே அழித்து அருநரகு ஆளச்செய்வேன் என்றல்லவா இலக்குவன் கூறினன்! அந்தக் கூற்றின்படி பரதனுடைய வீரத்தைப் பழித்தும், தன் வீரத்தை உயர்த்தியும் அவன் பேசினன் அல்லவா? அவற்றுக்கெல்லாம் இப்பொழுது பிராயச்சித்தம் செய்வதுபோல, தன் வீரத்தைப் பரதனுடைய வீரத்தோடு ஒப்பிட்டு, பரதனுடைய வீரத்திற்குமுன் தன்னுடைய வீரம் எம்மாத்திரம் என்று கூறிப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் நிலைநாட்டிவிடுகிறான்.

VI. குகனும் பரதனும்

பரதன் இவ்வாருன பழிக்கு ஆளானது இலக்குவனிடத்தில் மாத்திரமன்று. கானகத்தில் இராமன் வந்திருப்பதைக் கேட்ட குகன் அவனைச் சென்று காண்கிருன். குகனுடைய அன்பை இராமன் பெரிதும் பாராட்டுகிருன். அவனிடத்து 'நான் இன்றிரவு இங்குத் தங்கி நாளை கங்கையைக் கடக்கவேண்டும். ஆகையினுல், நாளை நாவாயோடு வந்து சேர்' என்று கூறுகிருன்.

இராமனைத் தவக்கோலத்தில் கண்ட குகனுக்குத் துக்கம் தாளவில்லை. திருநகரான அயோத்தியைவிட்டுக் கானகத்திற்கு வந்த காரணமென்னவென்று குகன் வினவ, இளையோனுகிய இலக்குவன் நடந்தவையனைத்தையும் பகர்கின்ருன். அதைக் கேட்டு 'இரு கண் நீர் அருவி சோர' குகனும் ஆண்டு இருந்தான்.

நடந்தவற்றை இலக்குவன் சொல்லும்பொழுது, அவன் அவற்றைப் பற்றி என்ன நினைத்தானே அப்படித்தான் சொல்லியிருக்க வேண்டும். பரதனைப் பற்றி இலக்குவன் என்ன எண்ணம் கொண்டிருந்தானென்பதை முன்னரே பார்த்தோம். அவ்வெண்ணம் தொனிக்குமாறுதான் இலக்குவன் நிகழ்ந்தவற்றைக் குகனிடத்தில் சொல்லிருப்பான். ஆகையால் பரதனைப்பற்றிக் குகனது உள்ளத்தில் ஒருவிதமான எண்ணம் உண்டாகித்தானிருக்க வேண்டும்.

குகனின் சீற்றம்!

என்றபோதிலும், கங்கையைக் கடந்து வனத்துக்குள் இராமன் புகும்பொழுது, குகனும் உடன் வருகிறேன் என்று கூறுகிருன். அப்படி அவன் வரவேண்டாமென்பதற்காகப் பல கார்ரணங்களை இராமன் எடுத்துக் கூறுவான். அவற்றிலொன்று,

"அங்கு உள கிளை காவற்கு அமைதியின் உளன், உம்பி;
இங்கு உள கிளை காவற்கு யார் உளர்? உரை செய்யாய்"

என்பது. இப்படிச் சொல்லும்பொழுது 'பரதனை 'உன்னுடைய தம்பி' என்று குகனிடத்தில் சொல்லிவிடுகிருன். அதுமாத்திர மல்லாமல், இப்படிச் சொல்கின்ற முறையில், இராமனிடத்தில் குகனுக்கு எத்துணையன்பு உண்டோ, அத்துணை அன்பு பரதனுக்கும் உள்ளதென்பதைச் சொல்லாமல் சொல்லிவிடு கிருன். எப்படியிருந்த போதிலும், குகனுடைய மனம் பரிபூரணமாகப் பரதனை யுணர்ந்து கொண்டிருந்தது என்று சொல்லிவிட முடியாது.

இந்நிலையில், தசரதனுடைய மரணத்திற்குப்பின், கேகய நாட்டிலிருந்து அயோத்திக்கு வந்த பரதன், இராமனைக் கானகத்திலிருந்து அயோத்திக்கு உழைத்துவந்து அரசாளச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு, பரிவாரங்கள் சூழக் கானகத்திற்குச் செல்கிருன். கங்கையின் தென் கரையில் நின்றிருந்த குகன் சேனையோடு பரதன் வருவதைக் காண் கிருன். அப்படிப் பரதன் படையுடன் வந்தது இராமனோடு போரிடுவதற்காகவேதானென்று குகன் எண்ணிச் சீற்றமடை கிருன். அப்படி அவன் சீற்றமடைந்ததைக் கம்பன்,

"அப் படை கங்கையை அடைந்த ஆயிடை,
'துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணலோடு உடற்றவே கொலாம்
இப் படை எடுத்தது?' என்று, எடுத்த சீற்றத்தான்"

என்று பாடுவான்.

சூழ்ச்சியின் ஊன்றிய சேனை!

இவ்வெண்ணம் குகனுக்கு உண்டானவிடத்தே அவனுக்குச் சீற்றம் உண்டாகிறது. கண்கள் தீ நாற, நாசியில் புகை உற,

'கிட்டியது அமர்' என்று அவனுடைய தோள்கள் கிளர்ந்தெழுகின்றன. 'வருகின்ற இப்படைகளனைத்தும் 'எலி' போன்றவை; நான் 'அரவம்' என்று வீரஉரை பகர்கிறான். கங்கையின் தென் கரைக்கு வந்து சேர்ந்து, தன்னுடைய சேனைக்கு அவன் இட்ட கட்டளையை இரண்டு அருமையான பாடல்களினால் கம்பன் விளக்குவான்:

"தோன்றிய புளினரை நோக்கி, 'சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு,
ஏன்றனென், என் உயிர்த் துணைவற்கு ஈகுவான்
ஆன்ற பேர் அரசு; நீர் அமைதிர் ஆம்' என்றான்."

"துடி எறி; நெறிகளும், துறையும், சுற்றுற
ஒடியெறி; அம்பிகள் யாதும் ஓட்டலிர்;
கடி எறி கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடி; எறி, பட' என, பெயர்த்தும் கூறுவான்:"

வந்த சேனையை, 'சூழ்ச்சியின் ஊன்றிய சேனை' என்றே குகன் கூறுவான். இப்படித் தன் சேனைக்கு ஆணையிட்டுவிட்டு வீர உரை பகர்கிறான். அப்படிப் பகரும் பொழுது,

"அஞ்சன வண்ணன், என் ஆர் உயிர் நாயகன், ஆளாமே,
வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும் வந்தாரே!"

என்று பேசுகிறான்.

வஞ்சனையால் அரசு எய்தியவன்!

எனவே, பரதனை வஞ்சனையால் அரசெய்திய மன்னன் என்று வெளிப்படையாகவே அவன் கூறிவிடுகிறான். அது மாத்திரமன்று. இராமனை, "'முன்னவன்' என்று நினைத்திலன்" என்றும் பரதனைப் பழித்துக் கூறுகிறான். குகனும் பரதனைப் பழிப்பது இவ்வளவு அவ்வளவு என்றில்லை,

"'நின்ற கொடைக் கை என் அன்பன் உடுக்க நெடுஞ் சீரை
அன்று கொடுத்தவன் மைந்தர் பலத்தை, என் அம்பாலே
கொன்று குவித்த நிணம் கொள் பிணக் குவை கொண்டு ஓடி,
துன்று திரைக் கடல், கங்கை மடுத்து இடை தூராதோ?"

என்று பரதனைப் பழித்துக் கூறுகிறான்.

"நாடு கொடுத்த என் நாயகனுக்கு இவர், நாம் ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி, எடுத்தது காணீரோ?"

என்றும் பேசுகிறான்.

நோக்கினன், உணர்ந்தான்!

இப்படிக் கங்கையின் தெற்குக்கரையில் குகன் வீராவேசம் கொண்டிருக்க, வடக்குக் கரையைச் சேர்ந்த பரதனிடத்தில் குகனைப் பற்றிச் சுமந்திரன் தெரிவிக்கிறான். அப்படித் தெரிவித்த உடனேயே குகனைக் காணும் ஆவலோடு பரதன் விரைகிறான். அப்படி விரைந்த பரதனுடைய தோற்றத்தைக் குகன் காண்கிறான். கண்ட குகனுடைய நிலை என்ன வாயிற்றென்பதைக் கம்பன் மிக அருமையாக விளக்குவான்:

"நின்றவனை நோக்கினன், திருமேனி நிலை உணர்ந்தான்,
துன்று கரு நறுங் குஞ்சி எயினர் கோன்; துண்ணென்றான்"

'துண்ணென்றான்' என்ற ஒரு சொல்லே போதுமானது குகனுடைய மனநிலையை உணர்த்துவதற்கு. பரதனைப் பற்றி எப்படியெல்லாமோ குகன் எண்ணி அவன்மேல் சீற்றம் கொண்டிருந்தான். ஆனால், பரதனுடைய நிலையைப் பார்த்த பிறகு, தான் கொண்ட சீற்றம் எவ்வளவு நியாயமற்றது என்பதையுணர்ந்து, 'துண்ணென்றான்' என்று கம்பன் கூறுவான். இங்கும் ஒரு சிறப்பைப் பார்க்க வேண்டும்.

குகன் படித்தவனல்லன். ஆனால், சிறந்த பண்பாளன்; தூய்மையான மனத்தையுடையவன். அதன் காரணமாகவே,

இராமனிடத்தில் கரைகாணாத காதல் கொண்டிருந்தவன். அத்தகைய இராமனுடன், கானகத்திற்கு வந்த பிறகும்கூட, போர் செய்யப் பரதன் வந்துவிட்டானென்று எண்ணும்பொழுது, அவன் பரதன்மேல் சீற்றம் கொண்டதில் ஆச்சரியமில்லை. ஆனால், அந்தச் சீற்றம் அநியாயமானது, ஆதாரமற்றது; தான் பரதனை எப்படியெல்லாம் எண்ணியிருந்தானோ, அதற்கு மாறாக நேர்மையான குணத்தையும், செயலையும் உடையவனாகப் பரதன் இருக்கிறானென்பதை உணர்ந்தவிடத்து, அந்தத் தூய்மையான உள்ளம் நிச்சயமாக வருந்தவே செய்கிறது. அந்த வருத்தத்தின் தன்மையையும், ஆழத்தையும் உணர்த்துகின்ற வகையிலே 'துண்ணென்றான்' என்ற சொல்லைக் கம்பன் ஆள்கிறான்.

கண்ணுற்றதும் விம்முற்றதும்!

அத்துடன் அமையாமல், பரதனுடைய தோற்றம் எப்படியிருந்தது என்பதையும் அதைக் கண்டமாத்திரத்தில் குகன் எப்படி நின்றானென்பதையும் கம்பன் மேலும் பாடுவான்:

"வற்கலையின் உடையானை, மாசு அடைந்த மெய்யானை,
நற் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை,
கல் கனியக் கனிகின்ற துயரானை, கண்ணுற்றான்;
வில் கையினின்று இடை வீழ, விம்முற்று, நின்று
ஒழிந்தான்."

இப்பாடலிலும் நான்காவது அடி கூர்ந்து நோக்கத்தக்கது. கானகத்தில் இராமனைக் காணவந்த பரதனுடைய உண்மை நிலையை உணர்ந்தபிறகு, இலக்குவனின் செயல் எப்படியிருந்தது என்று கம்பன் கூறியதோடு ஒப்பிட்டும் நோக்கத்தக்கது. இங்கும் கம்பன் கூறுகிறான், 'வில் கையினின்று இடை வீழ, விம்முற்று, நின்று ஒழிந்தான்' என்று.

நிலம் விழுந்த வில்கள்!

ஆனால், இலக்குவனைப் பற்றிச் சொல்லும் பொழுது, 'நின்றனன்—வில்லொடும் கண்ண நீர் நிலத்து வீழவே' என்று

கூறுவான். வில் கையினின்றும் விழுந்தது, இரு சமயங்களிலும் கம்பன் பாடியதற்குப் பொதுவானது. அங்கு இலக்குவன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக விழுந்ததென்று சொன்னான். இப்பொழுது, 'குகன் விம்முற்று, நின்று ஒழிந்தான்' என்று சொல்கிறான்.

'ஒழிந்தான்' என்ற சொல்லிலேயே, இலக்குவனைப் பற்றிச் 'சோர்தர' என்று சொன்ன சொல்லினுடைய பொருளும் கிடைத்துவிடுவதோடு, அதற்கு மேலும் கிடைத்துவிடுகிறது. 'சோர்தல்' என்ற வார்த்தையைவிட 'ஒழிதல்' என்ற வார்த்தை இன்னும் அழுத்தமானது, ஆழமானது. ஆக, இங்கே குகன் முன்னர் எந்த அளவுக்கு பரதனைப் பழித்து, குறைகூறி, ஏசினானோ, அந்த அளவுக்கு இப்பொழுது பச்சாதாபத்தினாலும், கழிவிரக்கத்தினாலும் கரைந்துபோய்விடுகிறான்.

இழைப்பரோ பிழைப்பு?

தான் இந்த நிலைக்கு ஆன காரணத்தை அவன் வாயிலாகவே, கம்பன்,

" 'நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்; அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்; தவவேடம் தலைநின்றான்;
துன்பம் ஒரு முடிவு இல்லை; திசை நோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு'
என்றான்"

என்று கூறுவான்.

இராமனை 'எம்பெருமான்' என்று கூறிவிட்டு, அவனுக்குத் தம்பியாகப் பிறந்தவர்கள் பிழை செய்யமாட்டார்களென்ற தன் முடிவைத் தெரிவிக்கிறான். இராமனுக்குத் தம்பியாகப் பிறந்தவர்கள் பிழை செய்ய மாட்டார்களென்பது ஓர் இயற்கை நியதியாக இருக்குமாயின், பரதன் இராமனுடைய தம்பி என்பதைக் குகன் தெரிந்திருப்பவனாகையால், பரதனைப் பற்றி இவ்வளவு கொடுமையாக அவன் எண்ணியிருக்கு

மாட்டான்; பேசியிருக்க மாட்டான். ஆகையினுலேயே, பரதன் பிழை செய்யவில்லை என்ற அவனுடைய இப்பொழுதைய முடிவு, 'இராமனுக்குப்பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு' என்ற நியதியிலிருந்து மாத்திரம் உண்டானதில்லை.

வேறு சில காரணங்களும் இந்த நியதியை உண்மையாக்கு கின்றன. அந்தக் காரணங்கள் அவன் கூறுகின்றபடியே நான்காகும். முதலாவது, பரதன் இராமனை ஒக்கின்ருன்; இரண்டாவது, தவ வேடம் தலைநின்ருன்; மூன்ருவது, துன்பத்திற்கு ஒரு முடிவில்லை; நான்காவது, திசை நோக்கித் தொழுகின்ருன்.

தோற்றம் எப்படியிருந்தாலும், பின்னர்க் கூறிய மூன்று செயல்களும், இராமன்மேல் போர்தொடுக்க வந்தவனுடைய செயல்களாக நிச்சயமாக இருக்கமுடியாது. ஆகவே, இராமன் மேல் போர்செய்வதற்காகக் கானகத்திற்கு அவன் வந்திருக் கிருனென்று, முன்னர்த் தான் எண்ணி வீர உரை பகர்ந்தது, ஆதாரமற்றதோடு மாத்திரமல்லாமல், பரதனுக்கு அநியாயம் செய்ததாகவும் ஆகிறது.

சந்திக்க வருகிருன்!

இப்பொழுது பரதனுடைய இம் மூன்று நிலைகளிலிருந்து, அதாவது, தவவேடம் தலைநிற்றல்; அவனுடைய துன்பத்திற்கு ஒரு முடிவில்லாதிருத்தல்; அவன் திசை நோக்கித் தொழுதல் ஆகிய மூன்றினின்றும், பரதனைப் பற்றித் தான் எண்ணியது மிக மிகத் தவறென்ற முடிவுக்கு வந்துவிடுகிருன்.

அதுமாத்திரமல்லாமல், அவனுடைய தோற்றத்திலிருந்து,

"உண்டு இடுக்கண் ஒன்று உடையான், உலையாத அன்பு
உடையான்,
கொண்ட தவ வேடமே கொண்டிருந்தான்"

என்பதையும் கண்டு, தான் தனியாகச் சென்று அவனுடைய நோக்கம் என்னவென்பதைத் தெரிந்து வருகிறேனென்று

கங்கையைக் கடந்து வடகரைக்கு வருகிறான்; வந்து பரதனைத் தொழுகிறான். இந்த முடிவுக்கு வந்து, பரதனைக் கண்டு, அவனுடைய நோக்கத்தைத் தெரிந்துகொள்வதற்காகத் தென் கரையினின்று கங்கையைக் கடந்து, வடகரைக்குச் செல்லப் புறப்படுகிற பொழுதும்கூட, இராமனிடத்து அவனுக்கிருந்த அக்கறை, அவனைப் பாதுகாக்கவேண்டுமென்ற உறுதி, சிறிதும் குறையவில்லை. ஆகவே, தான் தனியாகச் செல்லும்பொழுது கூடத் தன்னுடைய சேனைக்கு, 'காமின்கள் நெறி', அதாவது, 'வழியைப் பாதுகாத்திருங்கள்' என்று சொல்லிவிட்டுத்தான் போகிறான்.

குகனின் உயர்குணம்!

அப்படி வடகரையை வந்துசேர்ந்த குகன் பரதனைச் சந்திக்கிறான். இருவரும் மற்றவரது அன்பையும், பண்பையும் உணர்ந்து, ஒருவரையொருவர் வணங்கி அளவளாவுகிறார்கள். அப்பொழுது, தான் பரதனைப்பற்றித் தவறாக எண்ணியதற்குப் பிராயச்சித்தம் செய்வதுபோல, குகன் பரதனிடத்தே பேசுகிறான். அந்தப் பேச்சினைக் கம்பன் இரண்டு அருமையான கவிகளில் வடித்துக் காட்டுவான்:

'தாய் உரைகொண்டு தாதை உதவிய தரணிதன்னை,
''தீவினை'' என்ன நீத்து, சிந்தனை முகத்தில் தேக்கி,
போயினை என்றபோழ்து, புகழினோய்! தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ, தெரியின் அம்மா!'

'என்புகழ்கின்றது, ஏழை எயினனேன்? இரவி என்பான்—
தன் புகழ்க் கற்றை, மற்றை ஒளிகளைத் தவிர்க்குமாபோல்,
மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்—உயர்குணத்து உரவுத் தோளாய்!'

இங்கும் பரதனைப் பார்த்து, 'தன்மை கண்டால், ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ, தெரியின் அம்மா!' என்று குகன்

பேசுகிறான். 'கேழ்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு, 'ஒளி', 'நிறம்', 'ஒப்பு' என்று பொருள். இங்கே பரதனையும், இராமனையும் ஒப்பிட்டுக் குகன் பேசுவதால், 'ஒப்பு' என்ற பொருளே பொருத்தமாகும்.

ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ?

அதாவது, பரதனுடைய தன்மையையும், அதிலிருந்து பிறந்த அவன் செயலையும் நோக்குமிடத்து, ஆயிரம் இராமரும் இந்தப் பரதனுக்கு ஒப்பாக மாட்டார்கள் என்று குகன் பேசுகிறான். குகனே இராமனோடு பரதனை ஒப்பிட்டு இப்படிப் பேசினானேயானால், பரதனுடைய உயர்வையும், பெருமையையும் பற்றி எதுவும் சொல்லத் தேவையில்லை. காரணம், இராமனைப் பற்றிக் குகன் அவ்வளவு உயர்வாக எண்ணியிருந்தவன். அதாவது, குகன் சம்பந்தப்பட்டவரையில் இராமனைவிட உயர்ந்தவர்களோ, சிறந்தவர்களோ யாரும் இப்பூவுலகிலில்லை. அப்படி இராமனைப் பற்றி எண்ணியிருந்த குகனே, 'ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ' என்று பரதனிடத்திலேயே கூறுகிறான். இப்படி அவன் கூறுவது பரதனுக்குத் தான் முன்னர்ச் செய்துவிட்ட அநியாயத்திற்குக் கழிவிரக்கம் கொண்டு பிராயச்சித்தம் செய்வது போலத்தான்.

உண்மையில், எந்தக் காப்பிய ஆசிரியனும், தான் படைக்கும் கதாநாயகனைவிடச் சிறந்ததொரு பாத்திரத்தைப் படைக்க மாட்டான். காரணம், அப்படிக் கதாநாயகனைவிடச் சிறந்ததொரு பாத்திரத்தைப் படைப்பானாயின், அப்படிப் படைக்கப்பட்ட பாத்திரமே கதாநாயகனாக ஆகிவிடும். இராம காதைக்குக் கதாநாயகன் இராமன் என்பது பற்றிச் சந்தேகமேயில்லை. ஆகையினால், இராம காதையில் இராமனைவிடப் பெருமையில் சிறந்தவர் வேறு யாருமிருக்க முடியாது. அப்படியிருந்தும்கூட, காப்பிய கர்த்தா குகனின் வாயிலாக, ஆயிரம் இராமர்கூடப் பரதனுக்கு ஒப்பாகமாட்டார்களென்று கூறுவானேயானால், அது உபசாரமாகத்தானிருக்க முடியுமேதவிர உண்மையான ஒன்றாக இருக்க முடியாது. இந்த உபசாரம்

குகனுடைய கழிவிரக்கத்தையும், பச்சாதாபத்தின் ஆழத்தையும், தன்மையையும் காட்டுவதாகவே அமைந்திருக்கிறது.

உயர் குணத்தனும், ஏழை எயினனும்

இப்படிச் சொன்னதோடல்லாமல், மேலும் குகன் பேசுகிறான். சூரிய வெளிச்சத்திற்குமுன் வேறெந்த வெளிச்சமும் எடுபடாததுபோல, சூரிய வம்சத்தில் பிறந்த பரதன் ஒருவனே, அந்த மரபினோரது புகழனைத்தையும் தன் ஒருவனுடைய புகழாகவே ஆக்கிக்கொண்டுவிட்டானென்றும் கூறுகிறான். இதுவும், 'ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ' என்று குகன் சொன்னது எத்தகைத்தோ, அத்தகைத்தே யாகிறது.

இப்படியெல்லாம் சொல்லித் தன்னுடைய கழிவிரக்கத்தைக் காட்டுகின்ற வகையில், 'உயர் குணத்து உரவுத் தோளாய்' என்று பரதனை விளித்து, 'என் புகழ்கின்றது, ஏழை எயினனேன்' என்று கூறுகிறான். இங்கே பரதனுடைய உயர் குணத்தையும், வலிமையையும் ஒருங்கே உணர்த்த, 'உயர் குணத்து உரவுத் தோளாய்' என்று விளிக்கிறான். அதே சமயத்தில், அவனுடைய பெருமைக்குரிய புகழை, 'ஏழை எயினனேன்', அதாவது, அதிகம் அறிவில்லாத வேடன் எப்படிப் பேச முடியுமென்று தன் இயலாமையையும் தெரிவித்து விடுகிறான். இந்த நிகழ்ச்சியும், குகனுடைய அற்புதமான எளிமையையும், தூய்மையையும், பண்பாட்டையும், நாகரிகத்தையும் 'எவரெஸ்ட் சிகரத்'தின் உச்சிக்குத் தூக்கி வைத்துவிடுகின்றன.

VII. பரதனும் கோசலையும்

மீண்டும் பரதனைப் பற்றியதோர் நிகழ்ச்சியை நோக்குவோம். சீதா கல்யாணத்துக்குப் பிறகு, தசரதனும், அவன் மனைவிமாரும், புத்திரர்களும் அவர்கள் மனைவிமாரும் அயோத்திக்குத் திரும்புகிறார்கள். இடையில் பரசுராமனோடு மோதும் நிகழ்ச்சி நடக்கிறது. பரதன் கேகயநாட்டிற்குச் செல்கிறான்.

அதற்குப் பிறகுதான், இராமனுக்குப் பட்டம் சூட்டுவதைப் பற்றித் தசரதன் ஆலோசிக்கிறான். இறுதியில், பட்டம் சூட்ட முடிவு செய்து, அதற்கான நாளையும் குறித்து, ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

நிறை குணத்தன்! நின்னினும் நல்லன்!

கைகேயி தசரதனிடத்தில் இரண்டு வரங்களை வாங்கி விடுகிறாள். அந்த வரங்களின்படி, தன் தந்தையின் வாக்கைக் காப்பாற்றுவதற்காக இராமன் கானகம் செல்ல முடிவுசெய்து விடுகிறான். அந்த முடிவைத் தன் தாய்க்கு தெரிவிப்பதற்காகக் கோசலையிடம் செல்கிறான். 'குழைக்கின்ற கவரி இன்றிக் கொற்ற வெண்குடையும் இன்றி' வருகின்ற மகனைப் பார்த்து, ஐயங்கொண்ட கோசலை, 'இடையூறு உண்டோ நெடு முடி புனைதற்கு?' என்று கேட்கிறாள். தாய் கேட்கும் கேள்விக்குப் பதிலிருக்கும் வகையில், செங்கை கூப்பி, 'நின் காதல் திருமகன், பங்கம் இல் குணத்து எம்பி பரதனே, துங்க மா முடி சூடுகின்றான்' என்கிறான். தாய் கேட்ட கேள்விக்கு நேரடியான பதில் இது. இந்தப் பதிலைக் கேட்ட தாய், எவ்விதத்திலும் அதிர்ச்சியடையவில்லை. அவள் அந்தப் பதிலைக் கேட்டு என்ன எண்ணினாளென்பதைக் கம்பன் அற்புதமாக,

"'முறைமை அன்று என்பது ஒன்று உண்டு; மும்மையின்
நிறை குணத்தவன்; நின்னினும் நல்லனால்;
குறைவு இலன், எனக் கூறினள்—நால்வர்க்கும்
மறு இல் அன்பினில், வேற்றுமை மாற்றினாள்"

என்று பாடுவான்.

இந்தப் பாடலில் பல சிறப்புகளிருக்கின்றன. ஒன்று, 'நால்வர்க்கும் மறு இல் அன்பினில், வேற்றுமை மாற்றினாள்' என்று கோசலை குறிப்பிடப்படுவது. இரண்டாவது, 'பரதன் இராமனைவிடச் சிறந்தவன்' என்று, இராமனை ஈன்ற தாயாகிய கோசலையே கூறுவது.

நல்நெறி செலுத்தும் பணி

இப்படிக் கூறியவள், மேலுமொன்று சொல்கிருள். அதாவது, பரதனுக்குப் பட்டம் சூட்டச்செய்த முடிவின்படி நடப்பதே இராமனுக்கு அறமாகுமென்று கூறி, 'உனது தம்பி யாகிய பரதனுக்கு நாட்டைக் கொடுத்து, அவனுடன் மாறுபாடின்றி, ஒன்றிப் பல நெடுங்காலம் வாழ்வாயாக' என்று இராமனுக்கு வாழ்த்துக் கூறுகிருள். 'அவனோடு ஒன்றி நெடுங்காலம் வாழ்வாயாக' என்று தாய் சொன்ன பிறகுதான், தனயன், தான் நன்னெறி உய்ப்பதற்குத் தந்தை வேருெரு கட்டளையை இட்டிருக்கிருர் என்று சொல்கிருன். அதனை,

'நாயகன், எனை நல் நெறி உய்ப்பதற்கு
ஏயது உண்டு, ஓர் பணி'

என்று இராமன் சொன்னதாகக் கம்பன் கூறுவான்.

அப்படி இராமன் சொன்ன பிறகு, 'ஈண்டு உரைத்த பணி என்னை?' என்று தாய் கேட்கிருள். அதற்குப் பதிலாகத்தான் இராமன்,

'ஆண்டு ஓர் ஏழிரெண்டு ஏழ், அகன் கானிடை,
மாண்ட மா தவத்தோருடன் வைகி, பின்,
மீண்டு நீ வரல் வேண்டும்'

என்பதுதான் அந்தப் பணி, என்று கூறுகிருன்.

வஞ்சமோ மகனே!

பரதன் நாடாளவேண்டுமென்று அரசன் கட்டளையிட்டானென்று இராமன் சொன்ன பொழுது கோசலை துயரம் கொள்ளவில்லை. ஆனல், இராமனைப் பதினுன்காண்டுகளுக்குக் காட்டுக்குப் போகச் சொன்ஞனென்று சொன்னபொழுதுதான், அவள் துயரம் அடைகிருள். அவள் இரண்டையும் இப்பொழுது சேர்த்துப் பார்க்கிருள். அதாவது, பரதன் நாடாளவேண்டுமென்பதையும், இராமன் பதினுன்காண்டுகளுக்குக் காட்டுக்குச்

செல்லவேண்டுமென்பதையும். இப்படிச் சேர்த்துப் பார்த்த விடத்துத்தான், 'வஞ்சமோ, மகனே!' என்ற சொற்கள் அவளிடத்துப் பிறக்கின்றன.

கடைசியாக, இராமன் வனமேக, தசரதன் வானுலகேக, கேகய நாட்டிலிருந்து பரதன் அயோத்திக்குத் திரும்பி வருகிறான். அரண்மனையில் தந்தை வாழும் இடத்தையடைகிறான். அங்கே அரசன் இல்லாததையும், நகரும், அரண்மனையும் இருந்த நிலையையும் கண்டு ஐயுறவு கொள்கிறான். 'தந்தை எங்குள்ளார்?' என்று கேட்கிறான். அதற்குத் தந்தை வானகம் எய்தினாரென்றும், பரதன் வருந்தவேண்டாமென்றும், தாய் கூறுகிறாள். இந்தச் சொல்லைக் கேட்ட பரதன், பெருந்துயர் கொண்டு, தாயைக் கடிந்து கூறிவிட்டுத் துயர் மிகுதியால் புலம்புகிறான்.

தூய நெஞ்சினன்!

பின்னர், இராமனை வணங்கினால்தான் தன் துயர் தீருமென்ற முடிவுக்கு வந்தவன், 'இராமன் எங்குள்ளான்?' என்று கேட்கிறான். இராமன் கானகம் சென்றதைக் கைகேயி கூறுகிறாள். இதைக் கேட்ட பரதன், மேலும் நைந்து, உருகுகிறான். இராமன் வனம் போன காரணத்தைத் தெரிந்து கொண்ட பிறகு, பரதன் சினத்தின் உச்சநிலையை அடைகிறான். தாயினுடைய சொற்களைக் கேட்டு, அவளை வெறுத்து, கடிந்து கூறி, அவளைக் கொல்லாமல் விடுவது இராமன் கோபிப்பானென்ற ஒரே காரணத்திற்காகத்தானன்றி, அவள் தாயென்பதற்காகவன்று என்றும் சொல்கிறான். அவளைப் பலப்பல கடிந்து கூறிவிட்டு, 'துன்ன அருந் துயர் கெட, தூய கோசலை பொன் அடி தொழுவென்' என்று எழுந்து போகிறான். கோசலையைக் கண்டு அவளுடைய பாதங்களில் விழுந்து புலம்பத் தொடங்குகிறான். இத் துயர் நிலையில், இயல்பாக, 'எந்தை எவ் உலகு உளான்? எம் முன் யாண்டையான்?' என்று கேட்கிறான்.

பரதனுடைய நிலையைப் பார்த்தும், உரையைக் கேட்டும், கோசலைக்கு என்ன உணர்வு உண்டாயிற்றென்று கம்பன்,

"புலம்புறு குருசில்தன் புலர்வு நோக்கினுள்,
குலம் பொறை கற்பு இவை சுமந்த கோசலை;
'நிலம் பொறை ஆற்றலன், நெஞ்சம் தூய்து' என,
சலம் பிறிது உற, மனம் தளர்ந்து, கூறுவாள்:"

என்று பாடுவான்.

இந்தப் பாடலில் காணப்படும் சொற்கள் பலவற்றின் பொருளைக் கூர்ந்து நோக்கவேண்டும். முதலடியில் 'புலர்வு' என்ற சொல் இடம் பெற்றிருக்கிறது. 'புலர்வு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'முகமும் அகமும் வாடுதல்' என்று பொருள். பரதனுடைய இந்த நிலையைப் பொருத்தமாகக் கம்பன், கோசலை 'நோக்கினுள்' என்று கூறுவான். 'நோக்குதல்', என்றால், கண்ணாலும், கருத்தாலும் நோக்குதல். ஆக, பரதனுடைய வடிவையும், வார்த்தைகளையும் கோசலை ஆய்ந்து, கூர்ந்து கவனித்தாள்.

அப்படிக் கவனித்ததன் காரணமாகச் சில முடிவுகளுக்கு அவள் வருகிறுள். ஒன்று, இந்தப் பரதன் அரசாங்கத்தை யேற்று ஆளப்போகிறவனல்லன் என்பது; மற்றொன்று, பரதனுடைய மனம் தூயதென்பது. ஆக, இவ்விரண்டு முடிவுகளுக்கும் அவள் வந்த பிறகு, அவளுடைய நிலை என்னவாயிற்றென்பதை நான்காவது அடி கூறும்.

நான்காவது அடியில் 'சலம்' என்ற சொல் இடம்பெற்றிருக்கிறது. 'சலம்' என்ற சொல்லுக்குத் 'தணியாக் கோபம்' என்பது பொருள். ஆக, 'சலம் பிரிது உற' என்ற சொற்கள், அத்தகைய தணியாக் கோபம் பிற்பட, அதாவது நீங்க, என்ற பொருளைக் கொடுக்கும். அதே சமயத்தில், 'சலம்' என்ற சொல்லுக்கு 'வஞ்சனை' என்ற பொருளும் உண்டு. அந்தப் பொருளை வைத்துக்கொண்டு பார்த்தாலும், 'சலம் பிறிது, உற' என்ற சொற்கள், 'வஞ்சனை பரதனிடத்திலில்லை என்றாக'

என்ற பொருளைக் கொடுக்கும். இந்த மனநிலை கோசலைக்கு ஏற்பட்டவுடன், அவளுடைய மனம் தளர்கிறது.

அறிந்திலை போலும்!

இந்தப் பாட்டிலிருந்து தெரிவதென்னவென்றால், பரதன் கோசலையைக் கண்டு இவ்வாறு பேசிப் புலம்புவதற்கு முன்னால், பரதன் அரசின்மேல் ஆசையுள்ளவன், அவனுக்கும் நடந்த சூழ்ச்சியில் பங்குண்டு என்று கோசலை எண்ணியிருந்தாளென் பதாகும். இதே கருத்தை, அடுத்துவரும் பாடலும் வலியுறுத்தும்.

" 'மை அறு மனத்து ஒரு மாசு உளான் அலன்;
செய்யனே' என்பது தேறும் சிந்தையாள்,
'கைகயர் கோமகள் இழைத்த கைதவம்,
ஐய! நீ அறிந்திலை போலுமால்?' என்றாள்."

என்பதுதான் அந்தப் பாடல்.

'நெஞ்சம் தூய்து' என்று முந்திய பாடலில் சொன்ன கருத்தையே இப்பாடலின் முதலடி வலியுறுத்துகிறது. அதுதான், 'மைஅறு மனத்து ஒரு மாசு உளான் அலன்' என்ப தாகும்.

தூய்மையின் வடிவம்

இங்குக் கம்பனுடைய சொல்லாட்சியும் கூர்ந்து நோக்கத் தக்கது. பரதனுடைய மனத்தை 'மை அறு மனம்' என்று குறிப்பிடுகிறான். 'மை' என்றால், 'அழுக்கு', 'களங்கம்' என்பதுதான் பொருள். ஆக, பரதனுடைய மனம் இயற்கை யாகக் களங்கமற்ற மனம். இதைக் கோசலை முன்னரே கூறி யிருக்கிறாள். அதையும் நாம் கேட்டுத்தானிருக்கிறோம். அதாவது, பரதன் முடி சூட்டிக்கொள்ளப் போகிறானென்று கோசலையிடத்தில் இராமன் சொன்னபொழுது, 'மும்மையின் நிறை குணத்தவன்; நின்னினும் நல்லவன்' என்று பரதனைப் பற்றிக் கோசலை கூறியிருக்கிறாளல்லவா? ஏனவே, இயற்கை

யாகப் பரதன் களங்கமற்ற மனத்தைக் கொண்டவன். ஆனல், கோசலை சந்தேகப்பட்டது என்னவென்ருல், அந்த இயற்கை யான களங்கமற்ற மனம், அரசின் மேலுற்ற ஆசையினுல் மாசு பட்டதோ என்பதுதான். பரதனுடைய உரையையும் புலம்பலையும் கேட்டபிறகு, அத்தகைய மாசு அவனுடைய இயற்கையான, களங்கமற்ற மனத்தில் உண்டாகவில்லையென்று அவள் தெளிந்தாளென்பதைத்தான், 'மை அறு மனத்து ஒரு மாசு உளான் அலன்' என்ற சொற்கள் குறித்து நிற்கின்றன. இதில் ஒரு சிறப்பும் இருக்கவே செய்கிறது.

இயற்கையாக மாசுள்ள மனமாக இருந்தால், அதில் மாசு எப்பொழுதுமே இருந்து கொண்டிருக்கும். இயற்கையாக களங்கமற்ற மனமாக இருந்தால்தான், சமயத்திலோ, சந்தர்ப் பத்திலோ மாசொன்று உண்டாக முடியும். பரதனுடய மனமோ இயற்கையாகக் களங்கமற்ற மனம். அந்த மனத்தில் இப்பொழுது அரசின் மேலுள்ள ஆசையின் காரணமாக மாசு உண்டாயிற்ரு? இல்லையா? என்பதுதான் கேள்வி. அந்தக் கேள்விக்கு, 'மாசு உண்டாகவில்லை' என்ற விடையைக் கோசலை கண்டுபிடித்து விட்டாள்.

கைகயர் கோமகள்!

அதுமாத்திரமல்லாமல், 'செய்யனே' என்று அவனை விளிக்கிருள். 'செம்மை', 'சேய்' என்ற சொற்களுக்குரிய பொருளை முன்னரே கண்டோம். இங்கும், 'செய்யனே' என்று கோசலை விளிக்கும் பொழுது, 'நேர்மையுடையவனே' என்று தான் குறிப்பிடுகிருள். அதுவன்றியும், கடைசி அடியில் 'ஐய' என்றும் அவனை விளிக்கிருள்.

ஆக, பரதன் சற்றும் குற்றமற்றவன் என்பதை முழுமை யாகத் தெளிந்த மனத்தோடு, 'கைகேயி செய்த வஞ்சகச் செயலை நீ அறிந்திலை போலும்?' என்கிருள். இங்கும்கூடப் பரதனுக்கும், கைகேயி செய்த செயலுக்கும் சம்பந்தமில்லை யென்பதைத் தான் உணர்ந்து கொண்டதை அறிவிக்கும் வகை

யில், கைகேயியைப் பரதனுடைய தாயென்று குறிப்பிடாமல், 'கைகயர் கோமகள்' என்றே குறிப்பிடுகிருள்.

'நீ அறிந்திலே போலுமால்' என்பதை இரண்டு விதமாகவும் பொருள் கொள்ளலாம். ஒன்று, 'உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே; உனக்குத் தெரியாதா?' என்பது. மற்ருென்று, 'உனக்கு அது தெரியவில்லை போலிருக்கிறது' என்பது. எப்படி நோக்கினுலும், பரதனுக்குக் கைகேயி செய்த கைதவம் தெரிந் திருக்க இடமுண்டென்று கோசலை எண்ணினுளென்றுதான் கொள்ளத் தோன்றும். பரதனும் அப்படித்தான் உணர்ந்து கொண்டான். ஆகையினுல்தான், கோசலையிடத்தில் மிகக் கடுமையான சூளுரை பகர்கிருன்.

இங்கு நாம் நோக்கத்தக்கதென்னவென்ருல், தூய்மையான உள்ளத்தையுடைய பரதனுடைய எண்ணத்தில், கோசலை சந்தேகம் கொண்டாள். அந்தச் சந்தேகம் அவனுடைய உரையினுலும், புலம்பலாலும் தீர்ந்துபோய், அவனுடைய தூய்மையான உள்ளத்தையும், அவனுக்கு அரசில் ஆசையில்லை யென்பதையும், அவனுக்குக் கைகேயி செய்த வஞ்சனையில் பங்கில்லையென்பதையும் தெரிந்த போதும்கூட, அவள் அவனைக் கேட்ட கேள்வியில், அவனுக்கும் நடந்த வஞ்சகத்தில் ஏதோ பங்கிருந்திருக்க வேண்டுமென்று, அவள் மனத்தில் எங்கோ ஓரிடத்தில் உறுத்திக்கொண்டிருந்தது என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது.

சந்தேகம் தீரவில்லையோ?

இதை வலியுறுத்துவது போலவே, பரதனுடைய சூளுரை யைக் கேட்டபிறகு, கோசலை என்ன செய்தாளென்று கம்பன் கூறுகின்ற பாடலும் அமைந்திருக்கிறது:

"தூய வாசகம் சொன்ன தோன்றலை,
தீய கானகம் திருவின் நீங்கி முன்
போயினன் வரக் கண்ட பொம்மலாள்
ஆய காதலால், அழுது புல்லினள்,"

பரதனுடைய சூளுரையைத் 'தூய வாசகம்' என்றே கம்பன் குறிப்பிடுகிறான். இந்தத் தூய வாசகம் சொன்னவனைத் 'தோன்றல்' என்றும் கம்பன் குறிப்பிடுவான். அப்படிக் கூறிவிட்டு, கானகத்திற்குச் சென்றுவிட்ட இராமன் திரும்பி வரக்கண்ட மகிழ்ச்சியை யுடையவளைப் போலக் கோசலை கண்ணீர்விட்டு, அந்தப் பரதனிடத்துத் தோன்றிய அன்பினால், அவனைத் தழுவிக் கொண்டாளென்று கம்பன் கூறுகிறான். எனவே, பரதனுடைய சூளுரையிலிருந்துதான், கோசலையின் மனத்தில் இலைமறைவு காய்மறைவாக ஒளிந்து கொண்டிருந்த சந்தேகம், முழுமையாக நீங்கிற்றென்று சொல்ல முடியும்.

இதை மேலும் வலியுறுத்துவது போலவே, கம்பனுடைய அடுத்த பாடலும் அமைந்திருக்கிறது.

"செம்மை நல் மனத்து அண்ணல் செய்கையும்,
அம்மை தீமையும், அறிதல் தேற்றினாள்;
கொம்மை வெம் முலை குமுறு பால் உக,
விம்மி விம்மி நின்று, இவை விளம்புவாள்."

இந்தப் பாடலில், பரதன், 'செம்மை நல்மனத்து அண்ணல்' என்று குறிப்பிடப்படுகிறான். அவனுடைய செய்கையை இப்பொழுது கோசலை தெளிவாக அறிந்து கொண்டுவிட்டாள். இப்படி அறிந்துகொண்டதன் விளைவு என்னவென்றால், பரதனை நாடாளவும், இராமனைக் காடேகவும் செய்தது முழுக்க முழுக்கக் கைகேயியின் செயலே என்பதை அறிந்து கொண்டதே யாகும்.

அதைத்தான், 'அம்மை தீமை' என்று கம்பன் கூறுகிறான். அண்ணல், அம்மை என்று கூறுவதில் இருந்தே அம்மையி லிருந்து அண்ணலைப் பிரித்து, அண்ணல் குற்றமற்றவன் என்ற முடிவுக்கும், அம்மையே குற்றவாளி என்ற முடிவுக்கும் கோசலை வந்தாளென்பது விளங்குகிறது.

அழுது புல்லினாள்!

இத்தகைய நிலைக்குக் கோசலை வந்தபிறகு, அவள் என்ன செய்கிறாளென்றால், 'விம்மி விம்மி அழுது நின்று விளம்பு

வாள்'. இந்தச் செயலினூடே, அவள் உடலில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கம்பன் மிக அற்புதமாக இப்பாடலின் மூன்ருமடியில் எடுத்துக் காட்டுவான்.

அதாவது, கோசலையினுடைய திரண்ட தனங்களிலிருந்து பால் சுரக்க, கோசலை விம்மி விம்மி நின்று அழுதாள் என்று கூறுகிருன். எப்பொது ஒரு பெண்ணின் தனங்களிலிருந்து பால் சுரக்குமென்ருல், அவள் தன் குழந்தையை எடுத்து அணைக்கும் பொழுதுதான். முந்திய பாடலிலே பரதனை அவள், 'ஆய காதலால், அழுது புல்லினுள்' என்று கம்பன் கூறுவான். அதுமாத்திரமன்று, 'தீய கானகம் திருவின் நீங்கி முன் போயினுன் வரக் கண்ட பொம்மலாள்' என்றும் கூறுவான்.

அதாவது, இப்பொழுது கோசலையின் முன் நிற்பவன் கோசலையின் மகனுகிய இராமனேயாகையால், அவளுடைய தனங்களிலிருந்து பால் சுரக்கத் தொடங்கிற்று. கோசலையின் முன்னுல் நிற்கும் பரதன், அவளுடைய மைந்தனுகிய இராமனுக மாறிவிடுவதனுல், அந்தப் பரதனுக்கும் இராமனுக்குமிடையே, எந்தவிதமான வேற்றுமையும் இருக்க முடியாது; எனவே, இராமனைக் குறித்து எந்தத் தீமையையும் பரதன் எண்ணிக் கூடப் பார்த்திருக்க முடியாது. கோசலையின் இந்தச் செயல், 'நால்வர்க்கும் மறு இல் அன்பினில், வேற்றுமை மாற்றினுள்' என்று முன்னர்க் கம்பன் அவளை வருணித்ததற் கேற்பவே அமைந்திருக்கிறது.

மன்னர் மன்னவா!

இப்படி விம்மி விம்மி அழும் கோசலை, ஒன்றைச் சொல் கிருள். அதைக் கம்பன்,

"'முன்னை நும் குல முதலு ளோர்கள்தாம்,
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?
மன்னர் மன்னவா!' என்று, வாழ்த்தினுள்—
உன்ன உன்ன நைந்து உருகி விம்முவாள்,"

என்று பாடுவான்,

சூரிய குலத்தில் இட்சவாகு வம்சத்தில் தோன்றிய யாருமே பரதனுக்கிணையாகும் தன்மையைப் பெற்றவர்களல்லர் என்று கூறிவிட்டு, அந்தப் பரதனை 'மன்னர் மன்னவா!' என்று வாழ்த்துகிறாள். இந்த வாழ்த்து எவ்வளவு தூய்மையான தென்பதைக் கோசலையினுடைய மனத்தில் நடந்த போராட்டத் தையும், அந்தப் போராட்டத்தின் முடிவில், அவள் பெற்ற தெளிவையும் நோக்கினால்தான் உணர்ந்துகொள்ள முடியும்.

இதில் இன்னொன்றும் அடங்கியிருக்கிறது. பரதனுடைய நோக்கத்தில் ஐயப்பாடு கொண்டதின் காரணமாகப் பரதனுக் குக் கோசலை அநீதி செய்துவிட்டாள். அந்த அநீதிக்குக் கழிவிரக்கம் கொண்டு பிராயச்சித்தம் செய்வதுபோல இப்படி அவனை அவள் வாழ்த்துகிறாள்.

இப்பொழுதே உலகு இறக்கும்!

பரதனுடைய பெருந்தன்மையைப் பூரணமாக உணர்ந்து கொண்ட கோசலை, இந்தப் பிராயச்சித்தம்கூடப் போதா தென்று எண்ணினாள் போலும்!

கானகத்திற்குச் சென்று பதினான்காண்டுகளான பிறகும் கூட இராமன் அயோத்திக்குத் திரும்பிவரவில்லை என்றெண்ணிய பரதன், தான் முன்னர் எடுத்துக்கொண்ட சபதத்தின்படி, தீயில் குதித்துத் தன் உயிரை முடித்துக் கொள்ளத் தீர்மானிக் கிறான். அதன்படியே எரியை அமைக்கவும் பணிக்கிறான்.

அதனைக் கேட்ட கோசலை, விரைந்து வருகிறாள். அப்படிக் கோசலை வருவதையும், அவள் என்ன எண்ணிக் கொண்டு வந்தாளென்பதையும், கம்பன் மிக அற்புதமாக,

"அப்பொழுதின், இவ் உரை சென்று, அயோத்தியினின்
இசைத்தலுமே, அரியை ஈன்ற
ஒப்பு எழுத ஒண்ணாத கற்புடையாள்,
வயிறு புடைத்து, அலமந்து ஏங்கி,

'இப்பொழுதே உலகு இறக்கும், யாக்கையினை
முடித்து ஒழிந்தால், மகனே!' என்னு,
வெப்பு எழுதினுல் அன்ன மெலிவுடையாள்
கடிது ஓடி, விலக்க வந்தாள்"

என்ற பாடலில் உணர்த்துவான்.

பரதன் தீயில் குளித்து இறப்பானேயானுல் உலகமே இறக்குமென்று அவள் எண்ணுகிருள்; அப்படி எண்ணி, அழுது அரற்றிப் பரதனை வந்தடைகிருள். மழைக்கண்ணுளாக வந்து நின்ற கோசலையைப் பரதன் அடிதொழுகிருன். அவள் புகுந்து அவனைப் பற்றிக்கொண்டு,

"'மன் இழைத்ததும், மைந்தன் இழைத்ததும்,
முன் இழைத்த விதியின் முயற்சியால்;
பின் இழைத்ததும், எண்ணில், அப் பெற்றியால்;
என் இழைத்தனை, என் மகனே?' என்ருள்."

உணர்ச்சி மிகுந்த இப்பாடலின் சிகரமாக அமைந்திருப்பது, 'என் மகனே' என்று கோசலை பரதனை விளிப்பதுதான். அப்படி, 'நீ என்ன செய்யத் துணிந்தாய்?' என்று கேட்ட கோசலை அவனிடத்து மேலும் சொல்வாள், 'நீ இப்படி எண்ணுவாயாயின் நாடு தீயில் விழும்; சேனையும் தீயில் விழும்; உன் தாயரும் அப்பபடியே செய்வர். அதுமாத்திரமல்லாமல், தனி அறமும் தீயில் விழும், உலகமும் திரியும்' என்று கூறுகிருள்.

அழியாது நின் பெருமை!

அனைத்திற்கும் மேலாக ஒன்று கூறுகிருள்:

"'தரும நீதியின் தன் பயன் ஆவது உன்
கருமமே அன்றிக் கண்டிலம், கண்களால்;
அருமை ஒன்றும் உணர்ந்திலே; ஐய! நின்
பெருமை, ஊழி திரியினும், பேருமோ?'"

என்பதுதான் அது. இங்குத்தான் பரதனுடைய தன்மையை மிக உச்ச நிலையில் வைத்துக் கோசலை பேசுகிருள். 'தரும

நீதியின் பயனல்லாது, வேறெதுவுமே உன்னுடைய செயலில் நாங்கள் கண்டதில்லே; அந்த அருமையை நீ உணரவில்லே; உன்னுடைய பெருமையோ ஊழி திரியினும் பேராது' என்று கூறுகிருள்.

மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ!

இவற்றிற்குப் பின்னர், இராமனைப் பெற்றெடுத்த கோசலே வேருென்றைக் கூறிப் பரதனுடைய நேர்மையையும் உயர்வையும் பாராட்டுவதோடு, தான் ஆரம்பத்தில் அவனைப் பற்றி நியாமற்ற முறையில் சந்தேகித்ததற்குப் பூரணமாகப் பிராயச்சித்தம் செய்துகொள்ள முயல்கிருள். அதைத்தான் கம்பன்,

" 'எண் இல் கோடி இராமர்கள் என்னினும்,
அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ?
புண்ணியம் எனும் நின் உயிர் போயினல்,
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?"

என்ற பாடலில் வடிக்கிருன்.

முன்னர்த் 'தன்மை கண்டால், ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ?' என்று குகன் பரதனைப் பாராட்டியதைக் கண்டோம். குகனே இராமனுடைய நண்பன். இராமனல் தன் சகோதரனுக ஏற்றுக்கொள்ளப்பட்டவன்.

இப்பொழுதோ, 'எண் இல் கோடி இராமர்கள் என்னினும், அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ?' என்று கோசலே பேசுகிருள். பேசுபவள், இராமனே ஈன்றெடுத்த தாய்! எந்தத் தாயும், இயற்கையாக, தான் ஈன்றெடுத்த மகனிடத்திலிருக்கும் பாசத்தைவிட அதிகமான பாசத்தையோ, அன்றி அம் மகனிடத்தில் காணும் பெருமைக்கும் அதிகமான பெருமையையோ, வேறு யாரிடத்திலும் காணமாட்டாள். ஆனல், அத்தகைய தாய்தான், 'எண்ணில் கோடி இராமர்களும் பரதன் அருளுக்கு அருகாக மாட்டார்கள்' என்று கூறுகிருள்,

இப்படிக் கோசலை கூறுவாளேயானால், அவளுடைய உன்னதத் தன்மையையும், பரதனுடைய பெருமையையும் யாராலும் முழுமையாக உணர்ந்து கொள்ளவோ, விளக்கி விடவோ முடியாதென்பது திண்ணம்.

VIII. வீடணனும் இராகவனும்

தன்னிடத்து அடைக்கலம் புகுந்த வீடணனை இராமன் வெகுவாக மதித்தான். தன்னிடம் அடைக்கலம் கேட்டுவந்த வீடணனை, அழைத்து வருமாறு சுக்கிரீவனிடம் இயம்பிய பொழுது, வீடணனைக் 'கோது இலாதவன்' என்று குறிப்பிடுகிறான். அப்படிச் சுக்கிரீவன் செல்லும் பொழுது, கவிஞன், வீடணனை, 'மெய்யினுக்கு உறையுள் ஆன ஒருவன்' என்று குறிப்பிடுவான். தன்னை வந்து சேர்ந்த வீடணனைத் தன் தம்பியாகவே இராமன் ஏற்றுக்கொள்கிறான். அதற்குப் பிந்திய எல்லா நிகழ்ச்சிகளிலும் வீடணனுக்கு முக்கியப் பங்குண்டு. இலங்கையின் அரண்பற்றி இராமன் வினவ, வீடணன் விரிவாகப் பதில் கூறுகிறான்.

உதவிய வீடணன்!

பின்னர் நடந்த போரில், வீடணன், ஒவ்வொரு கட்டத்திலும் பெருமளவுக்கு உதவுகிறான்.

இலக்குவனுக்கும், இந்திரஜித்துக்குமிடையே நடைபெற்ற போரில், இலக்குவனுடைய வீரத்தால், இந்திரஜித்து பெரிதும் நலிவடைந்தான். நாகபாசத்தை விட இந்திரஜித்து வானில் மறைகிறான். நாகபாசத்தை இலக்குவன்மேல் விடுகிறான். இலக்குவன் முதலானோர் நாகபாசத்தால் பிணைக்கப் படுகின்றனர்.

இவ்வாறு அனைவரும் நாகபாசத்தால் கட்டுண்ட நிலையினைக் கண்டு, வீடணன் புலம்பலுற்றான். வீடணனுடைய அமைச்சர்களில் ஒருவனான அனலன், வீடணனைத் தேற்றித்

தான் இராமனிடத்துச் சென்று நடந்ததைச் சொல்வேனென்று சொல்லி, அப்படியே போய், நடந்ததை இராமனிடம் சொல்கிறுன். துயரத்தில் மூழ்கிய இராமன், போர்க்களம் வருகிறுன். கட்டுண்டு கிடக்கின்ற தம்பியைப் பார்த்துப் பெருந்துயரில் மூழ்கி, 'இலக்குவா, இலக்குவா' என்று அரற்றுகிறுன்.

கெடுத்தனை வீடணு!

இறுதியில் இராமனுடைய கோபம் வீடணன்மேல் திரும்புகிறது. வீடணனைப் பார்த்து இராமன் என்ன சொன்னுனென்பதைக் கம்பன்,

> " 'எடுத்த போர், இலங்கை வேந்தன் மைந்தனேடு இளையகோவுக்கு
> அடுத்தது' என்று, என்னை வல்லை அழைத்திலை, அரவின்பாசம்
> தொடுத்த கை தலையினேடும் துணித்து, உயிர்குடிக்க; என்னைக்
> கெடுத்தனை; வீடணு! நீ" என்றனன்—கேடு இலாதான்.

என்று பாடுவான்.

வீடணனை இராமன் கோபித்துக் கொள்கிறுன். 'இலக்குவனுக்கும் இந்திரஜித்துக்கும் போர் தொடங்கிற்றென்பதை என்னிடத்தில் சொல்லி நீ என்னை அழைக்கவில்லையே? அழைத்திருந்தால், நாகபாசத்தைத் தொடுத்த கையையும், தலையையும் துண்டித்து இந்திரஜித்தினுடைய உயிரைக் குடித்திருப்பேனே!' என்று வீடணனிடம் கூறுகிறுன். அப்படிக் கூறுமிடத்து, 'என்னைக் கெடுத்தனை; வீடணு! நீ' என்றே சொல்லிவிடுகிறுன்.

தன்னிடத்தில் அடைக்கலம் புகுந்து, தன்னுல் சகோதரனுக ஏற்றுக்கொள்ளப்பட்டு, போரில் தனக்கு எல்லா உதவிகளையும் செய்துவந்த வீடணனைப் பார்த்து, 'என்னைக் கெடுத்தனை வீடணு! நீ' என்று இராமன் சொல்வது, மிகக் கடுமையான சொல். இராமனிடத்தினின்று, வீடணனைப் பற்றி, அத்தகைய சொல்லை யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

அறத்தினைப் பாவம் வெல்லாது!

இப்படி இராமன் கூறியவுடன், அழுது கொண்டிருக்கிற வீடணன் நடந்தவற்றை இராமனுக்குக் கூறிவிட்டுக் கடைசியாக,

"........................'எம் பெரும! யாரும்
இன் உயிர் துறந்தார் இல்லை; இறுக்கிய பாசம் இற்ருல்
புல் நுனைப் பகழிக்கு ஒயும் தரத்தரோ? புலம்பி உள்ளம்,
இன்னலுற்று அயரல்: வெல்லாது, அறத்தினைப் பாவம்'
என்ருன்."

இதனைக் கேட்ட இராமன், 'யார், இது கொடுத்த தேவன்? என்னை ஈது? இதனைத் தீர்க்கும் காரணம் யாது? நின்னல் உணர்ந்தது கழறிக் காண்' என்று சொல்லவே, நாகபாசத்தினுடைய வரலாற்றை வீடணன் விளக்குகிருன். இறுதியாக, கருடன் வர, நாகபாசம் நீங்கி, இலக்குவன் முதல் அனைவரும் விடுபட்டு எழுகிருர்கள்.

நீ உளை! தெய்வம் உண்டு!

போரின் பிந்திய பகுதியில் மாயா சீதையைக் கொன்று விட்டு, அயோத்திக்குச் செல்வதாகப் போக்குக் காட்டிவிட்டு, யாகம் செய்வதற்காக நிகும்பலைக்குச் செல்கிருன் இந்திரஜித்து. முதலில் உண்மையாகவே சீதை கொல்லப்பட்டுவிட்டாள், இந்திரஜித்தும் அயோத்தி நோக்கிச் சென்றுவிட்டானென்று நம்பி, அதனல் பெருந்துயரில் மூழ்கிய அனுமன், இராமனையும் அவ்வாறே துயருறச் செய்தபொழுது, 'இது மாயமாக இருக்கக் கூடும்' என்று வீடணன் சொல்லி, தான் அதைத் தெரிந்து வருவதாகக் கூறிவிட்டு, வண்டு உருக்கொண்டு அசோக வனத்துக்குள் சென்று, அங்குச் சீதை உயிருடனிருப்பதைக் கண்டு வந்து சொல்கிருன். அத்துடன், நிகும்பலைக்கு யாகம் செய்யச் செல்வதற்காக இந்திரஜித்துச் செய்த சூழ்ச்சியே அது என்பதையும் வீடணன் விளக்குகிருன். இப்படிச் சொன்ன வீடணனை இராமன் புகழ்கிருன். இதனைக் கம்பன்,

"வீரனும் ஐயம் தீர்ந்தான்: வீடணன் தன்னை மெய்யோடு
ஆர்வமும் உயிரும் ஒன்ற அழுந்துறத் தழுவி, 'ஐய!
தீர்வது பொருளோ, துன்பம்? நீ உளை; தெய்வம் உண்டு;
மாருதி உளன்; நாம் செய்த தவம் உண்டு; மறையும்
உண்டால்.' "

என்று கூறுவான்.

இந்திரஜித்தின் யாகம் முற்றுப்பெற்றால், யாரும் அவனை வெல்ல முடியாது; ஆகையினால், இலக்குவனை அழைத்துக் கொண்டு, அவனுடைய வேள்வியைச் சிதைத்து, அவனைப் போரில் கொன்று திரும்புவதற்கு, வீடணன் இராமனிடத்தில் அனுமதி கேட்கிறான். அப்படியே இராமனும் அனுமதி கொடுக்கிறான்.

இறுதியாக, நிகும்பலை யாகம் குலைக்கப் பெறுகிறது. இந்திரஜித்துக்கும் இலக்குவனுக்கும் பெரும்போர் நிகழ்கிறது. அந்தப் போரில் இந்திரஜித்து மாள்கிறான். இந்த முடிவை எய்துவதற்காக, இலக்குவன் பிறைமுக அம்பெய்தி இந்திரஜித்தினுடைய தலையை அறுத்துத் தள்ளுகிறான். அப்படி அம்பெய்யும் பொழுது,

" 'மறைகளே தேறத் தக்க, வேதியர் வணங்கற்பால,
இறையவன் இராமன் என்னும் நல்அற மூர்த்தி என்னின்,
பிறை எயிற்று இவனைக் கோறி' என்று, ஒரு பிறை வாய் வாளி
நிறை உற வாங்கிவிட்டான்—உலகு எலாம் நிறுத்தி
நின்றான்"

என்று கம்பன் பாடுவான்.

வீடணன் தந்த வெற்றி!

இந்திரஜித்தின் தலையை ஏந்தி அங்கதன் முன் செல்ல, இலக்குவன் பின்னால் வருகிறான். அப்படி வந்து, இந்திரஜித்தின் தலையை இராமன் திருவடிகளில் வைக்கிறான். அப்படி வைக்கப் பட்ட நிலையில், இராமன் எப்படியிருந்தானென்பதைக் கம்பன், அடியிற்கண்ட பாடலில் விளக்குவான்.

"தலையினை நோக்கும்; தம்பி கொற்றவை தழீஇய பொன் தோள்
மலையினை நோக்கும்; நின்ற மாருதி வலியை நோக்கும்;
சிலையினை நோக்கும்; தேவர் செய்கையை நோக்கும்; செய்த
கொலையினை நோக்கும்; ஒன்றும் உரைத்திலன், களிப்புக்
கொண்டான்."

இறுதியில், வீடணனை இராமன் புகழ்ந்து பேசி, இனிதிருக்கிறான். அதைக் கம்பன்,

" 'ஆடவர் திலக! நின்னால் அன்று; இகல் அனுமன் என்னும்
சேடனால் அன்று; வேறு ஓர் தெய்வத்தின் சிறப்பும் அன்று;
வீடணன் தந்த வென்றி, ஈது' என விளம்பி மெய்ம்மை,
ஏடு அவிழ் அலங்கல் மார்பன் இருந்தனன், இனிதின், இப்பால்."

என்று பாடுவான்.

இந்தப் பாடலிலே வீடணனைப் புகழ்ந்து இராமன் பேசுவது சிறப்புடைத்தாகும். முந்திய பாடலில், இராமன், தலையினை நோக்குகிறான்; தம்பியின் தோள்களை நோக்குகிறான்; மாருதியின் வலியினை நோக்குகிறான்; சிலையினை நோக்குகிறான்; தேவர் செய்கையை நோக்குகிறான்; செய்த கொலையினை நோக்குகிறான் என்று கம்பன் கூறுவான்.

தனித் தன்மை யாது?

இந்தப் பாடலில், இந்திரஜித்தைக் கொன்ற இந்த வெற்றி இலக்குவனாலன்று, அனுமனாலன்று, வேறொரு தெய்வத்தின் சிறப்பினாலுமன்று; 'வீடணன் தந்த வென்றி, ஈது' என்று கூறுகிறான். இப்படிக் கூறுவதனுடைய தனித்தன்மை என்னவென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வண்டு உருவிலே அசோக வனத்தினுள் நுழைந்து, சீதை உயிருடன் இருக்கிறாளென்பதையும், நிகும்பலைக்கு யாகம்

செய்யச் செல்வதற்காக இந்திரஜித்துச் செய்த சூழ்ச்சி அதுவென்பதையும் கண்டுவந்து சொன்னவன் வீடணன்.

உபசார வார்த்தையா?

ஆனல், பின்னர் நிகும்பலை யாகம் குலைக்கப்பட்டு, இலக்குவனுக்கும் இந்திரஜித்துக்கும் நடந்த பெரும்போரிலே, வென்றவன் இலக்குவன்தான். ஆகவே, இந்திரஜித்தைப் போரில் வென்றது, 'வீடணன் தந்த வென்றி' என்று இராமன் சொல்வானேயானல், அது உபசாரமாக இருக்குமே தவிர உண்மையில் இந்திரஜித்தைக் கொன்றது வீடணன் என்று சொல்ல முடியாது.

வருத்தத்தில் பிறந்தது

'ஏன் இந்த உபசாரத்தை இந்த வகையில் இராமன் சொல்ல வேண்டும்?' என்ற கேள்வி எழுவது நியாயமே. 'என்னைக் கெடுத்தனை வீடணா, நீ' என்று முன்னர் இராமன் வீடணனைக் குற்றம் சாட்டியதைப் பார்த்தோம். அந்தக் குற்றச்சாட்டு எந்நிலையில் உண்டானதென்றால், நாகபாசத்தால் கட்டுண்டு கிடந்த இலக்குவனைப் பார்த்து, இலக்குவன் இறந்துவிட்டானென்று வருந்திய இராமனுடைய வாயினின்றும் தோன்றியது.

நியாயமற்ற குற்றச்சாட்டு

ஆனல், அந்தக் குற்றச்சாட்டு நியாயமற்றது. உண்மையில், இலக்குவனோடு போர்செய்ய இந்திரஜித்து வந்துவிட்டானென்று, இராமனைப் போருக்கு வீடணன் அழைத்து வந்திருப்பானேயானல், அது இலக்குவனது வீரத்தை வீடணன் பழித்ததாக ஆகிவிடும். இந்திரஜித்தை வெல்வதற்குரிய வீரம் இலக்குவனுக்கில்லை என்று இராமனும் சொல்ல மாட்டான். இருந்தாலும், துக்கத்தின் எல்லையில் நின்ற இராமன், நியாயமில்லாத வகையில் வீடணனைக் குற்றம் சாட்டினன்.

இராமன் செய்த பிராயச்சித்தம்

இப்பொழுது, அப்படிச் சாட்டிய குற்றத்திற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்கின்ற வாய்ப்பொன்று உண்டாகியிருக்கிறது. அதுதான், எந்த இந்திரஜித்தின் நாகபாசத்தால் இலக்குவன் கட்டுண்டு கிடந்தானோ, அதே இந்திரஜித்தை இலக்குவன் போரில் வென்று, அவனுடைய தலையைத் துண்டித்து வந்திருக்கிறான். அந்தப் போரில் உறுதுணையாக இலக்குவனுக்கு வீடணன் இருந்திருக்கிறான். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, தன்னுடைய பிராயச்சித்தத்தை 'வீடணன் தந்த வென்றி, ஈது' என்று சொல்லி இராமன் செய்து முடிக்கிறான்.

இப்படியாகப் பல கட்டங்களில் கம்பன், கதையைச் சொல்லிக்கொண்டு போகும்பொழுதே, நாகரிகத்தையும், பண்பாட்டையும், சீலத்தையும் உணர்த்திக்கொண்டே போவதைக் காண்கிறோம்.

கம்பன் எனும் கலைக்களஞ்சியம்

கவிஞனின் கலைத் திறன்

ஒரு கவிஞன் எவ்வளவு திறமையுடையவனாக இருந்த போதிலும், அந்தத் திறமை வெளிப்படுவதற்குப் பொருத்த மான ஒரு வாய்ப்புக் கிடைக்கும்பொழுதுதான், அந்தத் திறமை யைப் பிறர் உணர்ந்து கொள்வதற்கும், பாராட்டுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதுமாத்திரமல்ல. அந்தத் திறமை என்றும் நிலைத்து நிலவவேண்டுமானால், எதைப் படைத்து அந்தத் திறமையை கவிஞன் வெளிப்படுத்துகின்றானோ, அந்தப் படைப்பும் இறவாத ஒரு கருத்தினையோ, அறத்தினையோ உள்ளடக்கிக் கொண்டதாக இருக்கவேண்டும். மிகச்சிறந்த திறமையும், அதனைப் பாடவோ, படைக்கவோ ஆளும் பொருளுக்கேற்ப, தன்னுடைய சிறப்பை இழக்கவோ, உயர்த் திக் கொள்ளவோ செய்யும்.

செயல்நோக்கமே சிறப்புத் தரும்

உதாரணமாக, கத்தியொன்றை மிகத் திறமையாகக் கையாளும் ஒருவனை எடுத்துக்கொள்வோம். அவனுடைய கத்தி ஒரு தீச்செயலுக்குப் பயன்படுத்தப் பெறும்பொழுது, அது ஒரு கொலையைச் செய்வதற்குக் கருவியாக ஆவதின் காரணமாக, அந்தத் திறமையும் கீழ்மையடைந்துவிடுகிறது. அதற்கு மாறாக, அதே கத்தியை ஓர் அறுவைச் சிகிச்சைக்காக ஒரு மருத்துவர் கையாண்டு, அதன் காரணமாக ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்குக் கருவியாக அமையும்பொழுது, அந்த

மருத்துவருடைய திறமையோடு கத்தியினுடைய உதவியும் பெருமையடைகிறது.

அதுபோலவே, ஒரு கவிஞனுடைய திறமை, அழிந்து போகின்ற ஒன்றிற்கோ, அல்லது கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டி, மனிதனுடைய உயர்ந்த இலட்சியத்திலிருந்து அவனைக் கீழே இறங்கச் செய்வதற்கோ உதவுமாயின், அந்தத் திறமை பயனற்ற திறமையாகவும், பழிப்புக்குரிய திறமையாகவுமே யாகும். அதற்கு மாறாக, அந்தத் திறமை இயற்கையின் எழிலை யும், மனித வர்க்கத்தின் உயர்வையும், படைப்புகளுக்கெல்லாம் மூலகாரணமான பரம்பொருளின் பெருமையையும் பன்னிப் பன்னிப் பேசவும், பாடவும் உதவுமாயின், எந்தப் பொருளைப் பற்றிப் பேசுவதற்கு அந்தத் திறமை பயன்படுத்தப்பெறுகிறதோ அந்தப் பொருளின் உயர்வுக்கேற்ப, அந்தத் திறமையும் உயர்ந்து மிளிரும்.

இறைமைக் கவிதைகள்

ஒரு திறமை எவ்வளவு உயர்வானதாக இருந்தபோதிலும், அதனுடைய உயர்வு மேலும் சிறக்கவும், உயரவும், அந்தத் திறமை தன்னை வெளிப்படுத்துவதற்கு எடுத்தாளும் பொருளைப் பற்றி நிற்கும். இறைவனைப்பற்றி ஒரு கவிஞன் தூய மனத் துடனும், ஓர்மையுடனும், ஈடுபாட்டுடனும் பாடுவானே யானால், அந்தக் கவிதை இறவாக் கவிதையாக ஆகிவிடுகின்றது.

காரணம் என்னவென்றால், என்றும் நிலைபெற்றிருக்கும் இறைமையைப் பாடுகின்ற கவிதையும் அந்த இறவாத் தன்மை யைப் பெற்றுவிடுகிறது. அதற்கு மாறாக, அழிந்துபோகின்ற, எளிதில் மறைந்துவிடக்கூடிய ஒன்றைப்பற்றி ஒருவன் கவிதை பாடுவானேயானால், அவன் பாடுகின்ற பொருளின் கதியே அவனுடைய கவித்திறனுக்கும் வந்து சேரும்.

காவிய ஓவியம்!

இந்தப் பின்னணியில், கம்பனுடைய கவிதைத் திறமையைப் பார்க்கும் பொழுது, இரண்டு உண்மைகள் தெற்றென

விளங்கும். முதலாவது, கம்பனுக்கு இயற்கையாகவே அமைந்திருந்த ஈடிணையற்ற கவிதைத் திறன்; இரண்டாவது, அந்தத் திறனை வெளியிடுவதற்கு அவன் தேர்ந்தெடுத்துக் கொண்ட மாபெரும் கதை.

ஓர் ஓவியன் ஒரு சிறிய திரைச் சீலைக்குள் தன்னுடைய திறமையைக் காட்டவேண்டிய அவசியம் ஏற்படுமானால், அந்தச் திரைச்சீலையில் அவன் மிகச் சிரமப்பட்டுத் தன்னுடைய சித்திரத்தை வரைய வேண்டும்; அப்படிச் சிரமப்பட்டு வரைந்த போதிலும், அளவில் மிகச்சிறியதாக இருப்பதின் காரணமாக, அந்தச் சித்திரத்தின் ஒவ்வொரு பகுதியும் சிறியதாக அமைந்து, அதை அனுபவிப்பதில் கஷ்டம் உண்டாகக் கூடும்.

காலத்தால் மாபெரும் காதை!

அதற்கு மாருக, ஒரு பெரிய திரைச் சீலையை எடுத்துக் கொண்டு, அதில், ஓர் ஓவியன் தன்னுடைய சித்திரத்தை வரைவானானால், அந்தச் சித்திரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தன்னுடைய முழுத் திறமையையும் காட்டுவதற்கு வாய்ப்புண் டாகும். அது மாதிரியே, தனக்கு இயற்கையாக அமைந் திருந்த கவிதைத்திறனை வெளிப்படுத்துவதற்குக் கம்பன் தேர்ந்தெடுத்த கதையோ மாபெரும் கதை.

இந்தக் கதை காலத்தினால் மாத்திரம் பெரிதல்ல; இடத் தினாலும் பெரிதாகிறது. இராமன் பிறப்பதற்கு முன்னால் தொடங்கும் கதை, இராமன் முடிசூட்டி, தன்னுடன் இருந்தவர் களுக்கு விடை கொடுத்தனுப்புகின்ற வரையில் நடை பெறுகிறது.

இதற்கிடையேயுள்ள காலம் நீண்ட காலம். இராமன் வனத்தில் கழித்த பதினான்கு ஆண்டுகள்தாம் பெரிதாகப் பேசப் பட்ட போதிலும், அவனுடைய பிறப்புக்கு முந்திய நிகழ்ச்சி களும், அவனுடைய பிறப்புக்குப்பின் அவன் சீதையை மணந்து

சிறிதுகாலம் அயோத்தியிலே வாழ்ந்ததும் பேசப்படவே செய்கின்றன.

எனவே, காலத்தினுல் இந்தக் கதை நீண்டது. அது போலவே, இடத்தினுலும் இந்தக் கதை மிகப் பெரியது. வடக்கேயிருக்கும் கோசல நாட்டிலிருந்து, ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள இலங்கை வரையில் செல்கிறது.

பாத்திரங்களின் மாகாதை

இதற்கு மேலும், அனுமன் மருத்து மலையைத் தேடிக் கொண்டு செல்கின்ற வகையில், கோசல நாட்டிற்கு வடக்கேயும் கதை சென்றுவிடுகிறது. எனவே, இடத்தினுலும் கதை பெருங்கதையாக ஆகிவிடுகிறது.

மூன்ருவதாக, இந்தக் கதையில் பங்குபெறும் பாத்திரங்கள். இவற்றில் மனிதர்கள் மாத்திரம் பங்கு பெறுவதில்லை. விலங்குகள் பங்கு பெறுகின்றன; பறவைகள் பங்குபெறுகின்றன; அரக்கர்கள் பங்குபெறுகிருர்கள்; மனிதர்கள், இடையேயும் மன்னர்கள் யங்குபெறுகிருர்கள்; சாதாரண மக்களும் பங்கு பெறுகிருர்கள். ஆகவே, பல வர்க்கத்தைச் சேர்ந்த உயிரினங்கள் கதையில் பங்கு பெறுகின்றன. அதன் காரணமாகவும் கதை பெருங்கதையாக ஆகிறது.

இத்தனை வாய்ப்புக்களும் ஒருங்கே சேர்ந்த கதையைக் காப்பியமாகப் பாட வந்த கம்பனுக்குத் தன்னுடைய திறமை முழுவதையும் துல்லியமாகவும், நுண்மையாகவும் காட்டுவதற்கு வாய்ப்புக் கிட்டிவிடுகிறது.

கவின்மிகு காப்பியப் பொருள்

மன்னர்களைப் பாடுவதற்கும், பாமர மக்களைப் பாடுவதற்கும், விலங்கினங்களைப் பாடுவதற்கும், பறவையினத்தைப் பாடுவதற்கும், அரக்கர் இனத்தைப் பாடுவதற்கும், அந்தந்த

இனத்தவருடைய உயர்ந்த பண்புகளையும், தாழ்ந்த குணங்களையும் பாடுவதற்கும் வாய்ப்பு கிட்டிவிடுகிறது. இவ்வளவு பெரியதொரு கதையைக் கம்பன் தன்னுடைய காப்பியத்தின் பொருளாக தேர்ந்தெடுத்திருக்காவிட்டால், அவனுடைய திறமை இவ்வளவு முழுமையாக மிளிர்ந்திருக்குமா என்பது ஐயப்பாட்டிற்குரியதே யாகும்.

எந்தக் கதையைச் சொல்லத் தொடங்குபவனும், ஒரு நாடக ஆசிரியனாக இருக்க வேண்டும். ஒரு பாத்திரத்தினுடைய சொல்லும் செயலும், இன்னொரு பாத்திரத்தினிடத்து எதிரொலிகளை உண்டாக்கும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு பாத்திரம் எதை நினைக்கிறது, எதைச் செய்கிறது, அப்படி நினைப்பதற்கும், செய்வதற்கும் எது காரணமாக அமைந்திருக்கிறது ஆகியவற்றை அவன் விளக்கவேண்டிய அவசியம் இருப்பதால், மனிதத் தன்மையை முழுமையாக உணர்ந்தவனாக இருப்பதோடு, மனோதத்துவ நிபுணனாகவும் இவன் இருக்க வேண்டியிருக்கிறது. இவ்விரு பண்புகளும் எந்த நாடக ஆசிரியனுக்கும் மிக்க அவசியத் தேவைகளாகும். இந்தப் பண்புகளைக் கம்பன் பெருத்த அளவிலே பெற்றிருந்தான் என்பது அவனுடைய காப்பியப் போக்கில் நன்றாகத் தெரிகிறது.

நாடும் நாட்டமும்

இது மாத்திரமல்ல; இராமாயணம் போன்ற ஒரு காப்பியத்தை அவன் பாடப் புகும்பொழுது, பல பாத்திரங்களைப் பற்றிப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டு, பல தேசங்களைப் பற்றியும் பேசவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அப்படி அவன் பேசுகின்ற தேசங்களை நான்கு தேசங்களாக நாம் பிரித்துக் கொள்ளலாம்.

முதலாவது, கோசல நாடு; இரண்டாவது, குகனுடைய நாடாகிய சிருங்கிபேரம்; மூன்றாவது, குரங்குகளுடைய நாடாகிய கிஷ்கிந்தை; நான்காவது, அரக்கர்களின் நாடாகிய இலங்கை.

இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் வாழ்வு எப்படி அமைந்திருந்தது; நகரங்கள் எப்படி அமைக்கப் பெற்றிருந்தன; பல பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் எந்தெந்த நாடுகளில் எப்படி வாழ்ந்தார்கள்; அவர்களுடைய சொல்லும், செயலும், குணமும், தன்மையும் எவ்வாறு இருந்தன என்பதை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு உண்டாகிவிடுகிறது.

இந்த நான்கு நாடுகளினுடைய தன்மைபற்றியும், அந் நாடுகளின் தலைநகரங்களைப்பற்றியும், அந்த நகரங்களின் அமைப்பைப்பற்றியும், அந்த நகரங்களில் வாழ்ந்த மக்களைப் பற்றியும் பேசுவதற்கு அவசியமும், வாய்ப்பும் கிட்டி விடுகின்றன. அப்படிக் கிட்டும்பொழுது, அந்தந்த நாடுகளை விவரிக்கவும், விளக்கவும் வேண்டிய அவசியம் கவிஞனுக்கு உண்டாகிறது.

இந்த விளக்கமும், வருணனையும் ஒரே மாதிரியாக இருக்குமானல், படிப்பவர்களுக்குச் சலிப்புத் தட்டிவிடுவதோடல்லாமல், எந்த இனத்தைப்பற்றி அவன் பாடப் புகுந்தானே அந்த இனத்திற்கும் பெருமையளித்ததாக ஆகாது.

ஐவேறு நாடுகள்

ஆகவே, கோசல நாட்டைப்பற்றிப் பேசும் பொழுதும், அந்த நாட்டு மக்களைப்பற்றிப் பேசும் பொழுதும், அந்த நாட்டின் தலைநகராகிய அயோத்தியைப்பற்றிப் பேசும் பொழுதும் கவிஞன் ஒரு மாதிரியாகப் பாடுகிறான். இதற்கு மையக் கருத்தாக அமைவது இந்தக் கோசல நாட்டின் மன்னனாகிய, தசரதனின் திருமகன், காப்பிய நாயகன், அறத்தை நிறுத்தத் தோன்றுகிறான் என்பதாகும்.

அதற்கடுத்தாற்போல் ஜனகனுடைய விதேக நாட்டையும், அந்த நாட்டின் தலைநகராகிய மிதிலையைப் பற்றியும் கவிஞன் பேசவேண்டியிருக்கிறது. ஆனல், இந்த நாட்டையும், அதன் தலைநகரையும், அங்கு வாழ்ந்த மக்களையும் பற்றிப் பேசும்

பொழுது வேறொரு மையக் கருத்தை மனத்திற்கொண்டு கவிஞன் பாடவேண்டிய அவசியத்திற்குள்ளாகிறான்.

இங்குதான் காப்பியத் தலைவி தோன்றிக் காப்பியத் தலைவனை அடையப் போகிறாள். ஆக, இந்த நிகழ்ச்சிக்கேற்ப• சூழ்நிலை பொருந்துமாறு, கவிஞனுடைய வருணனை அமைய வேண்டும்.

அடுத்து நாம் காணப்போகின்ற நாடு சிருங்கிபேரம். அது வேடர்கள் வாழ்கின்ற நாடு. அந்த வேடுவர்கள் தலைவனான குகனையும், அவனோடு வாழ்ந்த மக்களையும், அவர்களுடைய பண்புகளையும், செயல்களையும் கவிஞன் பாடவேண்டும்.

இந்த வருணனையும், விளக்கமும் கதைத் தொடர்ச்சிக்கு ஒத்ததாக அமையவேண்டும். அதற்கேற்பவே கவிஞன் செய்கிறான்.

அடுத்து, குரங்குகள் ஆட்சி நடக்கும் கிஷ்கிந்தைக்கு வருகிறோம். கிஷ்கிந்தை நாடு, கிஷ்கிந்தை நகரம், அந்த நாட்டினுடைய மன்னன், அந்த நாட்டின் மக்கள், அவர்கள் வாழ்ந்த முறை ஆகியவற்றைப் பற்றி கவிஞன் பாடவேண்டி யிருக்கிறது. இங்கும் கதைத் தொடர்ச்சிக்கேற்பவே அவன் பாடவேண்டும்.

இறுதியாக, இலங்கைக்கு வருகிறோம். அங்கே அரக்கர் களுடைய ஆட்சியைப் பார்க்கிறோம். அவர்களுடைய ஆட்சி எப்படி உண்டாயிற்று, அந்த ஆட்சியினுடைய செல்வாக்கு எத்தகையது, அந்தச் செல்வாக்குக்கேற்ப இலங்கை நாடும், இலங்கை நகரமும் எவ்வாறு பொலிந்தன, அந்த நாட்டிலும் நகரிலும் வாழ்ந்த அரக்கர்கள் எப்படி இருந்தார்கள் என்பதைப் பற்றிக் கவிஞன் பேசவேண்டியிருக்கிறது.

அறிந்தவன் தெரிந்தவன்

இவ்வளவையும் திறம்பட ஒரு கவிஞன் பாடவேண்டு மானால், அவனுக்கு கவித்திறன் இருந்தால் மாத்திரம் போதாது,

மன்னர்களையும், சாதாரண மக்களையும், வேடுவர்களையும், பறவைகளையும், விலங்குகளையும், அரக்கர்களையும் பற்றி அவன் நன்கு அறிந்தவனாகவும் இருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், குணாதிசயங்கள், செயல்திறன், சிந்தனாசக்தி ஆகிய அனைத்தைப் பற்றியும் அவன் தெரிந்தவனாக இருக்கவேண்டும்.

இவற்றிற்கும் மேலாக வேறொன்றைப் பற்றியும் அவன் தெரிந்திருக்க வேண்டும். அதற்கேற்பவே கதையின் போக்கும் அமைந்திருக்கின்றது. அயோத்தி நகரை விட்டுப் புறப்பட்ட இராமன் இறுதியிலே இலங்கையில் புகுந்து போர் புரிகிறான். ஆகவே, அயோத்தி நகரத்திற்கும் இலங்கைக்குமிடையேயுள்ள பூப்பிரதேசம் முழுவதையும் அவன் அறிந்தவனாக இருக்க வேண்டும். அப்படியானால், அவனுக்குப் பூகோளம் தெரிந்திருக்க வேண்டும்; சரித்திரம் தெரிந்திருக்க வேண்டும்; தாவரவியல் தெரிந்திருக்க வேண்டும். அவை தெரியாமல் தன்னுடைய பணியினை அவன் சிறப்பிக்க முடியாது.

நாட்டியல்பு காட்டுவான்

அதற்கு மேலும் இந்த நிலப்பரப்புகளையும், இவற்றில் இடம்பெற்றிருக்கும் ஜீவராசிகளையும், தாவர வர்க்கத்தைப் பற்றியும் பேசுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கதையில் கிடைத்து விடுகின்றன. கிட்கிந்தா காண்டம், நாடவிட்ட படலத்தில், கிட்கிந்தையிலிருந்து இலங்கை வரையிலுள்ள நிலப்பரப்பையும், அதில் வாழும் மக்களையும், ஆங்காங்கு வனங்களில் வாசம் செய்யும் முனிவர்களையும், பல நாடுகளில் ஓடும் நதிகளையும், அந்த நாடுகளில் வளர்ந்து கொழிக்கும் செடி, கொடிகளையும் விவரமாக எடுத்துப் பேசுவதற்கு கவிஞனுக்கு வாய்ப்பு கிடைத்துவிடுகிறது.

இதே காண்டத்தில் ஆறு செல் படலமும் அமைந்திருக்கின்றது. அது நாடவிட்ட படலத்தில் காணப்படும செய்திகளை நிரப்புவதாகவும், அவற்றுக்குத் துணை நிற்ப

தாகவும் அமைந்திருக்கிறது. சுந்தர காண்டத்தில் காணும் கடல் தாவு படலம் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே யுள்ள கடல்பரப்பையும், அதைத் தாண்டும் வகையில் அனுமன் செய்த அற்புதச் செயல்களையும் விளக்கிக்காட்ட உதவுகிறது. இதே காண்டத்தில் இடம்பெற்றிருக்கும் ஊர் தேடு படலம் இலங்கை நாட்டையும், இலங்கா நகரையும் மிகத்தெளிவாக வும், நுணுக்கமாகவும் வருணிப்பதற்குக் கவிஞனுக்கு வாய்ப்பைக் கொடுத்துவிடுகிறது.

வீரத்தில் விவேகம்

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, ஆறுவது காண்ட மாகிய 'யுத்த காண்டம்' பற்பல வழிகளில் கவிஞனுடைய திறமையினை வெளிக்காட்டுவற்கு வாய்ப்பினை நல்குகிறது. யுத்த காண்டத்தில் வீரமே பெருத்த அளவில் பேசப்படு மாயினும், இந்த வீரத்திற்கிடையே மன்னனுடைய மந்திராலோசனை, வீரர்களுடைய பராக்கிரமச் செயல்கள், அவர்களுடைய மாயப்போர், உண்மை வீரத்தின் பண்புகள், தியாகம், சரணாகதித் தத்துவத்தின் சிறப்பு ஆகிய அனைத்தை யும் பற்றிக் கவிஞன் பேசிவிடுகிறான்.

மணக்கும் இறைஞானம்

இவையெல்லாம் போதாதென்று கவிஞனுடைய பொறி யியல் அறிவையும், விஞ்ஞான அறிவையும், வேறு சில நிகழ்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு தேர்மேல் ஏறி ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்றதும், பின்னர் இராவணன் வதைக்குப்பிறகு, இராமன், சீதை முதலியோர் இலங்காபுரியிலிருந்து அயோத்தி நகருக்கு புஷ்பக விமானம் மூலமாகத் திரும்பி வந்ததும், கவிஞனுடைய பொறியியல் அறிவை விளக்குவதற்கு உதவுகின்றன.

இரணியன் வதைப் படலத்தைக் கவிஞன் அற்புதமான இறை ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு உபயோகப்படுத்திக் கொள்கிறான்,

தர்மத்தின் குரல்

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, வேருெரு கருத்தை வலியுறுத்த வேண்டும். நம் நாட்டிலே தோன்றிய எந்தக் கதையும் பொழுது போக்கிற்காகத் தோன்றியதல்ல. நிரந்தர மான, என்றும் அழியாத, ஓர் உண்மையை, ஓர் அறத்தை வலியுறுத்துவதற்காகவே இத்தகைய கதைகள் தோன்றியிருக் கின்றன.

எனவே, இராமாயணமும் இத்தகைய உண்மைகளை வலியுறுத்துவதற்காகத் தோன்றிய கதையாதலின், அதைப் பாடும் கவிஞனும் இத்தகைய உண்மைகளைப் பாடியாக வேண்டும்; அப்படியே பாடவும் செய்கிருன்.

இந்தக் கதையினூடே அங்குமிங்கும் மனித வாழ்க்கையின் உறுதிப்பாடுகளைச் சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் கம்பன் வலியுறுத்தத் தவறவில்லை.

நடுநாயகக் கருத்து

கம்பனுடைய காப்பியம் முழுவதையும் படித்த பிறகு, அதனுடைய மையக் கருத்து என்னவென்று சிந்தித்துப் பார்ப்போமாளுல், அது இறைவனிடத்து உள்ள பக்தியையும், அந்த இறைவன் யாவற்றையும் காத்து இரட்சிப்பவன் என்ற நம்பிக்கையையும், 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்பதே இறைவன் நிர்ணயித்திருக்கும் விதியாகும் என்பதை யும், அந்த இறைவன் நமக்கு அளித்திருக்கின்ற அருட்கொடை களுக்காக நாம் செய்யவேண்டிய நன்றிக் கடன் என்ன என்பதையும் விளக்குவதே என்பது தெற்றென விளங்கும்.

கம்பன் காட்டும் திறமைக் கூறுகளையும், அவை மிளிரும் கதைப்பகுதிகளையும் முழுமையாக விளக்க வேண்டுமாளுல் பல நூல்கள் எழுதவேண்டும். உண்மையில், கம்பனுடைய கவிதை ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கொடுப்பதற்கு ஒரு நூல் தேவையாகிறது. அந்த அளவுக்கு அவனுடைய கவிதா

விலாசம் ஒளிர்கிறது. என்றாலும், நாம் இதுகாறும் எடுத்துக் காட்டிய அவனுடைய திறமையை விளக்கும் வகையில், அவனுடைய ஓரிரு பாடல்களை உற்று நோக்குவது சாலப் பொருத்தமாகும்.

வானரப் பெரும்படை

வாலி வதைக்குப் பின்னர், கார் காலம் கடந்து படைகளோடு வருவதாகச் சொன்ன சுக்கிரீவன் அப்படிச் செய்யத் தவறிவிட்டான். சினம் கொண்ட இராமன், இலக்குவனைக் கிட்கிந்தைக்கு அனுப்புகிறான். பிறகு சுக்கிரீவன் தன்னுடைய தவறினை உணர்ந்து படைகளை திரட்டுகிறான். அவனால் திரட்டப்பெற்று பெரும் திரளாக வந்து சேர்ந்த படையினை இராம-இலக்குவர் காண்கிறார்கள். அப்படிக் கண்டவிடத்து, இராமன் இலக்குவனைப் பார்த்து என்ன சொன்னான் என்று, கவிஞன் கூறுவான். அதை இங்கே காண்பது பலனுடைத்தாகும்.

இப்படி இராமன் கூறத் தொடங்கியதைக் கவிஞன்,

"விண்ணின், தீம்புனல் உலகத்தின், நாகரின், வெற்றி
எண்ணின், தன் அலது ஒப்பு இலன் என நின்ற இராமன்,
கண்ணின், சிந்தையின், கல்வியின். ஞானத்தின், கருதி,
அண்ணல்—தம்பியை நோக்கினன், உரைசெய்வ தானான்:"

என்று பாடுவான்.

'இராமன்...அண்ணல்—தம்பியை நோக்கினன், உரைசெய்வதானான்' என்ற நான்காம் அடிதான் இராமனுடைய செயலைக் கூறுகிறது. ஆனால், முதல் மூன்று அடிகளும் அப்படி உரைசெய்த இராமன் எத்தகையவன், எதைக் கருதி உரை செய்பவனானான் என்பதை விளக்குகின்றன.

தன் அலது ஒப்பிலான்!

முதலிரண்டு அடிகள் உரை செய்த இராமன் எத்தகையவன் என்பதைக் குறிப்பிடுகின்றன. அவன் 'தன் அலது

ஒப்பு இலன் என நின்ற இராமன்'. 'தனக்கு நிகர் தானே என்று சொல்லுமாறு, வேறு எந்த உபமானப் பொருளையும் பெறாத இராமன்' என்பதுதான், இந்தச் சொல்லாட்சியினுடைய பொருள். எதில் ஒப்பில்லாதவன்? வெற்றியில் ஒப்பில்லாதவன். அந்த வெற்றி எத்தகையது என்பதை இந்த வரிகள் மேலும் விளக்குகின்றன. 'விண்ணின்', அதாவது, விண்ணுலகத்திலும், 'தீம்புனல் உலகத்தின்', அதாவது, இனிய கடல்சூழ்ந்த நில உலகத்திலும், 'நாகரின்' அதாவது, நாகர்கள் வசிக்கின்ற பாதாள உலகத்திலும், 'வெற்றி எண்ணின்' வெற்றி கொள்ளும் திறமை பற்றி ஆராய்ந்தால், தன் அலது ஒப்பு இலன் என நின்ற இராமன். அத்தகைய வெற்றி வீரன்தான் இப்பொழுது தன் தம்பியிடம் பேசுகிறான்.

கருதிப் பேசுவான்

அப்படி பேசுவதற்கு முன்னால் கருதிப் பேசுகிறான். எதைக் கருதிப் பேசுகிறான்? கண்ணின், சிந்தையின், கல்வியின், ஞானத்தின் கருதிப் பேசுகிறான். தன்னெதிரே இருக்கும் சேனையைக் காண்கிறான்; ஆகையினால் கண்ணின் கருதுகிறான். அந்தச் சேனையினுடைய தன்மையையும், பரப்பையும், அது வந்து சேர்ந்த வேளையையும் எண்ணுகிறான்; ஆகையினால் சிந்தனையினால் கருதுகிறான்; கல்வியாலும் கருதுகிறான். 'கல்வி' என்பது கற்றதின் பயனாகப் பெற்ற அறிவாகும். அந்த அறிவின் துணை கொண்டும் கருதுகிறான். இவையெல்லாவற்றிற்கும் மேலாக, ஞானத்தின் துணைகொண்டும் அவன் கருதுகிறான். இங்கே குறிப்பிடப்படும் ஞானம் அவனிடத்தே இயல்பாய் அமைந்த அறிவாகும். ஆக, அவன் கருதுவதற்குத் துணை புரிபவை அவன் கண், அவன் சிந்தை, அவன் கல்வி, அவன் ஞானம் ஆகிய நான்குமாகும். இந்த நான்கினாலும் கருதித் தான் இராமன் பேசலுற்றான்.

இந்தப் பீடிகையே மிகப் பலமாகவிருப்பதை நாம் உணர்கிறோம். 'இராமன் தன் தம்பியாகிய இலக்குவனிடத்தில்

பேசினன்' என்று சொன்னலே போதும். ஆனல், அவன் எத்தகைய இராமன் என்றும், அவன் எதைக் கருதிப் பேசினன் என்றும் கவிஞன் சொல்கிருன். அவன் எத்தகைய இராமன் என்று கூறுமிடத்து அவனுடைய வெற்றியைப் பற்றிப் பேசுகிருன். அவன் எதைக் கருதிப் பேசினன் என்னும் பொழுது, அவனுடைய காட்சி, சிந்தை, கல்வி, ஞானம் ஆகிய நான்கையும் குறிப்பிடுகிருன். இத்தகைய பீடிகையோடு இராமனைப் பேசவைக்கும் கம்பன், அந்த இராமனுடைய பேச்சினை மிகமிக உயர்வானதாகத்தான் ஆக்குவான் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயமேயாகும்.

முடிவுற யாவரே காண்பார்!

இந்த எதிர்பார்த்தலோடு, அவன் என்னதான் தன்னுடைய தம்பியிடத்தில் சொன்னன் என்பதை இப்பொழுது பார்க்கலாம்.

அடல் கொண்டு ஓங்கிய சேனைக்கு, நாமும் நம் அறிவால்
உடல் கண்டோம்; இனி முடிவு உள காணுமாறு உளதோ?—
மடல் கொண்டு ஓங்கிய அலங்கலாய்!—மண்ணிடை மாக்கள்,
'கடல் கண்டோம்' என்பர்; யாவரே முடிவு உறக் கண்டார்?

என்பது, இராமன் இலக்குவனுக்குக் கூறியதை எடுத்துக் காட்டும் முதற் பாடல்.

எத்தகைய இராமன் பேசினன் என்பதை முந்தின பாடலில் கண்டோம். எத்தகைய தம்பியிடத்தில் அவன் பேசினன் என்பதை இந்தப் பாடலில் காண்கிருேம். 'அண்ணல்', அதாவது 'பெருமையிற் சிறந்தோன்' என்று முந்தின பாடலிலேயே குறிப்பிடப் பெற்றுவிட்டான். இப்போது 'மடல் கொண்டு ஓங்கிய அலங்கலாய்' என்று இராமன் தன் தம்பியை விளிக்கிருன். இந்தச் சொற்ருெடருக்கு 'இதழ்களைக் கொண்டு சிறந்துள்ள மலர்மாலை அணிந்தவனே' என்பதுதான் பொருள்.

இங்கே குறிப்பிடப்படும் மலர்மாலை இலக்குவனுடைய தோற்றத்தின் அழகை மாத்திரம் உணர்த்தி நிற்கவில்லை. அவனுடைய வீரத்தின், வெற்றியின் அறிகுறியாகவும் அம்மலர் மாலை இருக்கிறது. ஆகவே, எந்த உலகத்திலும் வெற்றியில் தன் அலது ஒப்பு இலன் என்று நின்ற இராமன் பேசுவதும், அதற்குப் பொருத்தமான வீரமும், வெற்றியும் கொண்ட தம்பியிடமாகத்தானிருக்க முடியும். அத்தகைய தம்பியை விளித்துத்தான் இப்பொழுது அவன் பேசுகிறான். பேசுவதோ தன் முன் பரந்து கிடக்கும் சேனையைப் பற்றி. அந்தச் சேனையைப் பற்றி என்ன பேசுகிறான்?

அடல்கொண்டு ஓங்கிய சேனை

'அடல் கொண்டு ஓங்கிய சேனைக்கு, நாமும் நம் அறிவால் உடல் கண்டோம்' என்பதாகும். 'அடல்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'வலிமை' என்றுதான் பொருள். 'நம்முன் பரந்து கிடக்கும் சேனை வலிமைகொண்ட சேனை. அந்தச் சேனையி னுடைய உடலை நாம் கண்டோம்' என்று இராமன் சொல் கிறான். இங்கே 'உடல்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்? நாம் பொதுவாக 'உடல்' என்ற சொல்லை உருவம் முழுவதை யும் குறிப்பிட ஆண்டபோதிலும், உடல் என்ற சொல் பெரும் பாலும் நடு இடத்தையே குறிக்கும். தலை மேலேயும், கால்கள் கீழேயுமிருக்க, இடையேயுள்ள பகுதியைத்தான் உடல் என்ற சொல் குறிக்கும். ஆக, இப்பொழுது இராமன் சொல்வது இந்தச் சேனையினுடைய உடலைத்தான் கண்டோம் என்பது. அந்த உடலைக்கூட, 'நாம் நம் அறிவால் கண்டோம்' என்று தான் கூறுகிறான்.

நடுவையே கண்டோம்!

முந்தின பாடலில் கண், சிந்தை, கல்வி, ஞானம் ஆகிய நான்கினைக் கவிஞன் குறிப்பிட்டதைக் கண்டோம்.

இப்பொழுது இராமன் வாயிலாக, 'நம்முன் பரந்து கிடக்கும் சேனையின் நடுவை அறிவால் கண்டோம்' என்றுதான் பேசுகிறான். அதாவது, கண்ணால் கண்டோம் என்று அவன் பேசவில்லை என்பது நோக்கத்தக்கது. கண்ணால் கண்டோம் என்று பேசாமல், அறிவால் கண்டோம் என்று பேசுவதிலேயே அந்தச் சேனையினுடைய பரப்பு ஓரளவுக்கு விளக்கி வைக்கப் பெறுகிறது.

இப்படி நடுப்பாகத்தையே அறிவினால்தான் காண முடியும் என்ற நிலையிருக்கும் பொழுது, அந்தச் சேனையினுடைய முடிவை, அதாவது எல்லையைக் கண்ணால் காணமுடியுமோ? என்று கேட்கிறான். இதைத்தான் 'இனி முடிவு உள காணுமாறு உளதோ?' என்ற வினா ஏந்தி நிற்கிறது. 'உடல்' என்ற சொல் முன்னர் ஆளப்பெற்று, 'முடிவு' என்ற சொல் பின்னர் ஆளப் பெற்றிருப்பதை நோக்குங்கால், 'உடல்' என்பது, நடுப் பகுதியைக் குறிக்கத்தான் ஆளப் பெற்றிருக்கிறது என்பது தெளிவாகும்.

உவமை நுட்பம்

இப்படிக் கூறிய இராமன், தன்னுடைய கூற்றுக்கு ஓர் உவமையை எடுத்துக்காட்டுகிறான். அந்த உவமை நமக்கெல்லாம் மிகப் பழக்கமான உவமை. ஆனால், நுண்மையில் சிறந்த உவமையாகும்.

நம்மில் பலர் கடற்கரைப் பிரதேசங்களில் வசிக்கிறோம். வேறு சிலர் உள்நாட்டுப் பகுதியில் வசிக்கிறோம். உள்நாட்டுப் பிரதேசங்களில் நடைபெறும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் அங்கே பயிலும் மாணவர்களைப் பார்த்து, 'நீங்கள் கடலைப் பார்த்ததுண்டா?' என்று கேட்பது சாதாரண நிகழ்ச்சி. காரணம், ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்கள் அதிகமாகப் பிரயாணம் செய்திருக்க மாட்டார்கள்; ஆகையால், உள்நாட்டுப் பிரதேசத்தைவிட்டுக் கடற்கரைப் பிரதேசத்திற்குச் செல்ல அவர்களுக்கு வாய்ப்பு இருந்திருக்காது

என்பதுதான். ஆனால், அப்படி வாய்ப்பைப் பெற்ற ஒரு மாணவன் 'கடலைக் கண்டிருக்கிறேன்' என்று சொல்வான்.

கடல் கண்டதும் சேனை கண்டதும்

அதுமாத்திரமல்ல, கடற்கரைப் பிரதேசங்களில் வசிக்கின்ற பெரியவர்களும்கூட, 'கடலைக் கண்டிருக்கிறோம்' என்று சொல்வார்கள். கடற்கரையில் நின்றுகொண்டு, தங்களெதிரே பரந்து கிடக்கும் நீர்ப்பரப்பைக் கண்டு, தாங்கள் கடலைக் கண்டதாகக் கூறுவார்கள். ஆனால், பூவுலகில் கடலினுடைய பரப்பை நூல் மூலமாக அறிந்தவர்கள், கடற்கரையில் ஒரு சிறு பகுதியில் நின்றுகொண்டு 'கடலைக் கண்டோம்' என்று சொன்னால் எப்படியிருக்குமோ, அப்படியேதான் நாம் இங்கே நின்றுகொண்டு இந்தச் சேனையைக் கண்டோம் என்று சொல்வதும், என்று இராமன் கூறுகிறான்.

'மண்ணிடை மாக்கள்' என்ற சொற்கள் இப் பூவுலக மக்களைக் குறிக்கும். அத்தகைய மக்கள் 'கடல் கண்டோம்' என்று கூறுவார்கள் என்று இராமன் கூறுகிறான். ஆனால், அவர்கள் கடலைக் கண்டோம் என்று கூறினபோதிலும், உண்மையில் அவர்கள் கடலின் ஒரு மிகச் சிறிய பகுதியை மாத்திரம் கண்டார்களே தவிர, கடலைக் கண்டது இல்லை. கடலினுடைய பரப்பு அந்த அளவுக்கு இருப்பதின் காரணமாக, யாராலும் கடலினுடைய முழுமையைக் காண முடியாது.

நாம் கடற்கரையில் நின்றுகொண்டு, நம் கண்ணுக்கு எட்டின தூரம் வரையில் பார்வையைச் செலுத்தும்பொழுது கூட, நீர்ப்பரப்பு பரந்துகொண்டே போக, ஆகாயம் குவிந்து, எங்கோ தூரத்தில் அதைத் தொடுவது போலிருக்கின்ற ஒரு தோற்றத்தைத்தான் காண்போமே தவிர, கடலைக் கண்டோம் என்பதில்லை. இந்த மிகச் சாதாரண நிகழ்ச்சியை அற்புதமாகக் கையாண்டு, சுக்கிரீவன் சேகரித்த சேனையின் பரப்பினை இராமன் வாயிலாக விளக்குவதற்குக் கவிஞன் முற்படுகிறான்.

முடிவிலாப் பொருள்கள்

இங்கும் ஓர் அருமையைக் காணலாம். நாம் பார்த்த முதல் பாடலிலிருந்து இரண்டாவது பாடல் சிறந்து நிற்பதைக் காண்கிறோம். இந்த இரண்டாவது பாடலைவிட இதற்குப் பின்னால் வருகின்ற மூன்றாவது பாடல் மேலும் சிறந்து நிற்பதை நாம் இப்பொழுது காணலாம்:

"ஈசன் மேனியை, ஈர்—ஐந்து திசைகளை, ஈண்டு இவ்
ஆசு இல் சேனையை, ஐம் பெரும் பூதத்தை, அறிவை,
பேசும் பேச்சினை, சமயங்கள் பிணக்குறும் பிணக்கை,—
வாச மாலையாய்!—யாவரே முடிவு எண்ண வல்லார்?"

என்பதுதான் அந்த மூன்றாவது பாடல். 'வாச மாலையாய்!' என்று, தன் திருத்தம்பியை இராமன் விளிக்கிறான். அவ்வாறு விளித்துவிட்டு, 'ஆசு இல் சேனையை...யாவரே முடிவு எண்ண வல்லார்?' என்று கேட்கிறான். 'ஆசு' என்ற சொல்லுக்குக் குற்றம் என்று பொருள். இங்கே தங்கள் முன்னிருக்கும் சேனையைக் 'குற்றமற்ற சேனை' என்று குறிப்பிடுகிறான். காரணம், அந்தச் சேனை நிகழ்த்தப்போகும் அறச்செயலைக் கருத்தில் கொண்டுதான் அவ்வாறு சொல்கிறான். தன்முன் இருக்கும் இந்தக் குற்றமற்ற சேனையை 'யாவரே முடிவு எண்ண வல்லார்?' என்பதுதான் இராமனுடைய கேள்வி.

முந்தின பாடலில் 'முடிவு உள காணுமாறு உளதோ' என்று கேட்டான். இப்பொழுது, 'யாவரே முடிவு எண்ண வல்லார்?' என்றே கேட்கிறான். முந்தின பாடலில், கண்ணால் அந்தச் சேனையின் முடிவைக் காணமுடியாது என்று கூறின இராமன், இப்பொழுது அந்தச் சேனையின் முடிவை எண்ணிக் கூடப் பார்க்கமுடியாது என்று கூறுகிறான். இந்தக் கேள்வியில் அடங்கியிருக்கும் கருத்து உபமேயம். இதற்கு உபமானமாக ஆறு செய்திகளைக் குறிப்பிடுகிறான். எப்படி இந்தச் சேனையின் முடிவு எண்ணக்கூட முடியாமல் இருக்கிறதோ, அப்படி வேறு ஆறு செய்திகளுமிருக்கின்றன என்று, கவிஞன், இராமன் வாயிலாகக் கூறுகிறான்.

ஈசனின் திருமேனி

ஒன்று ஈசன் மேனி. இங்கே 'ஈசன்' என்ற சொல் இறைவனைக் குறிக்கிறது. இறைவனுக்கு உருவம் இல்லை; அவன் எங்கும் நிறைந்திருப்பவன் என்பது எல்லாச் சமயங்களின் இறுதி முடிவு. உருவம் இல்லாதவனாக ஈசன் இருப்பதின் காரணமாக, அவனுடைய உருவத்தின் முடிவை, எப்படி எண்ணிப் பார்க்க முடியும்?

பத்துத் திசைகள்

இரண்டாவது, 'ஈர்—ஐந்து திசைகள்'. எட்டுத் திசைகளோடு, மேல், கீழ் என்ற இரண்டையும் சேர்த்து, பத்துத் திசைகளை இங்கே கவிஞன் குறிப்பிடுகிறான். ஒரு திசையின் முடிவைக்கூட யாராலும் எண்ணிப் பார்க்க முடியாது என்றிருக்கும் பொழுது, பத்துத் திசைகளுடைய முடிவையும் எண்ணிப் பார்க்கக் கூடியவர் யார்?

ஐம்பெரும் பூதங்கள்

மூன்றாவதாக, ஐம்பெரும் பூதங்களைக் கவிஞன் குறிப்பிடுகிறான். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம். இவ் வைந்தனுடைய எல்லையையும் யாராலும் எண்ணிக்கூடப் பார்க்க முடியாது என்பது வெளிப்படை. உண்மையில், கடலினுடைய எல்லையைக் கண்டவர்கள் இலர் என்பதை முந்தின பாடலிலேயே கவிஞன் சொல்லிவிட்டான்.

எல்லையிலா அறிவு

இவற்றிற்கு மேலாக வேறு மூன்று செய்திகளைக் கூறுகிறான். ஒன்று, அறிவு. கூர்ந்து நோக்கும் பொழுது அறிவுக்கு எல்லையில்லை என்பது தெற்றென விளங்கும். குறிப்பாக விஞ்ஞான உலகிலே வாழும் நமக்கு இது மிகத் தெளிவாகிறது. அன்றன்றாடம் ஆராய்ச்சியின் காரணமாக மனிதன்

ஏதேதையோ கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறான். குழந்தை களுக்கு உணவை ஊட்டுவதற்குத் துணையாக 'அம்புலிமாமா' வாக இருந்த சந்திர மண்டலம், இப்பொழுது மனிதன் சென்று, இறங்கி, திரும்புகின்ற ஒன்றாக ஆகிவிட்டது. போகப்போக இது போன்ற எத்தனை மண்டலங்களையும், அவற்றின் தன்மை களையும் மனிதனுடைய அறிவு கண்டுபிடிக்கப் போகிறதோ தெரியாது. ஆகையினாலே எல்லையை எண்ணிக்கூட பார்க்க முடியாத ஒன்றாக அறிவைப்பற்றிக் கவிஞன் பாடுவதில் தனிச் சிறப்பு இருக்கத்தான் செய்கிறது.

வரையிலாப் பேச்சு

ஐந்தாவதாகக் கவிஞன் எடுத்துக் காட்டுவது பேசும் பேச்சினை. பேசுகின்ற பேச்சுக்கும் எல்லையில்லை என்பதை நாம் அனைவரும் அன்றன்றாடம் உணர்ந்து கொண்டுதானிருக் கிறோம். சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இது தெளிவாகும். ஆகையால் விளக்கம் தேவையில்லை.

சமயப் பிணக்கு

இவையெல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல வேறொன்றைக் கவிஞன் குறிப்பிடுகிறான். அதுதான், 'சமயங்கள் பிணக்குறும் பிணக்கு' என்பது.

கம்பனுடைய காப்பியத்தைப் படிப்பவர்கள் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்வார்கள். அதுதான், அவனுடைய காலத்தில் சமயப் பிணக்குகள் மலிந்திருந்தன என்பதும், அவற்றைக் கண்டு கவிஞன் பெரிதும் வருந்தினான் என்பது மாகும். எத்தனையோ சிறிய விஷயங்கள் குறித்து நம்மிடையே சமயப் பிணக்குகள் உண்டாவதை இன்றும் நாம் கண்டு கொண்டுதான் வருகிறோம். இந்தச் சமயப் பினக்குகள் எந்தெந்த வேளைகளில், எந்தெந்த உருவில், எதெதின் காரணமாகத் தோன்றும் என்பதை யாராலும் சொல்ல

முடியாது. ஆகையால்தான், இந்தப் பிணக்குகளின் எல்லையையும் யாரும் எண்ணிக்கூடப் பார்க்க முடியாதென்று மிக்க வருத்தத்துடன் கவிஞன் கூறுகிறான்.

கம்பன் கால நினைவுகள்

ஆக, இவையனைத்தையும் ஒருங்கே சேர்த்துப் பார்க்கும் பொழுது, கவிஞனுடைய இறைஞானம், அறிவியல், விஞ்ஞான அறிவு, மனோதத்துவ ஞானம் ஆகியவை எவ்வளவு நுண்மையானதாகவும், பரந்ததாகவுமிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

இவ்வளவு அற்புமாக இராமன் வாயிலாகப் பேசிய கம்பன், அடுத்த பாடலில் ஒன்றைச் செய்கிறான். எல்லை காண முடியாத இந்தச் சேனையினுடைய எல்லையைக் காண முற்படுவது, காரிய சுணக்கத்திற்குக் காரணமாகுமேயன்றி, வேறு எதற்கும் உதவாது என்பதை, இராமன் மூலமாக எடுத்துக் காட்டுகிறான்.

நாள் பல பெயரும்

இந்தச் சேனை முழுவதையும் கண்ட பிறகு, நாம் மேற்செய்யவேண்டிய காரியத்தில் இறங்குவோம் என்றால், 'நாள் பல பெயரும்' என்று கூறுகிறான். அதாவது, இந்தச் சேனையை முழுமையாகக் காண நாம் முயல்வோமானால் பலநாட்கள் அதற்காகும் என்பதை எடுத்துக் காட்டிவிட்டு, மேற்செய்ய வேண்டிய காரியத்தை இப்பொழுது தொடங்குவோம் என்பதுதான் இராமனின் வாக்கு.

இங்கு நாம் காணும் 'நாள் பல பெயரும்' என்ற கம்பனுடைய வாக்கு வேறொரு இடத்திலும் இடம்பெறுகின்றது. யுத்த களத்தில் கும்பகர்ணன் தோற்றமளிக்கிறான். அந்தக் கும்பகர்ணனை முதன்முதலாக இராமன் காண்கிறான். அவனுடைய உருவம் எவ்வளவு பெரியதாக இருந்தது என்பதை உணர்த்தும் வகையில், இராமன், 'தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின், நாள் பல கழியுமால்' என்று

கூறுவான். அதாவது, கும்பகர்ணனுடைய ஒரு தோளிலிருந்து பார்க்கத் தொடங்கி, அவனுடைய மறு தோளுக்குப் பார்வையைக்கொண்டு வருவதற்குப் பல நாட்கள் ஆகும் என்று கூறுவதின் மூலமாக, கும்பகர்ணனுடைய உருவத்தை அற்புதமாக விளக்கிவிடுகிறான் கவிஞன்.

இத்தகைய அற்புதங்கள், கம்பனுடைய காப்பியத்தில் மண்டிக்கிடப்பதின் காரணமாகத்தான், படிப்பவர்களை என்றும், எங்கும், இனியதொரு பரவசத்திலாழ்த்தும் பெறற்கரிய பொக்கிஷமாக அது அமைந்திருக்கின்றது.

சென்னை சின்மயா யுவகேந்திரா 22-2-1981 இல் 'கம்பர் தரும் காட்சி' என்ற ஒலி—ஒளிக் காட்சியைத் தொடங்கிய பொழுது வெளியிட்ட "கம்பர்" என்னும் மலரில் வெளியானது.

இருக்கிறதம்மா இவ்வுலகம்!

சொல்வளச் சொல்லாடல்

நாம் எழுத்திலும், பேச்சிலும் பல சொற்களை வழக்கின் காரணமாகப் பயின்று வருகின்றோம். அவற்றிற்குரிய பொருள்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கின்றோம் என்று சொல்வதற்கில்லை. அப்படிப் புரிந்து கொள்ளாததின் காரணமாகச் சிற்சில சந்தர்ப்பங்களில் எந்தப் பொருளை உணர்த்த விரும்புகின்றோமோ, அதற்குப் பொருத்தமான சொல்லை நம்மால் எடுத்தாள முடிவதில்லை.

'மொழி' என்பது எண்ணத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக உண்டான ஒரு கருவியே யாகும். அந்தக் கருவி, அதற்குரிய செயலைச் செய்யாவிட்டால், அது உண்டான நோக்கமே நிறைவேறாமல் போய்விடும் என்ற பொழுதிலும், நாம் ஒருவருக்கொருவர் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, நம்முடைய கருத்தை மற்றவர்க்கு விளக்குவதிலும், மற்றவர் கருத்தை நாம் அறிந்து கொள்வதிலும் வெற்றியடையவே செய்கின்றோம்.

சிற்சில சமயங்களில், இந்த வெற்றியை அடைவதற்கு ஒரு சொல்லுக்குப் பதிலாகப் பல சொற்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். ஆனால், எழுதும் பொழுதும், பேசும் பொழுதும் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயில்வோமானால், சிறப்புமிக்கப் பேச்சும், எழுத்தும் அமையும்; அதே சமயத்தில், கருத்தும் தெளிவாக விளங்கும்.

தோற்றமும் மறைவும்

இதனை விளக்குவதற்குப் பற்பல மேற்கோள்களைக் காண முடியும். பிறப்பு, இறப்பு; இவ்வுலகம், மறு உலகம்; பூமி, ஆகாயம்; நிலம், நீர் என்பன போன்ற சொற்களை நாம் மிகச் சாதாரணமாக அன்றாட 'வாழ்க்கையில் உபயோகிக்கத்தான் செய்கின்றோம். ஆனால் இவற்றினுடைய பொருளைத் திட்ட வட்டமாகப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்வதற்கில்லை. பிறப்பு, இறப்பு என்னும் பொழுது, இவை இரண்டும் இரு தொழில்களையோ, பண்புகளையோ உணர்த்தும் சொற்களாகவே அமைந்திருக்கின்றன.

ஒரு குழந்தை, தாயின் வயிற்றிலிருந்து வெளி வந்த உடனே, அது 'பிறந்தது' என்று கூறுகின்றோம். அதே குழந்தை, அப்பொழுதோ, பின்னர் வளர்ந்தோ மரணம் அடையும்பொழுது, அது 'இறந்தது' என்று கூறுகின்றோம். ஆக, இந்தப் பிறப்பு, இறப்பு என்ற சொற்களிலிருந்து எதை உணர்ந்துகொள்கின்றோம் என்றால், இரண்டு தொழில்களை அல்லது பண்புகளைத்தான் உணர்ந்து கொள்கின்றோம் என்று சொல்ல வேண்டும். 'பிறப்பு' என்பது தோற்றம். ஆக, முன்னால் நாம் கண்ணால் காணாத ஒரு குழந்தையைத் தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்த பிறகுக் காணுகின்றோம்; ஆகவே தோற்றமாகின்றது. அதே குழந்தை, அப்பொழுதோ, அல்லது பின்னர் வளர்ந்தோ இறக்கும்பொழுது, அது இறந்துவிட்டது என்று நாம் சொல்லுமிடத்து, அக் குழந்தை மறைந்துவிட்டது என்ற பொருளில் சொல்லவில்லை. அதற்கு நேர்மாறாக, அந்த உயிரற்ற சடலத்தைப் புதைக்கவோ, எரிக்கவோ செய்கின்ற வரையில், அவ்வுடலானது இருக்கத்தான் செய்கின்றது. இருந்தாலும், அது இறந்த உடலாக ஆகின்றது.

ஆக, 'இறப்பு' என்பதைப் 'பிறப்பு' என்ற சொல்லுக்கு நேரெதிர்ச் சொல்லாக நாம் இங்கே உபயோகப்படுத்துகிறோம் என்று சொல்லமுடியாது. உயிர் என்ற ஒன்று அவ்வுடலிலிருந்து நீங்கிய உடன், அந்தக் குழந்தையையோ, அது வளர்ந்து

பிறகு ஆன மனிதனையோ, இறந்துவிட்டான் என்று சொல்கின்றோம். அவ்வுயிரறற்ற உடல் சில காலம் இருக்கத்தான் செய்யும். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, அவ்வுயிரற்ற உடலைப் பதப்படுத்திப் பலகாலம் வைத்திருக்கவும் செய்யலாம்.

அப்படி யிருக்கும்பொழுது, 'இறப்பு' என்பதை, 'பிறப்பு' அல்லது 'தோற்றம்' என்பதற்கு நேர்மாறாக, 'மறைவு' என்று சொல்ல முடியாது. ஆனால், அந்த உடலில் இருந்து ஒன்று மறைந்துவிட்டது என்று வேண்டுமானால் சொல்லலாம். எனவே, பிறப்பு, இறப்பு என்பதை நாம் சர்வசாதாரணமாக எதிர்மாறான நிலையையோ, அல்லது பொருளையோ உணர்த்தும் வகையில் பயன்படுத்தினாலும், உண்மையில் அது அப்படியல்ல.

இவ்வுலகும் வேறுலகும்

அப்படியே இவ்வுலகம், மறுஉலகம் என்ற சொற்களும். இவ்வுலகம் என்னும்பொழுது எதைக் குறிக்கிறோம்? மறுஉலகம் என்னும்பொழுது எதைக் குறிக்கிறோம்? என்று சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒன்று மாத்திரம் நிச்சயம்: இவ்வுலகம் என்பதைப்பற்றி நாம் என்ன தெரிந்து கொண்டிருக்கின்றோமோ, அதைப்போல மறுஉலகம் என்பதைப்பற்றி நாம் தெரிந்து கொண்டிருக்கவில்லை. இந்தப் பூவுலகம் என்னும் பொழுது இந்நிலத்தையோ, இப்பூமியையோ, அல்லது இப்பூமியில் நாம்வாழ்கின்ற விதத்தையோ குறிப்பாகக் கொண்டாலும், மறுஉலகம் என்னும்பொழுது எதனைக் குறிக்கிறோம் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை; நாம் வாழ்கின்ற இம்மாதிரியான ஒரு நிலமோ அல்லது பூமியோ இருக்குமானால், அந்நிலத்திலோ பூமியிலோ இதுபோன்ற ஒரு வாழ்வு இருக்குமா? அல்லது வேறுவிதமான வாழ்வாக இருக்குமானால், அது எந்தவிதத்தில் வேறுபட்ட வாழ்வு? என்பதுபற்றி நிச்சயமாக நாம் தெரிந்திருக்கவுமில்லை; ஆகையால் சொல்வதற்கு வழியுமில்லை என்ற போதிலும், இவ்வுலகம், மறுஉலகம் என்ற

சொற்களை ஏதோ எதிர்மாறான இரண்டினை உணர்த்தும் வகையில் பயன்படுத்தவே செய்கின்றோம்.

வானமும் நிலமும்

அது போலவே, பூமி, ஆகாயம் என்று நாம் பயன்படுத்தும் சொற்களும். 'பூமி' என்னும்பொழுது, ஏதோ இந்நிலத்தை, தரையைக் குறிப்பிடுகின்றோம் என்று சொல்லலாம். ஆனால் 'ஆகாயம்' என்று சொல்லும்பொழுது அப்படி ஒன்றை நாம் குறிப்பிடுகின்றோம் என்று சொல்வதற்கில்லை. காரணம், நாம் கண்ணால் காணுகின்ற அளவுக்கும் அதற்கு அப்பாலும் ஆகாயத்திற்கு ஒரு எல்லையுண்டு, வரம்பு உண்டு என்று சொல்ல முடியாது. விண்வெளி என்றுதான் இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கின்றோம். இந்த விண்வெளி எந்த அளவுக்கு இப்பூமிக்கப்பால் பரந்து நிறைந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. பூமியிலிருந்து மற்றக் கிரகங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தத் தூரமும் எங்கோ ஓரிடத்தில் முடிவடைந்து, அந்த முடிவின் காரணமாக பூமியை, ஒரு வரையறைக்குட்பட்ட விண்வெளி சூழ்ந்து கொண்டிருக்கின்றது என்று சொல்வதற்கில்லை.

நீரும் நிலமும்

இதுபோலவே, நிலம், நீர் என்பன. கடற்கரையிலோ, நதிக்கரையிலோ, குளக்கரையிலோ நாம் நின்று கொண் டிருக்கும்பொழுது, நாம் நின்றுகொண்டிருக்கும் இடம் நிலமாகவும், நமக்கு எதிரிலிருப்பது நீராகவும் தென்படு கின்றன. ஆனால், அந்த நீருக்கடியிலும் நிலமேயிருக்கின்றது. எனவே, நிலம், நீர் என்று நாம் பிரித்துச் சொல்லும் பொழுதும்கூட, அந்த நீரும் ஒரு நிலப்பகுதியின் மேல் இடம் பெற்றிருப்பதாக ஆகுமே தவிர, நிலத்திற்கப்பாற்பட்ட தாக ஆகாது. நாம் எதை இப்பொழுது நிலம் என்று சொல் கின்றோமோ, அதுவே தோண்டப்படுமேயானால் நீர் வெளிவர,

அதுவும் நீர்ப்பகுதியாக ஆகும். எனவே, நீரின் அடிமட்டம் நிலமும், நிலத்துக்குக் கீழே நீரும், இரண்டும் பின்னிக் கொண்டும் இணைந்து கொண்டும் இருக்கின்றன. அதன் காரண மாக, நிலம், நீர் என்று நாம் பிரித்துச் சொல்லும் பொழுது, ஏதோ முழுமையாக வேறுபட்ட, தனித்திருக்கின்ற இரண்டு பொருள்களை நாம் குறிப்பிடுகின்றோம் என்று சொல்லிவிட முடியாது. என்றாலும், இவ்விதச் சிந்தனை எதுவுமின்றி, இந்தச் சொற்களையெல்லாம் நம்முடைய அன்றாட வாழ்வில் மிகச் சாதாரணமாக எவ்விதமான தங்குதடையுமின்றி பயன் படுத்திக் கொண்டேதான் வருகின்றோம். அப்படி பயன்படுத்திக் கொண்டுவருவது தவறு என்று சொல்வதற்கில்லையாயினும், இப்படி நாம் ஆளும் சொற்களின் பொருளை, உள்ளத்தே சிந்தித்துப் பார்க்க வேண்டுவது அவசியமேயாகும்.

‘உலகம்’ என்னும் ஒரு சொல்

இங்கு ‘உலகம்’ என்ற சொல்லினுடைய பொருளை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கலாம். ‘உலகம்’ என்ற சொல்லை எந்தப் பொருளிலே நாம் பயன்படுத்துகின்றோம் என்பது முதலிலே தோற்றும் கேள்வியாகும். இவ்வுலகம், மறுஉலகம் என்று நாம் முன்னர்ப் பார்த்ததிலேயே, ‘உலகம்’ என்ற சொல் அடங்கியிருக்கின்றது. அப்படி அடங்கியிருக்கும் ‘உலகத்தை’ காண்பதாயினும் சரி, அப்படியில்லாமல் வெறுமனே ‘உலகம்’ என்று நாம் சொல்வதைக் காண்பதாயினும் சரி, அது எதைக் குறிக்கின்றது என்று பார்ப்பது பயனுடைத்தாகும்.

வெறும் அகராதிகளையும், நிகண்டுகளையும் புரட்டிப் பார்ப்போமானால், ‘உலகம்’ என்ற சொல்லுக்குப் ‘பூமி’, ‘நிலப்பகுதி’ என்ற பொருள்களோடு வேறு பல பொருள்கள் இருப்பதையும் காண்போம். ‘ஆகாயம்’ என்ற பொருள் இச்சொல்லுக்கு உண்டு என்பதைப் பிங்கல நிகண்டிலிருந்து காணும்பொழுது, நாம் ஆச்சரியப்படவே செய்வோம். பூமிக்கு மாறானதாக ஆகாயத்தை எண்ணிக் கொண்டிருக்கும் நாம், ‘உலகம்’ என்ற சொல்லுக்கு இவ்விரண்டு பொருள்களுமே

யுண்டு என்னும்பொழுது ஆச்சரியப்படுவது ,நியாயமேயாகும். அதற்கும் மேலாக, இச்சொல்லுக்கு, 'திக்கு' என்ற பொருளும் உண்டு.

மக்கள் தொகுதி!

இவையல்லாமலும், இச்சொல்லுக்கு 'மக்கள் தொகுதி, என்ற பொருள் வேறு இருக்கின்றது. தொல்காப்பியம், சொல்லதிகாரம் 57—ஆவது சூத்திரம் அடியிற்கண்டவாறு உள்ளது :

காலம், உலகம், உயிரே, உடம்பே,
பால்வரை தெய்வம், வினையே, பூதம்,
ஞாயிறு, திங்கள், சொல், என வருஉம்
ஆயீர் ஐந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வருஉம் கிளவி எல்லாம்,
பால் பிரிந்து இசையா, உயர்திணை மேன,"

இதன் பொருள் என்னவென்றால், காலம் முதலாகச் சொல்லப்பட்ட பத்தும், அதே தன்மையுடைய பிறவுமாகிய அந்தப் பகுதிக்குள் வரும் சொற்களனைத்தும், உயர்திணைச் சொல்லாயினும், உயர்திணைக்கண் பால்பிரிந்து இசையாமல் அஃறிணைப்பாலைச் சேர்ந்தியங்கியே இசைக்கும்.

காலமும் உலகமும்

இந்த சூத்திரத்தின் முதல் அடியிலேயே 'காலம்' என்ற சொல்லும் 'உலகம்' என்ற செல்லும் இடம் பெற்றிருக்கின்றன. சேனாவரையர், தம்முடைய உரையில் இவ்விரண்டு சொற்களைப் பற்றிக் கூறும் பொழுது, 'காலம் என்பது காலக்கடவுளை, உலகம் என்றது ஈண்டு மக்கட் டொகுதியை' என்று கூறுகின்றார். இப்படிச் சொல்லுமிடத்துக் காலக் கடவுளும், மக்கள் தொகுதியும் உயர்திணையின்பாற் பட்டவையாயினும் அவை 'அஃறிணையாகவே இசையும் என்பதற்கு எடுத்துக் காட்டாக, 'இவற்குக் காலம் ஆயிற்று', 'உலகம் பசித்தது'

என்பன கொடுக்கப் பெறுகின்றன. நச்சிஞர்க்கினியரோ தம்முடைய உரையில், "'இவற்குக் காலம் ஆயிற்று', என்றது காலக் கடவுளை, 'உலகம் பசித்தது' என்றது உலகத்தாரை" என்று கூறுகின்ருர். ஆக, இவ்விருவருமே 'உலகம்' என்ற சொல்லுக்குக் கொடுக்கும் பொருள்கள் வேறுபடுகின்றன.

உரையாசிரியர் சொல்வது

சேஞவரையர், 'மக்கள் தொகுதி' என்கின்ருர். நச்சிஞர்க்கினியரோ 'உலகத்தார்' என்கின்ருர். எனினும், இவ்விருவருமே 'உலகம்' என்ற சொல்லுக்கு மக்களேயே குறிப்பிடுகின்ருர்கள். இதுபோலவே, இளம்பூரணர், தம் உரையில், 'உலகம் என்பது உலகத்தார் மேற்று; உடம்பு என்பது உடம்புடையார் மேற்று என்பது' என்கிருர். கல்லாடஞர் உரையும், 'காலம் என்றது காலனே; உலகமென்றது உலகத்தாரை' என்றே கூறும். இதற்கு மாருக, தெய்வச்சிலேயாரோ தம்முடைய உரையில் 'உலகம் என்பது மேலும் கீழும் நடுவுமாகி எல்லா உயிரும் தோற்றுதற்கு இடமாகிய பொருள்' என்று கூறுகின்ருர்.

நக்கீரர் நோக்கு

இதைவிடச் சிறப்புடையது என்னவென்ருல், திருமுருகாற்றுப்படை, அதன் தொடக்கத்திலேயே 'உலகம்' என்ற சொல்லே இன்னும் பரந்த பொருளில் பயிலும். அதில் இடம்பெற்றிருப்பது, 'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு' என்பது. இங்கே 'உலகம்' என்ற சொல் எல்லா உயிர்களேயும், அனைத்து ஜீவராசிகளேயும் குறிக்கும். இந்தச் சொல்லாட்சியின் பொருள் என்னவென்ருல், 'உயிர்கள் அனைத்தும் மகிழ மேருவை வலமாக எழுந்து திரிகின்ற பலரும் புகழா நின்ற ஞாயிறு அல்லது சூரியன்' என்பதுதான். சூரியனுடைய உதயத்திஞலே மகிழாத உயிரேயில்லை என்பதின் காரணமாக, இந்த அடியிலே இடம்பெற்றிருக்கும் 'உலகம்', ஜீவராசிகளனைத்தையும் குறிப்பிடுவதாக இருக்கின்றது.

வழக்கமே உலகம்

இதுவல்லாமல், மாறன் அலங்காரம், இந்தச் சொல்லை 'வழக்கம்' என்ற பொருளில் ஆள்கின்றது. அதாவது, 'ஒழுக்க நடையே உலகமதாகும்' என்று சொல்லும் அது. கடைசியாக, இச்சொல்லுக்குரிய வேறொரு பொருளையும் பார்க்க வேண்டும். அந்தப் பொருளையும் பிங்கல நிகண்டே கொடுக்கிறது. அதுதான் 'உயர் குணம்' என்பது.

சொல்லும் வழக்கும்

எனவே, 'உலகம்' என்ற இந்தச் சொல் முக்கியமாக மூன்றைக் குறிப்பதாகச் சொல்லலாம். ஒன்று, இடம்; இரண்டு, அந்த இடத்திலே வாழும் உயிர்கள்; மூன்று, அந்த உயிர்களிடத்தே நிலவும் அல்லது நிலவவேண்டிய உயர் குணம். ஆனால், நாம் வழக்கிலே இந்தச் சொல்லை ஆளும் பொழுது, இத்தகைய உயர்ந்த பொருள் வேறுபாடுகளையெல்லாம் உள்ளத்தில் கொள்வதில்லை. ஆனால், நம்முடைய பழம்பெரும் கவிஞர்கள் தங்களுடைய இறவாப் படைப்புக்களை ஆக்கியபொழுது, இத்தகைய சொற்களையெல்லாம் நாம் இன்று ஆளுவது போலச் சாதாரணமாக ஆளாமல், தாங்கள் கூறவந்த கருத்திற்குப் பொருத்தமாகவே ஆண்டிருக்கின்றார்கள்.

நிலமும் உயிரும்

சற்றுச் சிந்தித்துப் பார்ப்போமேயானால், நாம்கூட ஓர் உண்மையை உணரத்தான் செய்வோம். 'உலகம்' என்பது வெறும் பூமியாக, நிலப்பரப்பாக மாத்திரம் இருக்க முடியாது. அது போலவே, அதில் வாழும் உயிர்களாகவும் இருக்க முடியாது. மேலும் அந்நிலப்பரப்பில் வாழும் உயிர்களுக்குச் சில உயர்ந்த பண்புகளும், ஒழுக்க சீலங்களும் இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும். இன்றும்கூட மழையின்மையின் காரணமாக நம்முடைய பூப்பரப்பிலுள்ள கொடி, செடிகளனைத்தும் வாடி வதங்கி,

காய்ந்து, அழிந்துவிட்டாலோ; வெள்ளம் அல்லது சூறுவளியின் காரணமாக நிலப்பரப்பிலுள்ள மரம், வீடு, மனை அனைத்தும் அழிந்துவிட்டாலோ; பூகம்பத்தின் காரணமாக பூமியின் மேலிருக்கும் அனைத்தும் சரிந்து, இடிந்து ஒழிந்துவிட்டாலோ, அத்தகைய நிலப்பரப்பினுல் எவ்வித பெருமையும் கொள்வதற் கில்லை. அதுபோலவே, அந்த நிலப்பரப்பில் உயிரினங்கள்—மக்கள், விலங்குகள், தாவரங்களும்கூட இருக்கலாம். ஆனுல், அவற்றினுடைய வாழ்வு கட்டுப்பாடற்ற, வரையறைக்கு உட்படாத, ஓர் ஒழுங்குக்கு அடங்காத வாழ்வாக அமையுமே யானுல், அதைப்பற்றிப் பெருமையாகப் பேசுவதற்கு இடம் இருக்காது.

உலகெனில் உயர்ந்தோர்

இவ்வாறு நிலப்பரப்பிலே வாழ்கின்ற உயிரினங் களிடையே, குறிப்பாக மனிதர்களிடையே, நற்பண்பும், உயர்ந்த ஒழுக்கமும், சிறந்த சீலமும் மிளிருமேயானுல், அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு, பெருமைப்படுவதற்கு இடமுண்டு; அவர்கள் உயிர்வாழ்வதற்குப் பொருளுண்டு; அவர்களைப்பற்றிப் புகழ் உண்டாவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, 'உலகம்' என்பது ஒரு நிலப்பரப்பையோ, உயிரினங் களையோ மாத்திரம் தனித்தனியாகக் குறிக்காமல், இம்மூன்றை யும் சேர்த்துக் குறிப்பதாகத்தான் கொள்ள வேண்டும். அப்படிக் கொள்ளும் பொழுதுதான், 'உலகம் என்பது உயர்ந் தோர் மாட்டே' என்ற முதுமொழி, பொருள் செறிந்ததாக ஆகின்றது.

இந்த 'உயர் பண்பு', 'நற்குணம்' என்பவை பரம்பரையாக மக்களிடையே இருக்குமேயானுல், அவையே அவர்களுடைய வழக்கமும், பழக்கமுமாகிவிடுவதன் காரணமாக, மாறன் அலங்காரத்திலிருந்து பெறும் பொருளும் பொருத்தமாக ஆகும். எனவே, இந்த மூன்றும் ஒருங்குசேர்ந்த ஒன்றைத்தான், 'உலகம்' என்று நாம் கூறுவது பொருத்த முடையதாக ஆகும்.

கவிஞனின் கருத்து

இத்தகைய உலகம் ஏன் வாழ்கின்றது? ஏன் இருக்கிறது? ஏன் அதைப்பற்றிப் பேசுகின்றோம்? என்று ஒரு கவிஞன் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கேட்டிருக்கிறான். விடையும் கண்டிருக்கிறான். அவனுடைய கணக்குப்படி, இந்த உலகம் இப்படி இருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா? தனக்குச் சாகாவரத்தைக் கொடுக்கக்கூடியதாயினும், தன்னை இந்திர பதவிக்கு உயர்த்துவதாயினும், ஆன ஒன்று கிடைக்குமாயினும், அதை எந்த மனிதனும் தனியாக உண்ண மாட்டான். அதற்கு மாறாக, அதைப் பிறரோடு பகிர்ந்து உண்ணவே செய்வான். காரணம், நலம் பயக்கக்கூடியது, இன்பம் விளைவிக்கக்கூடியது, மகிழ்ச்சி உண்டாக்கக்கூடியது எதுவாயினும், அது ஒருவருடைய ஏகபோக அனுபவத்துக்குரியதாக இல்லாமல், எல்லோராலும் பகிர்ந்து உண்ணக் கூடியதாக, அனுபவிக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதுதான். இன்றும்கூட, நாம் காண்கின்ற ஓர் உண்மையை நினைத்துப் பார்க்கலாம்.

உதவிடும் உவகை

நாம் செய்கின்ற ஒரு காரியத்தின் காரணமாக பிறருடைய உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டாகி, அந்த மகிழ்ச்சி அந்தப் பிறருடைய முகத்திலே தெற்றென விளங்குமாயின், அதைவிட மகிழ்ச்சியளிக்கக்கூடியது நமக்கு வேறொன்றும் இருக்க முடியாது. ஆக, நற்காரியங்கள், நற்பண்புகளினுடைய மிகத்தெளிவான பலன் ஒன்று உண்டென்றால், அது பிறரை மகிழ்வுறச் செய்வது என்பதுதான். பிறருடைய மகிழ்ச்சியினாலே நாம் பெறுகின்ற இன்பத்திற்கு ஈடானதாக வேறொரு இன்பத்தை இவ்வுலகில் பெரும்பாலும் சொல்ல முடியாது.

செய்வானும் செயலும்

அது போலவே, பெரியோர்கள், தாம் எந்த மக்களிடையே வாழ்கின்றனரோ அந்த மக்களிடத்தே வெறுப்புக் கொள்ள

மாட்டார்கள். ஒருவருடைய செயலினல் பிறர்க்குத் துன்பமும் துயரமும் உண்டாவதாக இருந்தால், அச் செயலைக் கண்டித்து, அதைச் செய்பவருக்கு உபதேசம் செய்யலாம். அத்தகையவரைத் தண்டிக்க வேண்டிய அவசியம் வந்தவிடத்தும், அவரைத் திருத்துவதற்காகத் தண்டிக்கவேண்டுமே தவிர, அவரை வெறுக்கக் கூடாது. வெறுப்பிலிருந்து என்றுமே நலன் பிறவாது. ஒரு மனிதரை வெறுக்காமல் அவருடைய செயலை மாத்திரம் வெறுப்போமாயின், அவர் தம்முடைய தவற்றை உணர்ந்து திருத்திக் கொண்டு நல்லவராக ஆவதற்கு வாய்ப்புண்டு. ஆனல், அவரையே வெறுப்போமாயின் அந்த வெறுப்பின் காரணமாகத் தம்முடைய செயலைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே அவருக்கு உண்டாகாமல் போக, அவர் திருந்தி நல்லவராக வாழ்வதற்கு வாய்ப்பில்லாமற் போய்விடும்.

நல்லவராக்கும் நற்கடன்

மூன்றும் ஒன்றையும் அவர்கள் செய்ய மாட்டார்கள். பிறர் அஞ்சக்கூடிய துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அதைத் தீர்ப்பதற்குச் சோம்பியிருக்க மாட்டார்கள். ஒருவர், துன்பம் தரும் ஒன்றினைத் துடைக்க அஞ்சுகின்ருர் என்பதற்காக எல்லோருமே அதனைத் தீர்ப்பதற்குச் சோம்பியிருப்பார்களே யானல், அதை யாரும் தீர்க்கும் வாய்ப்பேயின்றி, எல்லோருமே துன்பத்தில் உழல்கின்ற நிலைமையுண்டாகும். யாராவது ஒருவராகிலும் துணிந்து அதனைத் தீர்க்க முயன்ருல்தான், அதனல் பிறருடைய அச்சமும் துன்பமும் தீரும்.

உண்டால் அம்ம உலகம்!

நான்காவதாக, அத்தகைய மக்கள், புகழ் ஒன்று உண்டாகுமாயின், தம்முடைய உயிரையே அதற்காகக் கொடுப்பார்கள். அதற்குமாருக, பழி ஒன்று உண்டாகுமென்ருல் உலகம் முழுவதையும் பெறுவதாக இருந்தாலும், அதனைப் பெற்றுக்கொண்டு பழியினை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஐந்தாவதாக. அவர்கள் மனக்கவற்சி யில்லாதவர்கள். ஆருவதாக, இவை அனைத்துக்கும் மேலாக, தமக்கு என்று முயலாத பிறர் பொருட்டே முயற்சியுடையவராக இருப்பர். இந்த ஆறு தன்மைகளையும் உடைய மக்கள் வாழ்வதின் காரணமாகத்தான் இந்த உலகம் ஒன்று இருக்கின்றது; இல்லா விட்டால் இந்த உலகம் இருக்காது. இந்த அருமையான கருத்து புறநானூற்றில்,

"உண்டால் அம்ம, இவ் உலகம்—இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே: முனிவு இலர்;
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சி;
புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழிஎனின்,
உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர்ஆகி,
தமக்கு என முயலா நோன் தாள்,
பிறர்க்கு என முயலுநர் உண்மை யானே."

என்ற பாடலின் மூலம் விளக்கப்பெற்றிருக்கின்றது.

இப்பாடலிலே, முதலிலே கூறப்படும் 'உயர் பண்பு', "இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத் தமியர் உண்டலும் இலரே" என்பது. இந்திரருடைய அமிழ்தம் என்பது மனிதர்களுக்குக் கிடைப்பது அவ்வளவு இலகுவல்ல. அப்படி அது கிடைப்பதாயிருந்தால், தெய்வத்தின் அருளினுல் கிடைக்கவேண்டும்; அல்லது தவத்தின் வலிமை யினுல் கிடைக்கவேண்டும். யாராவது ஒருவன் தான் செய்த தவத்தின் வலிமையினுலோ அல்லது இறைவனுடைய கருணை யினுலோ இந்த அமுதத்தைப் பெறுவானேயானுல், அது இனிது என்பதற்காகத் தனியே உண்டிட மாட்டான். 'தமியன்' என்ற சொல்லுக்குத், 'தனித்திருப்பவன்' என்று பொருள். ஆக, எவ்வளவோ முயற்சிக்கும் கஷ்டத்திற்கும் பிறகு, தனக்கு மிக உயர்ந்த பொருள் ஒன்று கிடைக்குமாயினும், அதைத் தானே உண்ணுமல் பிறரோடு பகிர்ந்து உண்ணுகின்ற பண்பு முதன்மையாக வைக்கப்படுகின்றது.

இரண்டாவது பண்பு 'முனிவு இலர்' என்று கூறுவதாகும். 'முனிவு' என்ற தமிழ்ச் சொல்லுக்குக் 'கோபம்', 'வெறுப்பு' என்ற இரு பொருள்களுமே உண்டு. இருந்தாலும், 'வெறுப்பு' என்ற பொருளே இங்குச் சிறந்ததாக அமையும். தொல் காப்பியம், சொல்லதிகாரம், 387ஆவது சூத்திரம், 'முனைவு முனிவு ஆகும்' என்று கூறும். 'முனைதல்' என்ற சொல்லுக்கு சங்க இலக்கியங்களில் 'வெறுத்தல்' என்ற பொருளே சிறப்புடையதாக அமைந்திருக்கின்றது. ஆக, 'முனிவு இலர்' என்பதற்கு 'வெறுப்பு இல்லாதவர்' என்று பொருள் கொள்ளுதல் சிறப்புடைத்தாகும். 'கோபம் இல்லாதவர்' என்று பொருள் கொள்ளினும் தவருகாது.

மூன்ருவதாக, நான்காவது வரியில் இடம் பெற்றிருக்கும் 'துஞ்சல்' என்பதற்கு, 'தூங்குதல்', 'சோம்பியிருத்தல்', 'சோர்ந்திருத்தல்' என்ற பொருள்கள் உண்டு. 'துஞ்சல்' என்ற சொல்லுக்கு 'இறத்தல்' என்ற பொருளும் உண்டு. ஆனல் இங்கே, 'துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சி' என்ற சொல்லாட்சியில், 'தூங்குதல்', 'சோம்பியிருத்தல்', 'சோர்ந் திருத்தல்' என்ற பொருள்களே பொருந்தும்.

உலகுடன் பெறினும் கொள்ளலர்

இவ்வெல்லாவற்றிற்கும் மேலாக, மிகச் சிறப்புப்பெற்ற சொல்லாட்சி 'புகழ் எனின், உயிரும் கொடுக்குவர்; பழி எனின் உலகுடன் பெறினும், கொள்ளலர்' என்பதாகும். 'கொடுத்தல்', 'பெறுதல்' என்ற இரண்டையும் வைத்துக்கொண்டு இங்கே கவிஞர் பாடுகின்ருர். நாம் கொடுத்தலில் மிகக் கண்டிப்பாக இருக்க விரும்புவோம். அதாவது, நமக்கு அதிகமாக தேவை யில்லாத ஒன்றைத்தான் கொடுக்கத் தயாராக இருப்போம். அதுபோலவே, நமக்கு எது அதிகமாகத் தேவையோ அதைத் தான் பெற்றுக்கொள்ளத் தயாராக இருப்போம்; அதற்காக எதையும் செய்யத் தயங்க மாட்டோம். இங்கே கவிஞர் இரண்டிற்கும் ஒரு எல்லையை வகுத்துவிடுகின்ருர். நாம் விரும்பு கின்ற எதிலும் நம்முடைய உயிரைவிட அருமையானது நமக்கு

வேறெதுவுமில்லை. அந்த உயிரைக்கூட கொடுக்கத் தயங்க மாட்டார்கள், புகழ் வரும் என்றால். அதுபோலவே, நாம் பெற விரும்புவதற்கு எல்லையேயில்லை. ஆசை என்பது அளவோடு நிற்குமாயின், அது உண்மையில் ஆசையே ஆகாது; தேவையாகவே ஆகிவிடும். அதற்குமாறாக, சாதாரண மனித இயல்பு எதையும் தான் பெற்றுக்கொள்ள வேண்டும், எதுவும் தன்னிடம் இருக்கவேண்டும் என்பதுதான். ஆனால், அது எப்படி கிடைக்கின்றது என்பதுபற்றி கவலைப்படுவது இல்லை. ஒரு பொருளின்மேல் மனத்தை வைத்துவிட்டால் அதை எப்படியாவது அடைய வேண்டுமென்று விரும்புகின்றோமே தவிர, அதை அடைகின்ற வழியைப் பற்றியோ, பின்பற்றுகின்ற வழியினால் உண்டாகும் விளைவைப்பற்றியோ கவலைப்படுவ தில்லை. ஆனால், கவிஞர் இந்த வழிக்கும் ஒரு விதி வகுக்கின்றார். அதுதான், பழி என்ற ஒன்று பலனாக விளையுமாயின், உலகம் முழுவதுமே கிடைப்பதாயிருப்பினும் அதனைப் பெற்று, அப் பழியைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது.

ஏதோ கவிஞர் பாடும்பொழுது கற்பனை உலகிலே நடக்கக் கூடிய ஒன்றைப் பாடிவிட்டுப் போகின்றார் என்று கொள்வது நமக்கும் பெருமையில்லை; கவிஞனுக்கும் பெருமையில்லை; நாம் பிறந்த நாட்டுக்கும், அந்நாட்டு மக்களின் பண்பிற்கும், கலாசாரத்திற்கும் பெருமையில்லை. எவ்வளவு உயர்ந்த வாழ்க்கை வழியை அவர் குறிக்கோளாகக் கொண்டிருக் கின்றார் என்று பார்க்கும்பொழுது, அவருடைய உயர்ந்த உள்ளத்தை நாம் முழுமையாக உணர்ந்து கொள்வதோடு, அவருடைய குறிக்கோளின் உச்ச நிலையையும் காணவே செய்கின்றோம்.

இயந்திரப் படிவம் ஒப்பான்!

இங்கே இடம்பெற்றிருக்கும் 'புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்' என்ற சொல்லாட்சியைக் கம்பன் மிக அருமை யாக ஓரிடத்தில் ஆளுவான். அசோக வனத்தில் தன்னைக் கண்டுபிடித்த அனுமனிடத்தில் இராமனது வரலாற்றைச் சீதை

வினவ, அவன் அதைப் பல பாடல்களில் எடுத்துக் கூறுவான். இராமன் சீதையைக் காணுமல், அவளைத் தேடிச் சென்றதையும், சீதையின் பிரிவினுல் அவன் பட்ட துயரையும் விளக்குமிடத்து, அப்படி சீதையைத் தேடிக்கொண்டு சென்ற பொழுது சடாயுவைச் சந்தித்ததை அடியிற்கண்டவாறு கூறுவான்:

"அந் நிலை ஆய அண்ணல், ஆண்டு நின்று, அன்னை! நின்னைத்
துன் இருங் கானும் யாறும் மலைகளும் தொடர்ந்து நாடி,
இன் உயிர் இன்றி ஏகும் இயந்திரப் படிவம் ஒப்பான்,
தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயுவை வந்து சார்ந்தான்."

பாடல், விளக்கம் தேவையற்ற எளிய சொற்களாலானது.

நாம் இங்கு கூர்ந்து நோக்கத்தக்கது இறுதி அடியில் இடம் பெற்றிருக்கும் 'தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயு' என்ற சொல்லாட்சிதான். ஏதோ புகழைப் பெறவேண்டும் என்பதற்காகச் சடாயு தன் உயிரை விடவில்லை. இராவணனிடத்தில் இருந்து சீதையைக் காப்பாற்றுவது தன் கடமை என்ற உணர்வில்தான், அவனேடு போர் செய்து சடாயு உயிர் நீத்தான். அவனைத்தான் அனுமன், 'தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயு' என்று கூறுகிறுன்.

அயர்விலர் யார்?

அடுத்து, 'அயர்விலர்' என்ற சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. இப்பாடலில் காணப்படும் 'அயர் விலர்' என்ற இந்தச் சொற்களுக்கு 'மனக் கவற்சி இல்லார்' என்று பழைய உரையொன்று கூறுவதாகப் பதிப்புகளிலிருந்து தெரிகிறது. மனக் கவற்சி என்பதற்கு மனக்கவலை என்றுதான் பொருள். 'அயர்தல்' என்ற தமிழ்ச் சொல்லுக்குத் 'தளர்தல்', 'உணர்வு அழிதல்' என்ற பொருள்களோடு, 'விரும்புதல்' அதாவது 'ஆசைப்படுதல்' என்ற பொருளும் உண்டு. இங்கே காணப் படும் 'அயர்வு' என்ற சொல்லுக்கு மனக்கவலை என்பதற்குப் பதிலாக, ஆசை என்று பொருள் கொண்டால், பொருள்

சிறக்கும். மனக்கவலை எப்பொழுது உண்டாகிறது? தனக்குத் துன்பம் ஏற்படும்பொழுதோ, தான் எண்ணியது நிறைவேறாத விடத்தோ மனக்கவலை பெரும்பாலும் உண்டாகிறது. ஆக, மனக்கவலை அற்றவர்களாக இருந்தார்கள் என்றால், அவர் களுக்குத் துன்பம் எதுவுமில்லை, அவர்கள் முயன்றது எதுவும் தோல்வி அடைந்தது இல்லை என்று பொருளாகும். இங்கோ 'அயர்விலர்' என்ற சொற்கள், 'துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சி' என்ற சொற்றொடருக்குப் பின்னாலும், 'தமக்கு என முயலா நோன்தாள், பிறர்க்கு என முயலுநர்' என்ற சொற்றொடருக்கு முன்னாலும் அமைந்திருக்கின்றன. ஆக, இங்கே 'அயர்வு' என்பதற்கு 'மனக்கவற்சி' அல்லது 'மனக்கவலை' என்று பொருள் கொள்வது அவ்வளவு சிறக்கும் என்று தோன்றவில்லை. அதற்கு மாறாக, 'அயர்வு' என்பதற்கு 'ஆசை' என்று பொருள் கொண்டால் பொருள் சிறக்கவே செய்யும். காரணம் என்னவென்றால், இந்த நாட்டினுடைய தத்துவங்கள் அனைத்தும் ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணம் என்று கூறிக்கொண்டு இருக்கின்றன. 'ஆசையை விடுதலே முக்திக்கு முதன்மையான வழி' என்பது இந்நாட்டின் தொன்மையான கொள்கை. தேவையைத் தேடிக்கொள்வது வேறு. தேவையற்றதின் மேல் ஆசைப்படுவது வேறு. இத்தகைய ஆசை இல்லாதவிடத்து, மனத்தில் அமைதியும், நிறைவும் என்றும் பொங்கிக் கொண்டிருக்கும். இந்தக் கருத்தில் 'அயர்வு இலர்' அதாவது 'ஆசையில்லார்' என்று கவிஞர் பாடியிருக்கிறார் எனப் பொருள்கொள்வது தவறாகாத தோடு சிறப்புடையதாகவும் ஆகும்.

இவற்றிற்கும் மேலாக இன்னொன்றையும் இந்தக் கவிஞர் கூறுகின்றார். முன்னே குறிப்பட்ட மாட்சிமை பெற்ற தன்மைகளை யுடையவர்களாகித் தமக்கு என்று முயலாத வலிய முயற்சியுடைய, பிறர் பொருட்டென முயல்பவர்கள் என்று குறிப்பிடுகின்றார். சொற்கள் எளிய சொற்கள்தாம். 'நோன் தாள்' என்பதில் இடம்பெற்றிருக்கும் 'தாள்' என்ற சொல்லுக்கு 'முயற்சி' என்றுதான் பொருள்.

உண்டென உலகம் செய்வோர்!

இப்பொழுது பாட்டின் இறுதியில் இருக்கின்ற 'உண்மை யானே' என்ற சொல்லைப் பாட்டின் தொடக்கத்திலே இருக்கின்ற 'உண்டால் அம்ம, இவ்உலகம்' என்ற சொற் களோடு சேர்த்துப் பார்க்கும் பொழுது, காரண காரியம் நன்ருக விளங்கும். இத்தகைய மக்கள் உண்மையானே— இருத்தலினுல்தான், 'உண்டால் அம்ம இவ்வுலகம்'—இந்த உலகம் இருக்கின்றது. அத்தகைய மக்கள் இல்லாவிட்டால் இந்த உலகம் இருக்காது. இங்கே ஓர் அற்புதமான நயத்தைக் காண்கிருேம். 'உண்டால்' என்று பாடல் தொடங்குகிறது; 'உண்மையானே' என்று பாடல் முடிகிறது. 'உண்மை' என்ற சொல்லுக்கு 'உள்ளது', 'உளதாகை' என்று பொருள். அதாவது, உளதாகிற, அல்லது இருக்கிற தன்மை. இந்தப் பொருளில்தான், ஈற்றடியில் 'உண்மை' என்ற சொல் இடம் பெற்றிருக்கிறது. இதே பொருளைத் தாங்கிக்கொண்டிருக்கும் வினைச்சொல்லாக, 'உண்டு' என்ற சொல், முதலடியின் முதற் சொல்லாக அமைந்திருக்கிறது. ஒரே பொருளையுணர்த்தும் ஒரே சொல்லின் வினைவடிவை பாடலின் முதற்சொல்லாகவும், பெயர்வடிவை பாடலின் இறுதிச் சொல்லாகவும் அமைத்திருக் கும் திறன் வியந்து பாராட்டற்குரியது.

ஆகவே, இதை இப்படிப் பார்க்கும் பொழுது 'உலகம்' என்ற சொல்லினுடைய பொருளை நாம் உணர்ந்து கொள்வ தோடு, அந்த 'உலகம்' என்ற சொல்லில் அடங்கியிருக்கும் மக்களினுடைய தன்மையையும், பண்புகளையும், முயற்சிகளை யும், குறிக்கோளையும் உணர்ந்து கொள்கின்ருேம். 'உண்டால் அம்ம' என்ற சொற்களில் இடம் பெற்றிருக்கும் 'அம்ம' என்ற இடைச் சொல் அசை நிலையாக வந்தது என்று உரையாசிரியர் கள் கூறுவார்கள். அதே சமயத்தில், 'அம்ம' என்ற சொல் ஓர் அதிசயத்தைக் குறிக்கும் சொல்லாகும். 'இத்தகைய மக்கள் இருப்பதினுல்தானே இவ்வுலகம் இருந்து கொண்டேயிருக் கின்றது'! என்று அதிசயத்தைத் கொள்வதே பொருத்த மாகும்.

என்றும் உலகில் அநியாயமும், சுயநலமும், வஞ்சனையும் இருந்து கொண்டுதான் வந்திருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தில் இவை மிகுதியாகவோ அல்லது குறைவாகவோ இருந்திருக்கலாம். இவை முழுமையாக இல்லாத காலம் ஒன்று இருந்திருக்க முடியும் என்று சொல்வதற்கில்லை, ஆகவே, இக்கவிஞர் காலத்திலும் அத்தகைய அநியாயமும். சுயநலமும், வஞ்சனையும் இருந்துதான் இருக்கவேண்டும். இவற்றையெல்லாம் பார்த்த கவிஞருக்கு இவையாவும் நிலவும் பொழுது எப்படி இந்த உலகம் வாழ்கிறது! என்ற வியப்பு ஒன்று தோன்றியிருக்க வேண்டும். அப்போதுதான் இப்பாடலில் குறிப்பிடப்பட்ட மக்கள் வாழ்வதினாலேயே தான் இவ்வுலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்ற உறுதி அவர் உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும்.

இதைக் குறிக்குமாப்போலே முதல் வரியில் 'உண்டால்' என்ற சொல்லுக்குப் பின்னால் காணப்படும் 'அம்ம' என்ற சொல்லும் ஈற்றடியில் 'உண்மையான்' என்ற சொல்லுக்குப் பின்னால் காணப்படும் 'ஏ' என்ற எழுத்தும் அமைந்திருக்கின்றன. ஈற்றடியில் வந்திருக்கும் 'உண்மையானே' என்ற சொல்லாட்சிக்கு 'இத்தகைய மக்கள் இருப்பதினால்தான், வேறு எதனாலும் அல்ல' என்ற பொருள் தெளிவாக உண்டு.

தமிழ் இலக்கண வழக்கப்படி 'ஏ' என்ற சொல் பிரிநிலை ஏகாரமாகவும் தேற்ற ஏகாரமாகவும் வரும். சிலவற்றில் ஒன்றைப் பிரித்துக் காண்பிக்க ஆளப்படும் பொழுது இது பிரிநிலை ஏகாரமாக வரும். ஒன்றை வற்புறுத்திச் சிறப்பித்துக் காண்பிக்க வரும்பொழுது, தேற்ற ஏகாரமாக வரும்.

'இத்தகைய மனிதர்கள் இருப்பதினாலேயே இவ்வுலகம் வாழ்ந்து வருகிறது, வேறு எதனாலும் அல்ல' என்று பொருள் கொள்வோமாயின், இந்த ஈற்றடியில் காணப்படும் ஏகாரம், பிரிநிலை ஏகாரமாகும். அப்படியில்லாமல், இத்தகைய மக்கள் இருப்பதே இவ்வுலகம் வாழ்வதற்குக் காரணம் என்று வற்புறுத்திச் சிறப்பித்துச் சொல்லும்பொழுது, அது தேற்ற ஏகாரமாகும்.

இளம்பெரு வழுதி

இதைப் பாடியவர் 'கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி' என்பவராகும். இவரைப் பற்றிய குறிப்பு மிகச் சிறிய அளவிலேயே கொடுக்கப்பெற்றிருக்கின்றது. பரிபாடலிலுள்ள திருமாலுக்குரிய 15ஆம் பாடலை இயற்றியவர் இவர் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவர் பாண்டியர் குடியில் பிறந்தவர் என்றும், 'வழுதி' என்ற பெயரே இதைப் புலப்படுத்தும் என்றும், இளம்பிராயத்திலேயே பேரறிஞராக இருந்ததுபற்றி இப்பெயரை அடைந்தனர் போலும் என்றும். ஒரு பெரியார்க்குச் சிறு பெரியார் என முற்காலத்தில் பெயர் வழங்கிற்று என்றும், 'கடலுள் மாய்ந்த' என்னும் அடை, இறந்த பின்பு இவருடைய பெயரின் முன்னர் அமைக்கப் பெற்றது என்று சொல்லாமலேயே விளங்கும் என்றும், சோலை மலையிலுள்ள திருமாலைப் பாடியிருத்தல்பற்றி, சமயத்தால் இவர் வைணவராக கருதப்பெற்றனர் என்றும், இவர் பாடிய இப்பாடல் சொல்லாலும், பொருளாலும் இனிமை வாய்ந்தது என்றும், புறநானூற்றைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சுவாமி நாதையர் அவர்கள் கூறுவார்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ஒருவர் பாடியது இன்றும்கூட நாம் எண்ணி, சிந்தித்து, நம்முடை வாழ்வில் தேவைப்படுவனவாக இருக்கின்றனவே என்று கவலைப்படுகின்ற நிலையில், இந்தப் பாடல் அமரத்துவம் பெற்றிருப்பதுதான், இதனுடைய ஒப்பற்ற சிறப்பாகும்.

1980 கலைமகள் தீபாவளி மலரில் வெளியானது.

தண்மை, திண்மை, தொன்மை

முதுமையும் பழமையும்

முதுமையை மதிப்பதும், பழமையைப் போற்றுவதும் நமக்கு வழக்கம். இந்த வழக்கத்திற்கு அடிப்படையில்லாமல் இல்லை. 'முதுமை' என்னும்பொழுதே, ஒரு நீண்டகால வாழ்வு அதற்குப் பின்னணியாக அமைந்திருக்கிறது. அந்த நீண்டகால வாழ்வினுல் அறிவு வளர்ச்சியும், அனுபவ முதிர்ச்சியும் ஏற்பட்டிருக்கும் என்ற காரணத்தினுலேயே, அந்த முதுமைக்கு மதிப்பு உண்டாகிறது.

அதுபோலவே, பழமையைப் பாராட்டு வதற்கும் அதுவே காரணம். பழமை என்ற உடனேயே, அது நீண்டகாலமாக நிலைநிற்பது என்பது புலனுகின்றது. அவ்வாறு நிலைநிற்பதின் காரணமாகவே அதற்கென ஒரு தனித் தன்மையும், தகுதியும் இருக்கின்றன என்ருகிறது. இருந்த போதிலும், முதுமை, பழமை, தொன்மை ஆகிய ஒன்று மாத்திரம் பெருமைக்கும், பாராட்டுதலுக்கும் காரணமாக அமைந்துவிட முடியாது. நம்முடைய வாழ்க்கையிலே அன்ருடம் நாம் காண்கின்ற ஒரு சிறிய உண்மையினையே இதற்குச் சான்ருகக் கொள்ள முடியும்.

மரபும் தெளிவும்

வயதில் முதிர்ச்சியடைந்தந்தவர்களைப் பெருமைப் படுத்துவது நம்முடைய மரபு. அத்தகைய வயதினுல் முதிர்ச்சி

அடைந்தவர்களுக்கு உள்ளத்தினுல் உயர்ச்சியும், அறிவினுல் வளர்ச்சியும் இருக்குமாயின், அவை பிறர்க்கு பயன்படுவனவாக அமையும். அதுபோலவே, அந்த முதிர்ந்த நிலேயிலும் உடல் நலமும், அறிவுத் தெளிவும் இருந்தால்தான், அந்த முதுமையின் பயனேப் பிறர் முழுமையாக அனுபவிக்க முடியும்.

முதியவர்கள் பலருக்கு அறிவுத் தெளிவு மறைந்து போவதை நாம் காணத்தான் செய்கின்ருேம். அப்பொழுது அவர்களுடைய நிலே பரிதாபத்திற்குரியதாக ஆகிவிடுகின்றதே தவிர, பாராட்டுதலுக்குரியதாக ஆவதில்லே. எனவே, முதிர்ச்சி, அதே சமயத்தில் அறிவுத் தெளிவு, அனுபவத்தின் திண்மை ஆகியவை ஒருங்கே இடம்பெறும் பொழுதுதான், முதுமையின் முழுப்பலனேயும் பூரணமாகப் பெறமுடியும்.

தொன்மையாற் புகழில்லே

ஒரு தனி மனிதனுடைய வாழ்வே இப்படி ஆகுமாயின், ஒரு சமூகத்தினுடைய வாழ்வு எப்படியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லே. உலகில் தோன்றியிருக்கும் மனித இனங்களில் ஒவ்வொன்றும் வெவ்வேறு காலத்தில், சமுதாய வாழ்வைத் தொடங்கியிருக்கிறது. அப்படித் தொடங்கி யிருக்கின்ற மனித இனங்களில் மிகத் தொன்மையானது தமிழர் இனமே என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டிருக் கிருர்கள். இந்தத் தொன்மையினுல் மாத்திரம் தமிழர்களுக்குப் பெருமை வந்துவிடாது.

தொன்மையின் உயிர்

இந்தத் தொன்மை வெறும் தொன்மையாக இருந்து விடாமல், சிறந்த கோட்பாடுகளேயும், உயர்ந்த கலேகளேயும், பாராட்டுதற்குரிய பண்புகளேயும், போற்றுதற்குரிய குறிக் கோள்களேயும், பரந்த உள்ளத்தையும், உயிரினம் முழுவதையுமே ஒன்ருகக்காணும் விசால மனப்போக்கையும்

வாழையடி வாழையாகச் சுடர்விட்டு வளர்த்து வந்த தொன்மையாக இருக்குமாயின், அந்தத் தொன்மை எல்லோராலும் மதிக்கக்கூடிய தொன்மையாக ஆகிவிடு கின்றது. நம்மில் பெரும்பாலோர் இந்தத் தொன்மையை மாத்திரம் பேசிக் கொண்டிருக்கின்றோமே தவிர, இந்தத் தொன் மைக்கு ஊட்டம் அளித்த பண்பாட்டுச் சிறப்பையும், கலைச் செல்வத்தையும், சிந்தனை சக்தியையும், நுண்ணிய உணர்வையும் நாம் பெரிதாகச் சிந்திப்பதில்லை. ஆனால், இவைதாம் அந்தத் தொன்மைக்கு உயிராக அமைந்து இருக்கின்றன.

தனிமனிதன்—சமுதாயம்

இவ்வுலகிலே ஆங்காங்குத் தோன்றிய அறிஞர்களும், ஞானிகளும் ஓர் இலட்சிய சமுதாயத்தைக் காண முயன்றிருக் கிறார்கள். இந்த இலட்சிய சமுதாயம் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று அருமையாகவும், அற்புதமாகவும் விளக்கியிருக் கிறார்கள், வருணித்திருக்கிறார்கள். ஆனால், இவற்றினின்றும் மாறுபட்ட வகையில், தமிழன், ஒரு தனி மனிதன் எப்படி வாழ வேண்டும், விளங்க வேண்டுமென்று பாடியிருக்கிறான், பேசியிருக் கிறான்.

எந்த ஒரு சமுதாயத்திற்கும் அடிப்படையாக இருப்பவன் தனி மனிதன். அந்தத் தனி மனிதன் அறிவினாலும், அன்பினாலும், பண்பினாலும், ஒழுக்கத்தினாலும், உறவினாலும் சிறப்புடையவனாக இல்லாவிட்டால், அந்தச் சமுதாயம் சிறப்புடையதாகவோ அல்லது உயர்ந்ததாகவோ அமைய முடியாது.

காரணம் என்னவென்றால், பல தனி மனிதர்களைத் தன்னுடைய அங்கமாகக் கொண்டதுதான் ஒரு சமுதாயம். எப்பொழுது ஒரு அங்கம் பலவீனப்பட்டுவிடுகின்றதோ, அப்பொழுது அந்த அளவுக்கு அந்தச் சமுதாயத்தினுடைய பெருமையும், திறமையும், தகுதியும், தொன்மையும் குறைவு படவே செய்யும்.

வள்ளுவன் வாக்கு

ஆக, தனி மனிதனுடைய வாழ்வைச் செம்மையாக ஆக்க முயல்வது, சமுதாயத்தையே செம்மையாக ஆக்க முயல்வ தாகும். எனவே, தனி மனிதனை மறந்துவிட்டு ஓர் உயர்ந்த, சிறந்த சமுதாயத்தைப் படைக்க முடியாது. இதை நன்கு உணர்ந்திருந்தவன் தமிழன். இந்த உணர்ச்சிக்குப் பிரதிநிதி யாக இருப்பவன் வள்ளுவப் பேராசான். ஆகையினுல்தான், அவனுடைய குறள் தனி மனித ஒழுக்கத்தை வற்புறுத்துவதாக அமைந்திருக்கின்றது. இப்படித் தனி மனிதனைப்பற்றிப் பேசும் பொழுதுகூட வள்ளுவன் ஒரு பெரிய அற்புதத்தைச் செய்திருக் கின்முன்.

அதாவது, மனித இனங்கள் அனைத்திற்கும் பொது வாகச் சில உணர்ச்சிகளும், சில பந்தபாசங்களும் உண்டு என்பதை மனத்தில் இருத்திக்கொண்டு, அந்த உணர்ச்சிகளை யும், பந்த பாசங்களையும் அடிப்படையாக வைத்து, தன் அறநெறியை வகுக்கும்பொழுது, அப்படி வகுக்கப்பெற்ற அறநெறி உலகிலே எந்தப் பகுதியிலும் வாழ்கின்ற மனித இனத்திற்குப் பொருந்துவதாக அமைந்துவிடுகின்றது.

பண்புகள் பளிச்சிடுகின்றன!

இந்த அடிப்படையில்தான் தமிழனுடைய நாகரிகத்தை யும், தமிழனுடைய அறநெறியையும், தமிழன் படைத்த இலக் கியங்களையும், நோக்கவேண்டும். இப்படி நோக்கும்பொழுது தான், தமிழினத்தினுடைய தொன்மை மாத்திரம் பெரிதாகத் தோன்றுமல், அந்தத் தொன்மையினுடைய பெருமைக்கு அடிப் படையாகவும், காரணமாகவும் விளங்குகின்ற, இந்தச் சிறந்த பண்புகள் ஒளிவிட்டு வீசுவனவாக அமைகின்றன.

தனிமனிதப் பண்பு

இப்படிப்பட்ட வள்ளுவன்தான் தொடக்கத்திலேயே தனி மனிதனுடைய அறத்தை மிக அழகாக விளக்கத் தொடங்கி விடுகிருன். அதாவது,

''மனத்துக்கண் மா(சு)இலன் ஆதல் அனைத்(து)அறன்
ஆகுல நீர பிற''

என்று கூறிவிடுகின்றான். இந்தக் குறளினுடைய சிறப்பை எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்து விளக்கிக்கொண்டே போகலாம். இந்தக் குறளுக்கு உரை எழுதப் போந்த பரிமேலழகர், 'மனத்தின்கண் குற்றம் உடையன் அல்லனாக; அவ்வளவே அறமாவது; அஃதொழிந்த சொல்லும் வேடமும் ஆரவார நீர்மைய' என்று கூறுவார்.

இந்தச் சிறு குறளில் கூர்ந்து நோக்கத்தக்கன மூன்று சொற்கள். ஒன்று, மனம் என்பது; இரண்டாவது, மாசு என்பது; மூன்றாவது, அனைத்து என்பது.

மனமே மூல சக்தி

இந்த மூன்று சொல்லாட்சியும் கருத்தாழம் மிக்க சொல்லாட்சி. அனுபவத்தில் ஒன்றை நாம் உணர்ந்திருக்கின்றோம். எதற்கும் ஆதியாகவும், மூலமாகவும் இருப்பது மனத்திலே உண்டாகின்ற அவாவும், வேட்கையும்தான். மனம், ஒன்றை எண்ணிய பிறகு, அதை வாய் வெளியிடுகின்றது; உடல் செய்கின்றது. மனம்தான் சொல்லையும், செயலையும் இயக்கும் மூலகர்த்தாவாகும். ஆக, இந்த மூலத்தில் களங்கமோ, குறையோ இருக்குமாயின், அந்தக் களங்கமும் குறையும் சொல்லிலும், செயலிலும் வெளிப்படுவது தவிர்க்க முடியாத தாக ஆகிவிடும். எனவே, எல்லாவற்றிற்கும் மூலமாக இருக்கின்ற மனம் தூய்மையடையுமாயின், அந்தத் தூய்மை தானாகவே சொல்லிலும், செயலிலும் மிளிரத் தொடங்கிவிடும். ஆகவே, ஒவ்வொன்றுக்கும் அடிப்படையாகவும், அஸ்திவார மாகவும் இருக்கின்ற மனத்தை இறுகப் பற்றிக்கொண்டான் கவிஞன். அந்த மனத்தைப் பற்றிக்கொண்டு, 'அந்த மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருப்பாயாக' என்று தனி மனிதனுக்கு உபதேசிக்கிறான். ஒரு மனிதன் மனத்தின்கண் களங்கமற்றவனாக, குற்றமற்றவனாக இருத்தலே, 'அறம் அனைத்தும்' என்று அவன் கூறுகின்றான்.

மாசிலா மனம்!

இங்கு மனத்துக்கு அடுத்தாற்போல நாம் காணவேண்டிய சொல் 'மாசு' என்பதாகும். 'மாசு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு, 'மறு', 'அழுக்கு', 'குற்றம்', 'கருமை', 'இருள்', 'மேகம்', 'பாவம்', 'தீமை', 'தூளி', 'அற்பம்' ஆகிய பொருள்கள் அனைத்தும் உண்டு.

இந்தப் பொருள்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று வேறு பட்டவையல்ல; ஒன்றையொன்று சார்ந்தவையே என்பது தெளிவு. ஆகையினால்தான், 'மாசு' என்ற சொல், அழுக்கு என்றாலும் சரி, குற்றம் என்றாலும் சரி, கருமை என்றாலும் சரி, பாவம் என்றாலும் சரி, அற்பம் என்றாலும் சரி, எதற்கும் பொருத்தமாக 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்ற சொல்லாட்சியில் அமைந்திருக்கின்றது. மனத்தினால் ஒருவன் அற்பத்தை நினைப்பானானால் அவன் சிறுமைக்கு இடம் கொடுத்து விடுகின்றான். மனத்தினால் ஒருவன் தீமையை நினைப்பானானால், பிறர்க்கு அவன் கெடுதல் செய்பவனாக ஆகிவிடுகின்றான். மனத்தினால் ஒருவன் பாவத்தை எண்ணு வானாயின், அவன் நன்மையினுடைய பலனை இழந்து விடுகின்றான். மனத்தை ஒருவன் அழுக்காக்கிக் கொண்டானே யானால், அந்த அழுக்கு அவனுடைய வாழ்க்கையை அழுக் காக்குவதோடு மாத்திரமல்லாமல், அவன் யார் யாருடன் தொடர்போ, உறவோ வைத்திருக்கின்றானோ, அவ்வனைவரையும் அழுக்காக்கிவிடும். ஆகையினால்தான், 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்பதை முதலில் குறிப்பிட்ட வள்ளுவன், அதுவே அனைத்து அறன் என்று சொல்வான். அதாவது, மனத்துக்கண் மாசிலனாக இருக்கின்ற தன்மை ஒன்றே எல்லா அறத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டதாக அமைந்து விடுகின்றது. அதற்கப்பாற்பட்ட அறம் வேறு எதுவுமில்லை என்ற கருத்துத் தொனிக்க வள்ளுவன் இதைச் சொல் கிறான். ஆகையினால்தான், இக் குறளுக்குப் பொருள் கூறிய மணக்குடவர், "ஒருவன் தன் மனத்தின்கண் குற்றமில்லா னாதலே எல்லா அறமும் ஆகும்" என்று கூறுவார். அதில்

அழுக்கு உண்டாகுமாயின், "செய்வனவெல்லாம் ஆரவார நீர்மைய" என்று கூறுகின்றார்.

முற்றவும் பளிச்சிடும் மூலத்தின் தூய்மை

இந்தக் குறளின் சிறப்பு என்னவென்றால், ஒரு மனித னுடைய வாழ்விலே நிகழ்கின்ற அனைத்திற்கும் மூலமாக இருக் கின்ற ஒன்றைத் தூய்மைப்படுத்த முயல்வதுதான்; ஏனெனில் அந்த ஒன்று தூய்மை அடைந்துவிடுமாயின், பிற அனைத்தும் தாமாகவே தூய்மையடைந்துவிடும் என்பதால்தான்.

நாம் ஆங்கிலத்தில் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம்: 'கடலே உப்புச் சத்தை இழக்குமாயின், உப்புக்கு வேறு எங்கு போவது?' என்று. ஆக, கடலில் இருக்கின்ற உப்பே, உப்புச் சத்தையுடைய பிற பொருள்கள் அனைத்துக்கும் காரணமாக அமைவதுபோல, மனத்தின்கண் மாசில்லாமல் இருக்கின்ற தன்மையே பிற அனைத்தையும் மாசற்ற தன்மையுடையனவாக ஆக்கிவிடும். இந்தக் குறளில் ஆளப்பெற்றிருக்கும், 'அனைத்து' என்ற சொல் மிக விரிந்த பொருளைக் கொடுக்கும். அதாவது, எதையும் தனக்கு அப்பாற்பட்டதாக இருக்கவிடாமல், எல்லா வற்றையும் தன்னுள்ளே அடக்கிக்கொள்ளும் தன்மையை உணர்த்த, இந்த 'அனைத்து' என்ற சொல் ஆளப்பெற்றிருக் கிறது. ஆகவே, 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்பதற்கு அப்பால் வேறு எந்த அறமும் இருக்க முடியாது. எல்லா அறமும் இது ஒன்றிலேயே அடங்கிவிடுகின்றது என்பதை வலியுறுத்துவதற்காக, வள்ளுவன் இந்தச் சொல்லைப் பயின் றிருக்கின்றான்.

உளத்து உரனுடையார்

இவ்வாறு வள்ளுவன் தொடங்கி வைக்கும் கருத்தே, பிற புலவர்களாலும் வெளியிடப்பெற்றிருக்கின்றது. புறநானூற் றில் இடம் பெற்றிருக்கும் ஒரு பாடல், இவ்வுயர்ந்த இலட் சியத்தின் ஓர் அம்சத்தை வலியுறுத்துவதாக அமையும். தான் எதை விழைகின்றான் என்பதை ஒரு கவிஞன் கூறுகின்றான். அப்படி கூறுவதற்கு, இரு பிராணிகளின் செயலை எடுத்துக்

கொண்டு, ஒன்றினுடைய தன்மையை உடையோரின் நட்பு தனக்கு இல்லாமல் இருக்க வேண்டுமென்றும், இன்னொன்றின் தன்மையை உடையோரின் நட்பு தனக்கு என்றும் இருக்க வேண்டுமென்றும் விழைகின்றான். அந்த இரு பிராணிகள் எலியும், புலியும் ஆகின்றன. எலி என்ன செய்கின்றது? நன்றாக வளர்ந்து முற்றின கதிரை எடுத்துக்கொண்டு சென்று தனக்காக நிறைத்து வைத்துக் கொள்ளும். புலி என்ன செய் கின்றது என்றால், இடப்பக்கத்தே வீழ்ந்திருக்கின்ற பன்றியை உண்ணாமல், பசித்திருந்து, வலப்பக்கத்திலே படும் களிற்றை உண்ணக் காத்திருக்கும். இத்தகைய எலியினுடைய தன்மை யையுடையவர்களுடைய நட்பு தனக்கு இல்லாமல் இருக்க வேண்டுமென்றும், புலியினுடைய தன்மையை உடையவர் களுடைய நட்பு தனக்கு என்றும் இருக்க வேண்டுமென்றும் விழைகின்றான், அந்தத் தனி மனிதன்.

"விளை பதச் சீறிடம் நோக்கி, வளை கதிர்
வல்சி கொண்டு, அளை மல்க வைக்கும்
எலி முயன்றனையர் ஆகி, உள்ள தம்
வளன் வலியுறுக்கும் உளம் இலாளரொடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ!
கடுங்கண் கேழல் இடம் பட வீழ்ந்தென,
அன்று அவண் உண்ணாதாகி, வழி நாள்,
பெரு மலை விடரகம் புலம்ப, வேட்டு எழுந்து,
இருங் களிற்று ஒருத்தல் நல் வலம் படுக்கும்
புலி பசித்தன்ன மெலிவு இல் உள்ளத்து
ஊனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உள ஆகியரோ!

சங்க கால இலக்கியத்திற்கே உரிய சொற்களால் ஆன பாட்டு இது. இதைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன் என்பவர்.

எலியனைய நண்பர்!

'வல்சி' என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'அரிசி', 'சோறு', 'உணவு' என்று பொருள். இங்கு அந்தப் பொருளில்தான்

'வளை கதிர் வல்சி' என்ற சொல்லாட்சியில் இடம் பெற்றிருக்கும் 'வல்சி' என்ற சொல் ஆளப்பெற்றிருக்கின்றது. 'அளை' என்ற சொல்லுக்கு 'வளை', 'முழை' என்று பொருள். 'மல்கல்' என்ற சொல்லுக்கு 'நிறைதல்' என்று பொருள். இங்கே எலியானது விளைந்த செவ்வியையுடைய சிறிய இடத்தைப் பார்த்து, வளைந்த கதிராகிய உணவைக் கொண்டு, முழையின்கண்ணே நிறைய வைக்கும். அத்தகைய எலியைப் போலச் சிறிய முயற்சியராக ஆகி, உள்ள தம்முடைய செல்வத்தை நுகராது. இறுகப் பிடிக்கும் உள்ளம் மிகுதியுள்ளாருடன் பொருந்திய நட்பு, தமக்கு இல்லையாகுக என்பது இதைப் பாடியவனுடைய விழைவு.

நான்காம் வரியில் இடம் பெற்றிருக்கும் 'வளன்' என்ற சொல் 'வளம்' என்பதின் திரிபேயாகும். 'வளம்' என்ற தமிழ்ச் சொல்லுக்குச் 'செல்வம்' என்றுதான் பொருள். அதே வரியில் காணப்படும் 'உளம் இலாளர்' என்ற சொற்றொடருக்கு 'உள்ள மிகுதி இல்லாதவர்', அதாவது 'உள்ளத்தில் உயர்வு இல்லாதவர்' என்று பொருள். பிறருடைய உழைப்பினாலும், முயற்சியினாலும் தோன்றிய நெல்லை, எலி அறுத்தெடுத்துக் கொண்டுபோய் வளையில் ஒளித்து வைத்துக் கொள்கின்றது. இந்தச் செயல் சிறுமையான செயல். அத்தகைய செயலைப் போலத் தம்முடைய செல்வத்தை நுகராமல் இறுகப் பிடித்துக் கொண்டிருக்கும் உயர்ந்த உள்ளம் இல்லாதவருடைய நட்பு தனக்கு இல்லாது ஆகுக என்று கவிஞன் பாடுகின்றான். 'கேண்மை' என்ற சொல் 'நட்பு' என்ற பொருளில்தான் இங்கே ஆளப்பெற்றிருக்கின்றது.

புலியனைய உரனாளர்

ஆக, எதிர்மறையாக ஒருவருடைய நட்பு தனக்கு வேண்டாம் என்று கூறிய புலவன், இப்பொழுது உடன்பாடாக யாருடைய நட்பு தனக்கு வேண்டும் என்று கூறத் தொடங்குகிறான். 'கேழல்' என்ற தமிழ்ச் சொல்லுக்குப் 'பன்றி' என்றுதான் பொருள். 'கடுங்கண்' என்ற சொல்லுக்குக் 'குரூரம்',

'கொடுமை' என்று பொருள். இங்கே, 'கடுங்கண் கேழல்' என்பது குரூரத்தையுடைய பன்றியைக் குறிக்கும். அத்தகைய பன்றி 'இடம் பட வீழ்ந்தென'; அதாவது, 'இடப்பக்கத்தே வீழ்ந்ததாக' என்று பொருள். கொடிய ஒரு பன்றியானது, புலியால் அடிக்கப்பட்டு, இடப்பக்கம் அது விழுமானால், அந்தப் புலி அதைப் புசிக்காது. இதனை ஏழாவது வரியில் உள்ள 'அன்று அவண் உண்ணாதாகி' என்ற சொற்கள் உணர்த்துகின்றன. அதாவது, தன்னால் அடிக்கப்பட்ட பன்றி இடப்பக்கமாக விழுமானால், அன்று புலி உண்ணாமல் இருந்து, வழிநாள், அதாவது பிந்தைய நாளில், பெரிய மலையினிடத்து அமைந்திருக்கும் தனது குகையில் தனித்திருந்துவிட்டு, உணவை விரும்பி எழுந்து, பெரிய களிறாகிய ஒருத்தலை நல்ல வலப்பக்கத்தே விழும்படி செய்யும் புலி பசித்திருந்தாற் போல், குறையில்லாத வலியையுடையவரது நட்பு, தன்னுடைய நாட்கள் கழிய, தனக்கு மிகுதியாகக் கிடைக்குமாக என்று அவன் விழைகின்றான்.

'விடரகம்' என்ற தமிழ்ச் சொல்லுக்குக் 'குகை' என்று பொருள். 'புலம்பு' என்ற சொல்லுக்குத் 'தனிமை' என்று பொருள். தன்னால் அடிக்கப்பட்ட பன்றி இடப்பக்கமாக விழ, அதை உண்ணாமல், தன்னுடைய குகையிலே தனியாகப் பசித்திருக்கும் புலி என்பதை உணர்த்துவதற்காக வந்த சொற்கள். பின்னர், அது தன் குகையினின்று வெளிப்பட்டு, பெரிய யானையொன்றை நல்ல வலப்பக்கத்தே விழும்படியாக அடிக்கும். 'இருங்களிறு' என்ற சொற்களுக்குப் 'பெரிய யானை' என்று 'பொருள். 'ஒருத்தல்' என்ற சொல், புல்வாய், புலி, உழை, மரை, கவரி, கராம், யானை, பன்றி, எருமை, கரடி என, மிருகங்களின் ஆண்பாலை உணர்த்தும். அப்படி வலப் பக்கமாக யானை விழும் வரையில் உண்ணாமல் பசித்திருந்த புலியைப்போல, 'மெலிவு இல் உள்ளத்து உரனுடையாளர் கேண்மை' என்று கவிஞன் குறிப்பிடுகின்றான்.

இங்கும், 'கேண்மை' என்ற சொல் 'நட்பு' என்றுதான் பொருள்படும். ஆனால், 'மெலிவு இல் உள்ளத்து உரனுடை

யாளர்' என்ற சொற்கள்தாம் பாடலினுடைய மையக் கருத்தை விளக்குவனவாக அமைந்திருக்கின்றன. 'மெலிவு இல் உள்ளம்' என்ற சொல் 'குறையில்லாத மேற்கோள்' என்று பொருள்படும். 'உள்ளம்' என்ற சொல்லுக்குப் பெரும்பாலும் நாம் 'மனம்' என்ற பொருளைத்தான் கொடுக்கின்ருேம். அது வல்லாமல், அந்தச் சொல்லுக்குக் 'கருத்து' என்ற பொருளும் உண்டு. அந்தப் பொருளில்தான், இங்கே அந்தச் சொல் ஆளப் பெற்றிருக்கின்றது. பழைய உரையாசிரியர்கள் அந்தச் சொல்லுக்கு 'மேற்கோள்' என்று பொருள் கொடுத்திருக்கிருர்கள். 'மெலிவு இல்' என்ற சொற்கள் கூர்ந்து நோக்கத்தக்கனவாகும். 'மெலிவு' என்ற சொல்லுக்குத் 'தளர்ச்சி', 'களைப்பு', 'தோல்வி' என்ற பொருள்கள் உண்டு. இங்கே இப்பொருள்கள் அனைத்தும் பொருந்தும்படியாக இச்சொல் இடம்பெற்றிருக்கின்றது. தளர்ச்சியில்லாத, களைப்புருத, தோல்வியைக் காணுத மேற்கோள் என்றுதான் பொருள்படும். 'உரன்' என்ற சொல்லுக்குத் 'திண்மை' என்று பொருள். ஆக, இங்கே தளர்ச்சியோ, குறைபாடோ, தோல்வியோ இல்லாத, திண்மையுடையவர்களுடைய நட்போடு இயைந்த வைகலும் உளவாக வேண்டுமென்று கவிஞன் விழைகின்ருன்.

'வைகல்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'நாட்கள்' என்றுதான் பொருள். ஆக, பிறருடைய உழைப்பினுல் தோன்றிய பயிரைத் திருடிக்கொண்டு சென்று, தனக்காக மறைத்து நிறைத்து வைக்கின்ற சிறிய முயற்சியினையுடைய எலியினுடைய தன்மையை ஒத்துத், தம்முடைய செல்வத்தை நுகராமல் பிடித்து வைக்கின்றவர்களோடு சேர்ந்த நட்புத் தனக்குக் கிடைக்காமல் இருக்கவேண்டுமென்றும், அதற்கு மாருக, தன்னுடைய முயற்சியினுலேயே வீழ்த்தப்பெற்ற பன்றி இடப்பக்கமாக விழுந்தபொழுது அதை உண்ணுமல், பசித்திருந்து, தன்னுடைய குகையிலே தனித்திருந்து, தனக்கு உணவு வேண்டும்பொழுது வெளிவந்து, பெரிய யானையை அடித்து, அதை வலப்பக்கமாக விழச் செய்து உண்ணும் புலியினுடைய தன்மையில், உயர்ந்த மேற்கோளையுடைய

திண்மையுடையவர்களுடைய நட்பு இயைந்து, தன்னுடைய நாட்கள் கழியவேண்டும் என்றும் கவிஞன் இங்கே விரும்பு கின்ருன்.

பெருமித மனவுணர்வு

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னது' என்பது ஒரு பழ மொழி. புலி இடப்பக்கமாக விழுந்த தன்னுடைய இரையை உண்ணது என்பதைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் கூறும். இங்கு கூர்ந்து நோக்கத்தக்கது என்னவென்ருல், புலியொன்றுக்குப் பன்றியை அடித்து வீழ்த்துவது சுலபம்; யானையை அடித்து வீழ்த்துவதோ கடினம். அப்படியிருந்தும் கூட, பெருமுயற்சியின்றி வீழ்த்தப்பட்ட பன்றியை அது இடப்பக்கம் வீழ்ந்தது என்ற காரணத்தினுல் புலி தின்னது. அதற்குமாருக, பெரிய முயற்சி தேவைப்படுகிற களிற்றினைக் கொன்று, அதை வலப்பக்கமாக விழச்செய்து, அதை உண்பதற் காக அப் புலி காத்திருக்கும். அதாவது, புலி போன்ற ஒரு மிருகத்திற்குக்கூட தான் எப்படி உண்ணவேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது. அந்த நியதிப்படியே அது செயல் படுகிறது. அதுபோலவே, மனிதன் சுலபமாகக் கிடைக்கின்றது என்பதற்காக எதையும் அடைய விழையாமல், மிக்க முயற்சி யுடன் கிடைக்கக்கூடிய உயர்ந்த ஒன்றையே அடைய விரும்ப வேண்டும் என்பது, இதனுல் உணர்த்தப்படும் உண்மை. இந்தப் புறநானூற்றுப் பாடலிலிருந்து எத்தகைய குணம் தனக் கிருக்க வேண்டுமென்று ஒருவன் விழைகிருன் என்பது தெளிவா கிறது.

தனிமனிதச் சிறப்பே சமுதாயச் சிறப்பு!

ஆக, வள்ளுவனுகட்டும், இந்தப் புறநானூற்றுப் பாடலைப் பாடியவனுகட்டும், தனி மனிதனுடைய பண்பாட்டி லிருந்தும், குறிக்கோளிலிருந்துமே தொடங்குகிருர்கள். அந்தப் பண்பாடும், குறிக்கோளும் ஓர் இலட்சியத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும் பொழுது, வாழும் நெறியும், ஒழுக்கமும்

விழுப்பம் உடைத்தாக ஆகி, சிறந்ததொரு குடிமகனைப் படைக்கிறது. இத்தகைய குடிமகனால் உண்டாக்கப்படுகின்ற சமுதாயம் தானாகவே சிறந்திருக்கும் என்பதைத் தனியாக எடுத்துக்கூறத் தேவையில்லை.

ஆக, இன்றைய தமிழன், தலை நிமிர்ந்து தன்னுடைய வரலாற்றையும், பண்பாட்டையும், சாதனையையும், ஒழுக்கத்தையும் பற்றிப் பேசுகின்றான் என்றால், அதற்கு வழிவகுத்துக் கொடுத்தவர்கள், அடிகோலியவர்கள், அற்புதமான மனோ பக்குவமும், உள்ளத் திட்பமும், சிறந்த இலட்சியமும் கொண்டவர்களாக இருந்து, அதன்படியான இலட்சிய வாழ்க்கையையே பிறரும் வாழ வேண்டுமென்று விரும்பியவர்கள்தாம். எனவே, தொன்மையினால் மாத்திரம் ஒரு சமுதாயம் சிறப்பு அடைய முடியாது. அந்தத் ·தொன்மையோடு திண்மையும் இருக்குமாயின், அந்தச் சமுதாயம் வலுவுள்ள சமுதாயமாக இருந்து, எதிர்ப்புக்களை சமாளித்து வெற்றி கொள்ளக்கூடிய சமுதாயமாக வளரும். ஆனால், இப்படி எதிர்ப்புக்களைச் சமாளித்து வெற்றி கொள்கின்ற சமுதாயத்தில், திண்மை இருந்தால் மாத்திரம் போதாது. இந்த வெற்றியின் பயனாகவும், இந்த வெற்றிக்கு உறுதுணையாகவும் இருக்க வேண்டியது தண்மையாகும்.

தண்மை கொண்ட சமுதாயம்

'தண்மை' என்ற அற்புதமான தமிழ்ச் சொல்லுக்கு, 'இன்பம்', 'மென்மை' போன்ற பொருள்கள் இருப்பினும், 'குளிர்ச்சி', 'சாந்தம்' ஆகிய பொருள்கள்தாம் சிறக்கும். காரணம் என்னவென்றால், ஒரு கோட்பாட்டின் வழிநின்று, எதிர்ப்புக்களைச் சமாளித்து வெற்றி கொண்டவிடத்து மனநிறைவு உண்டாகின்றது. அந்த மன நிறைவில் இருந்து பிறப்பது குளிர்ச்சியும், சாந்தமும். வடமொழி அறநூல்கள் அனைத்தும். 'சாந்தி' என்பதையே மனித முயற்சியுடைய, வாழ்வினுடைய இறுதிக் குறிக்கோளாகக் காட்டும். அதுவே சலனமற்ற நிலை. அந்தச் ·சலனமற்ற நிலையில், விருப்பு

வெறுப்புக்கோ, கோபத்துக்கோ, குமுறலுக்கோ, வெறிக்கோ, ஆத்திரத்துக்கோ இடமில்லை. அந்த நிலையைத்தான் 'தண்மை' என்ற அருமையான தமிழ்ச்சொல் குறிக்கும்,

இந்தக் குளிர்ச்சியும், சாந்தமும் நிலவுகின்ற சமுதாயம், கொடுமையினின்றும் விலகி, அன்பும், அருளும், கருணையும் நிறைந்த சமுதாயமாக வாழ்வதின் காரணமாக, தான் வாழ்வதோடு பிறரையும் வாழ வைக்கும் சமுதாயமாக ஆகிவிடுகின்றது. அத்தகைய சமுதாயத்தைப் படைக்க விரும்பியவன் தான் தமிழன். தமிழிலுள்ள பழம்பெருங் காப்பியங்கள் அனைத்தும், அறநூல்கள் யாவும், இந்த உண்மையையே பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த அழியாத உண்மைகளைப் பறைசாற்றிக் கொண்டிருப்பதின் காரணமாகத்தான், தமிழ் மொழி, இறவாது என்றும் வாழும் மொழியாக இருக்கிறது.

1981 ஜனவரி மாதத்தில் மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டையொட்டி. 7-1-1981-ல் வெளியிடப்பெற்ற விழாமலரில் வெளியானது.

பேசாப் பொருள்

தோல்வியில் தோன்றும் சிந்தனை!

உலகம் தோன்றிய நாள் முதற்கொண்டு தனக்கு மீறிய சக்தியொன்று இருக்கின்றது என்பதை மனிதன் உணர்ந்தேயிருக்கின்றான். இந்தச் சக்தி அவனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், அவனை உணரச் செய்துகொண்டேயிருக்கின்றது என்பது வெளிப்படை.

மனிதன் ஒன்றைச் செய்கின்றான்; ஒன்றைத் துணிகின்றான்; ஒன்றை அடைய விழைகின்றான்; அதைப் பெற முயல்கின்றான்; அந்த முயற்சியில் தன் ஆற்றல் முழுவதையும் செலுத்துகின்றான். என்றாலும், தான் எண்ணியதை அவனால் சாதித்துக் கொள்ள முடிவதில்லை; தான் விரும்பியதை அவனால் பெற்றுக் கொள்ள முடிவதில்லை; தன் முயற்சியில் அவனால் வெற்றிபெற முடிவதில்லை. அதற்கு மாறாக, தன்னுடைய முயற்சியில் தானே அழிந்துபோகின்ற நிலைகள் பலவும் உண்டு.

இச் சூழலில் மனிதன் இயற்கையாகவே 'ஏன் இப்படி நிகழ வேண்டும்?' என்று சிந்திக்கின்றான். தன்னுடைய எண்ணத்தில் திட்பம் இருக்கின்றது; ஆர்வத்தில் வேகம் இருக்கின்றது; முயற்சியில் நம்பிக்கையிருக்கின்றது; விருப்பத்தில் உண்மையிருக்கின்றது; தன்னுடைய முயற்சியில் ஒருமுகமாகத் தன் ஆற்றல் முழுவதையும் செலுத்துகின்றான்;

அப்படியிருந்தும்கூட ஏன் அவனால் வெற்றிபெற முடிவதில்லை? இந்தக் கேள்வி ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் எப்பொழுதாவது எழுந்துதான் இருக்கவேண்டும். தன்னுடைய முயற்சியில் குறையிருக்குமேயானால், தன்னுடைய எண்ணத் தூய்மையில் களங்கம் இருக்குமேயானால், தன்னுடைய ஆற்றலில் பலவீனம் இருக்குமேயானால், அவற்றைத் தன்னுடைய தோல்விக்குக் காரணமாகக் காண முடியும். அப்படியொன்று இருக்காத பொழுது, 'ஏன் தான் தன்னுடைய முயற்சியில் தோற்க வேண்டும்?' என்று கேட்கவே செய் கின்றான்.

வளர்ச்சியும் தேய்வும்!

தன்னைச் சுற்றிலும் அழகைக் காண்கின்றான். ஆனால், அந்த அழகு நிரந்தரமாக இருப்பதில்லை; என்றோ ஒருநாள் அழிந்து போகவே செய்கின்றது. தன்னுடைய இளமையை நோக்குகின்றான். அதில் இருக்கின்ற துடிப்பு, வேகம், உணர்ச்சி, துணிவு, அழகு அனைத்தையும் உணரவே செய்கின்றான். இவற்றின் காரணமாகத் தான் ஈடுபடும் செயல்களில் ஒரு தெம்பும், தெளிவும் இருப்பதையும் காண்கின்றான். ஆனால், இந்த இளமையும் நீடிப்பதில்லை. வயது ஆகஆக இந்த இளமை சிறிது சிறிதாக மறைந்து முதிர்ச்சி உண்டாகின்றது. அந்த முதிர்ச்சியின் காரணமாக நரை திரை தோன்றுகின்றன; இருந்த தெம்பு குறைகின்றது; பழைய வேகம் இருப்பதில்லை; முடிவிலே தான் இளமையில் இருந்ததற்கு நேர்மாறான ஒரு நிலையை அடைகின்றான். எண்ணங்களும் மாறுகின்றன; சிந்தனைகளும் திசை திரும்பு கின்றன; செயல்களும் சோர்வடைகின்றன. இதற்குக் காரணம் என்ன?

பரம்பொருள் நினைவு

இத்தகைய கேள்விகள் தோன்றித் தோன்றி மனித வர்க்கத்தின் தொடக்கத்தில் இருந்தே ஒரு தெளிவு உண்டாகி

யிருக்கின்றது. அதுதான் இவையனைத்தும் இயற்கை; இவற்றை இப்படி நடத்திச் செல்வதற்கு ஒரு கட்டுப்பாடு இருக்கின்றது; இந்தக் கட்டுப்பாட்டை வரையறுத்த பரம்பொருள் ஒன்றிருக் கின்றது: அந்தப் பரம்பொருளே பிரபஞ்சத்தை நடாத்தி ஆள்கின்றது; அதனுடைய சித்தமே இப் பிரபஞ்சத்தின் சிருஷ்டியாகவும், வாழ்வாகவும், மறைவாகவும் ஆகின்றது; இந்தப் பரம்பொருள் சகல சக்திக்கும் இருப்பிடமாகவும், அவற்றின் களஞ்சியமாகவும் இருப்பதின் காரணமாக, அதற்கு மீறி, அதன் இச்சைக்கு அப்பாற்பட்டு, அதனை எதிர்த்து, யாரும், எதையும் செய்துவிட முடியாது, சாதித்துவிட முடியாது என்ற திண்ணமான உண்மை புலப்படுகின்றது. அப்படியானால், படைப்புக்கும், இந்தப் பரம்பொருளுக்கும் இருக்கக்கூடிய உறவு எத்தகையது என்பதைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகிறான்.

காணவியலாததைக் கற்பிக்கின்றான்

இந்தப் பரம்பொருளுடைய சக்திக்கு இணையாக வேறெதையும் தன்னால் காண முடியவில்லை; கருதமுடியவில்லை; கற்பனை செய்யவும் முடியவில்லை என்பதையும் உணர்கின்றான். அதே சமயத்தில், தன்னைப் படைத்தது அந்தப் பரம்பொருள் தான், தன் வாழ்விற்கு வேண்டிய அனைத்தையும் படைத்துத் தந்ததும் அந்தப் பரம்பொருள்தான், தன்னுடைய வாழ்வுக்கு வித்தாகவும், தான் பெறும் நன்மைக்கு காரணமாகவும், தன்னுடைய இன்பத்திற்கு ஆதாரமாகவும் இருப்பது, அந்தப் பரம்பொருளே என்பதை உணரவும் செய்கின்றான்.

அப்படி உணருமிடத்து, அந்தப் பரம்பொருளைப் புகழ் கின்றான், பாராட்டுகின்றான், போற்றுகின்றான், வணங்கு கின்றான். ஆனால், இவற்றைச் செய்யும்பொழுது மனத்தினால் அந்தப் பரம்பொருளின் தன்மையைக் கற்பித்துப் பார்க்க முயல் கின்றான். தான், தன்னைச் சுற்றியிருக்கும் பிரபஞ்சத்தின் படைப்புக்களையும், அவற்றின் தன்மைகளையும், அவற்றின்

பண்புகளையும் பார்த்து, அவற்றிற்கு மூலமாக, அவற்றின் கருவாக இருக்கின்ற பரம்பொருளுக்குச் சில தனியான குணங்கள் இருக்கவேண்டும் என்றும் எண்ணுகின்றான்.

ஆக்குவதும் அழிப்பதும் அதுவே!

அதே சமயத்தில், அதே பரம்பொருள் இவ்வழகான படைப்புக்களைப் படைத்ததோடு மாத்திரமல்லாமல், இப்படைப்புக்கள் அனைத்தும் அழிவதற்குக் காரணமாக இருப்பதையும், அவன் காணத் தவறுவதில்லை. ஓர் உயிர் பிறக்கும் பொழுது ஆனந்தப்படவே செய்கின்றான். ஆனால் அந்த உயிர் இறக்கும்பொழுது வருந்துகின்றான். அப்படி வருந்துவதின் காரணமாக, அவனுடைய இறப்புக்குக் காரணமாக இருந்த அந்தப் பரம்பொருள் கொடுமையானது, அன்பில்லாதது, கருணையற்றது என்ற முடிவுக்கு வருவதில்லை.

ஏனென்றால், உயிரினம் தான் தொடர்ந்து வாழ்வதற்குக் கண்டுபிடித்த ஒரு வழியே இறப்பாகும். பிறந்த உயிர்கள் அனைத்தும், தோன்றியவை அனைத்தும் நிரந்தரமாக இருக்குமேயானால், இறப்பு அல்லது மறைவு என்ற ஒன்றுக்கு இடமில்லாமல் போக, பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டையோ, ஒன்றினால் உண்டாகும் ஆனந்தத்தையோ, மற்றதினால் உண்டாகும் வருத்தத்தையோ அனுபவிப்பதற்கும் வாய்ப்பில்லாமல் போய்விடும்.

உண்மையில் பார்க்கப்போனால், பிறப்பு என்ற ஒன்று இருப்பதின் காரணமாகவே, இறப்பு என்ற ஒன்று தோன்றுகின்றது. நம்முடைய அனுபவத்தில் நாம் காண்பது, பிறப்பவை அனைத்தும், தோன்றுவதனைத்தும் நிரந்தரமாக இருக்குமேயானால், புதிதாகப் பிறப்பதற்கும், தோன்றுவதற்கும் இடமில்லாமல் போய்விடும். எனவேதான், பிறப்பும் இறப்பும் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றை மனிதன் இயற்கையாகவே கொள்கின்றான்.

கருணகரப் பொருள்!

உண்மையில் பார்க்கப்போனல், ஒரு மனிதன் தன்னுடைய வயது முதிர்ச்சி அடைந்து, தன்னுடைய அவயவங்கள் பழைய சக்தியை இழந்து, அதனுல் பலவீனம் ஏற்பட, தான் வாழ்வ தற்குப் பதிலாக இறப்பதையே விரும்புகின்ருன். அந்தச் சமயத்தில் தனக்குக் கிடைக்கும் மரணமும் இறைவனுடைய கருணை என்றே எண்ணுகின்ருன். அவன் எண்ணுவதோடு மாத்திரமல்லாமல், உயிரோடு இருக்கின்ற பலரும் அவ்வாறே எண்ணத் தொடங்குகிருர்கள்.

இப்படி எண்ணிப் பார்க்கின்ற பொழுதுதான், பரம் பொருள் பரிபூர்ணமாகக் கருணை வடிவமாகவே யிருக்கின்றது; அதனுடைய பண்புகள் அனைத்தும் கல்யாண குணங்களாகவே இருக்கின்றன; அது செய்வது அனைத்தும் நன்மையாகவே இருக்கின்றன என்ற அசைக்க முடியாத உறுதிப்பாட்டிற்கும் வருகின்ருன். இப்படி வரும்பொழுது, தன்னை அறியாமல் அந்தப் பரம்பொருளைப் பற்றி நினைக்கின்ருன்; அதனுடைய பண்புகளைப்பற்றிப் பாடுகின்ருன்; அதனுடைய கல்யாண குணங்களைப் பாராட்டுகின்ருன். அதனுடைய அழகிலும், அதனுடைய சக்தியிலும், அதனுடைய கருணையிலும், அதனுடைய அருளிலும் தன்னை இழந்து, தன்னையறியாம லேயே புகழவும், பாராட்டவும், பாடவும் தொடங்கிவிடு கின்ருன்.

தொடுகிருன் புகழ்கிருன்!

இப்படி அவன் செய்கின்ருன் என்ருல், ஏதோ தான் பார்த்த ஒன்றைப்பற்றியோ, தான் கேட்ட ஒன்றைப் பற்றியோ அல்லது தான் அறிந்த ஒன்றை பற்றியோ பேசுகின்ருன், அல்லது பாடுகின்ருன் என்பதில்லை. இவனுக்குப் பேசக் கற்றுக்கொடுத்ததும் அந்தச் சக்திதான். ஆகையினுல், தனக்குப் பேசக் கற்றுக்கொடுத்த சக்தி, தன்னுடைய பேச்சுக்கு அப்பாற்பட்டது என்பதையும், அவன் உணரத்

தவறுவதில்லை. என்றாலும்கூட, தன்னைப் படைத்தவனுக்குத் தான் செய்யவேண்டிய நன்றியை வணக்கத்தின் வழியாகவும், துதியின் வழியாகவும் செலுத்த வேண்டியிருப்பதின் காரணமாகத், தன்னால் பேசமுடியாத பொருளைப்பற்றிப் பேசவும் செய்கின்றான்.

மோனமென்னும் பெருநிலை!

இந்தப் பேச்சு மவுனநிலையை அடைந்து, அதைப் பற்றிய வெறும் எண்ணமாகவும், சிந்தனையாகவும் மாறுவதுமுண்டு. ஆனால், உலகிலே வாழ்கின்ற அத்தனைபேரும், இந்த மவுன நிலையை அடைய முடியாது. வெகு சிலரால்தான் இந்த நிலையை யடைய முடியும். அப்படி அடைகின்ற மவுனநிலை வெறுமனே பேசாமல் இருக்கின்ற ஊமை நிலையாக மாத்திர மல்லாமல், தன்னை முழுவதும் ஒடுக்கிக்கொள்கின்ற மவுன நிலையாக, அந்த ஒடுக்கத்தின் காரணமாக அந்தப் பரம்பொருளாடு ஒன்றிவிடுகின்ற நிலையாகவே மாறிவிடும். அத்தகையவர்கள்தாம் நம்முடைய நாட்டிலே தோன்றிய முனிவர்களும், மஸ்தான்களும், சித்தர்களும், பக்தர்களும் ஆவார்கள்.

மோனங்காணுதார் பாடினர், பேசினர்

ஆனால், இந்த மவுனநிலையை முழுமையாக அடையாத வர்கள், அல்லது அந்த மவுன நிலை கிடைப்பதற்கு முன்னால், அந்த இறைவனைப்பற்றிப் பேசியும், பாடியும். துதித்தும் வந்தவர்கள், நம் நாட்டின் கவிஞர்களாகவும், ஞானி களாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கற்பனையின் மூலமாகவும், கவிதா விலாசத்தின் மூலமாகவும் இறைவனைப் புகழ்ந்திருக்கின்றார்கள்; போற்றியிருக்கின்றார்கள், பாடியிருக்கின்றார்கள்.

பேசத் துணிந்த பாரதி

ஆகவே, இத்தகைய இறைவனைப் பாடுகின்ற தன் செயலை நம் நாட்டிலே இந்த நூற்றாண்டு வரையில் வாழ்ந்து மறைந்த

கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார், 'பேசாப் பொருளே பேச நான் துணிந்தேன்' என்று பாடி உணர்த்துகிறார். இந்த வரியினுடைய பொருளை உணர்ந்துகொள்ள வேண்டுமானால், மேற்கூறிய அனைத்தையும் பரிபூரணமாகத் தெரிந்து கொண்டால்தான், அதனை முழுமையாக உணரமுடியும். கவிச்சக்கரவர்த்தியாகிய சுப்பிரமணிய பாரதியாரின் இந்தக் கூற்றில் இடம் பெற்றிருக்கும், 'துணிந்தேன்' என்ற சொல் கூர்ந்து நோக்கத்தக்கது. எதைத் துணிச்சல் என்று சொல்கிறோம்? அசாதாரணமான செயலை, செயற்கரிய செயலை, சக்திக்கு அப்பாற்பட்ட செயலைச் செய்ய முற்படுதலைத் 'துணிச்சல்' என்று சொல்கிறோம்.

பேசாப் பெரும் பொருள்!

'பேசாப் பொருள்' என்பதற்கு இருவிதமாகப் பொருள் கொள்ள முடியும். ஒன்று 'பேச்சினால் உணர்த்த முடியாத பொருள்' என்று பொருள் கொள்ளலாம்; இரண்டாவது, 'அந்தப் பொருள் பேசாத பொருள்' என்றும் பொருள் கொள்ளலாம். பேச்சினால் உணர்த்த முடியாத பொருள் என்பதை மேலும் விளக்கத் தேவையில்லை. நம்முடைய உலகம் தோன்றிய நாள் முதற்கொண்டு கவிஞர்களும், ஞானிகளும், தத்துவ மேதைகளும் இறைவனைப் பற்றிப் பாடியிருக்கின்றார்கள், பேசியிருக்கின்றார்கள், எழுதியிருக்கின்றார்கள். ஆனால், அவர்களுடைய பேச்சு முழுவதும், எழுத்து முழுவதும், இறைவனை முழுமையாக உணர்த்தி விட்டது என்று சொல்லமுடியாது. இனிமேல் எத்தனை ஞானிகளும், கவிஞர்களும், எழுதினாலும் பேசினாலும் நிலைமை அதுவேதானாகும். காரணம் என்னவென்றால், பரம்பொருளின் தன்மை பிறருடைய கற்பனைக்கும் அப்பாற்பட்டது என்பதனால், அதை எந்தப் பேச்சினாலும், சொல்லினாலும் முழுவதுமாக விளக்க முடியாது என்பதுதான்.

அது போலவே அதனைப் 'பேசாப் பொருள்' என்று சொல்வதும் பொருத்தம் உடைத்தேயாகும். இதுவரையில்

இறைவன் எவரிடமாவது நேரில் பேசினுன் என்று சொல்ல முடியாது. பேச்சு என்பதை நாம் ஒருவிதமாகப் புரிந்து கொண்டிருக்கின்ருேம். பேசுவதற்கு நாக்கு என்று ஒன்றிருக்க வேண்டும்; அந்தப் பேச்சின் பொருளே உணர்த்துவதற்கு மொழி ஒன்றிருக்க வேண்டும் என்பதை, நாம் நம்முடைய அனுபவத்தின் காரணமாக உறுதியாக நம்பிக் கொண்டிருக்கிருேம். எனவே, ஏதாவதொன்று பேசுகின்றது என்று சொன்னுல் நம்மை அறியாமலேயே அது பேசுகின்ற மொழி ஒன்றைக் கற்பித்துக்கொள்கின்ருேம். அப்படிப் பேசுவதற்கு உதவியாக இருக்கின்ற நா, ஒன்றையும் கற்பித்துக் கொள்கின்ருேம்; எப்பொழுது நாவைக் கற்பித்துக்கொள்கின்ருேமோ, அந்தப் பொருளுக்கு ஓர் உருவத்தையும் கற்பித்துக் கொள்ளவேண்டிய அவசியம் உண்டாகின்றது. ஆனுல், நாம் இப்பொழுது கருதுகின்ற பரம்பொருளோ உருவம் அற்றது. ஆகையினுல், அது பேசும் என்பதற்கு வழியில்லே. ஆகையினுல்தான், அது ‘பேசாப் பொருள்’ என்று சொல்வது பொருத்தமுடைத்தாகும்.

இருந்தபோதிலும், இந்தப் ‘பேசாப் பொருள்’ பேசாமல் பேசவே செய்கின்றது. எப்படிப் பேசாமல் பேசவே செய்கின்றது என்பதை, உணர்ந்தவர்கள்தான் புரிந்து கொள்ளமுடியும். சிற்சிலசமயங்களில் சிலருடைய உள்ளத்தில் சில உதிப்புக்கள் உண்டாவதை அவர்கள் உணர்வார்கள். இந்த உதிப்புக்கள் ஏதும் இவர்களுடைய சிந்தனேயின் முடிவாக அமையாமல், இவர்களுடைய பிரார்த்தனேயின் முடிவாக அமைவதை இவர்கள் காண்பார்களேயானுல், இப் பேசாப் பொருள் பேசுவதை உணர்வார்கள். அப்படிப் பார்க்கும் பொழுது, பாரதியாருடைய இந்தப் ‘பேசாப் பொருள்’ என்ற சொற்களினுடைய ஆழ்ந்த பொருளே உணர்ந்துகொள்ள முடியும். இந்த இறைத்தன்மையினுடைய ஒரு பகுதியை அருமையாக, ஒரு கவிஞர், ஓர் அற்புதமான பாடலில் விளக்கியிருக்கின்ருர்.

கவிஞரின் தேன் நினைவு!

'தேன்' என்பது நாம் எல்லோரும் அறிந்தது; அனுபவிப்பது. அதனுடைய ருசியையும் நாம் எல்லோரும் அனுபவித்தே யிருக்கின்றோம். ஆனால், இந்தத் தேனினுடைய ருசியை நாம் அனுபவிக்க வேண்டுமானால், மலர்களிலே தங்கி யிருக்கும் தேனைத், தக்க பருவத்திலே தேனீக்கள் எடுத்துச் சேர்த்து நமக்குக் கொடுக்கவேண்டும். இந்தத் தேனீக்கள், மலர்களிலே தோன்றும் இந்தத் தேனைத் தேடிச் சேகரித்து நமக்குக் கொடுக்காவிட்டால், 'தேன்' என்ற ஒன்றை நாம் அறிய மாட்டோம், அனுபவிக்க மாட்டோம்; அதனுடைய ருசியைத் தெரிந்திருக்க மாட்டோம். இந்தத் தேனைப்பற்றி நாம் எப்பொழுதெல்லாம் நினைக்கின்றோம் என்றால், இனிப்பு என்ற சுவையின் உச்சத்தை எப்பொழுதெல்லாம் எண்ணுகின்றோமோ அப்பொழுதெல்லாம் நாம் நினைக்கின்றோம். ஆக, தேனைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம், சில, நம்முடைய உள்ளத்தில் தாமே உதிக்கின்றன. முதலாவதாக, இனிப்பு என்ற சுவைக்கு உச்சமாகவும், உவமையாகவும் நம்மால் ஆளப்படுவது. இரண்டாவது, இது இயற்கையாக மலர்களிலே தோன்றுவது என்பது. மூன்றாவது, இந்த மலர்களில் இருக்கும் தேனைத் தேடிச் சேகரித்துக் கொடுக்கும் வண்டுகள் இருக்கின்றன; அவ் வண்டுகள் இல்லாவிட்டால், நமக்கு இந்தத் தேன் கிடைக்காது என்பது.

ஆனால், இந்த வண்டுகளுடைய உதவியின்றி, தானாகவே இன்பத்தின் உச்சமாக நமக்கு ஒன்று கிடைக்குமானால், அதுதான், 'பரம்பொருள்' என்பது. இப்படித் தோன்றுகிறது அந்தக் கவிஞருக்கு.

எழுதாக்கிளவி—பேசாப்பொருள்

நாம் கேட்கின்ற, படிக்கின்ற வேதங்கள் அனைத்தும், அவற்றினுடைய இறுதிப் பொருளாக நமக்கு உணர்த்த முற்படுவது இந்தப் பரம்பொருளைத்தான். இந்த வேதங்கள் எத்தகையவை? இவற்றை ஆக்கியவர்கள் யார்? இவை நமக்கு எப்படி கிடைத்தன? என்று சற்றுச் சிந்தித்துப் பார்த்தால், பல

உண்மைகள் விளங்கும். வடமொழியிலே இந்த வேதங்களை 'ஸ்ருதி' என்றே சொல்வார்கள். 'ஸ்ருதி' என்ற சொல் ஒலி வடிவமாகக் காதால் கேட்டதைக் குறிக்கும். ஆகவே, காதால் கேட்கப்பட்ட பொருளுக்கு எழுத்து என்பதில்லை. நாம் அறிந்து கொண்டிருப்பது எழுத்துக்கு ஒலிவடிவம், வரிவடிவம் என்ற இரண்டு உண்டு என்பதுதான். வரி வடிவத்திற்கு முன்னால் உண்டானது ஒலி வடிவம். ஆனால், ஒலி வடிவத்திற்கும் முன்னால் உண்டானது உள்ள உணர்ச்சி. இந்த உள்ள உணர்ச்சி வேதமாகக் கொள்ளப்படும்பொழுது, அது எழுத்தை அறியாத வேதமாக ஆகின்றது. ஆகவேதான், வேதத்திற்கு 'எழுதாக் கிளவி' என்ற ஒரு பெயரும் உண்டு. பேசாப் பொருளுக்கு, எவ்வளவு நெருக்கமாக இந்த எழுதாக் கிளவி இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளலாம். இந்த எழுதாக் கிளவியாகிய வேதங்களினுடைய உட்பொருளாகவும், இறுதிப் பொருளாகவும் கூறப்படுவதுதான் பரம்பொருள். நாம் அறிந்து கொண்டுள்ள எந்தப்பொருளும் எழுத்தின் மூலமாக அறிந்து கொள்ளப்படுவதுதான். அது ஒலி வடிவாகவும், வரி வடிவாக—எழுத்தாகவும் இருக்கலாம். ஆனால், நாம் எழுத்தின் உதவியின்றி, அறிந்து கொள்கின்ற பொருள் எதுவுமேயில்லை என்று சொல்லமுடியும். என்றாலும், ஒரு பொருள் இருக்கிறது, எழுத்தினுடைய உதவியின்றி அறியப் படுவது; அதுதான் பரம்பொருள். ஆனால், அந்தப் பரம் பொருளை நாம் அறிந்து கொள்வதில்லை, உணர்ந்து கொள்ளவே செய்கின்றோம். ஆகையினால்தான், அந்தப் பரம்பொருள் எழுத்தறியாத மறைப்பொருளாக இந்தக் கவிஞருக்குத் தோற்றம் அளிக்கின்றது.

காயறியாச் செழுங் கனி!

அடுத்து, அந்தக் கவிஞருக்கு இந்தப் பரம்பொருள் வேறு ஒன்றாகவும் காட்சியளிக்கின்றது; செழுங்கனியாக. 'கனி' என்ற சொல்லை நாம் பயன்படுத்தும்பொழுது, அதில் ஓர் இனிமை உணர்ச்சி தானாகவே தோன்றுகின்றது. கனி, செழுங் கனியாகவும் இருக்குமேயானால், அந்த இன்ப உணர்ச்சி உச்சத்தின் இலக்கையே அடைந்துவிடுகின்றது. இந்தக் கனி

எப்படிக் கிடைக்கின்றது என்பது நாம் எல்லோரும் அறிந்தது தான். ஒரு செடியோ மரமோ வளர்ந்து, மலர்ந்து, அந்த மலரிலிருந்து காய் உண்டாகி, அந்தக் காய் பழுத்துக் கனியா கின்றது. ஆனால், இந்த மரமோ, மலரோ, காயோ இல்லாமல் கனியாகவே இயற்கையாக அமைந்துவிடுவது இந்தப் பரம் பொருள் என்று அந்தக் கவிஞர் கூறுகின்றார். இப்படிக் கூறுவதில் பல சிறப்புக்கள் அமைந்திருக்கின்றன. 'கனி' என்று நாம் சொல்லும் பொழுது, அதற்கு மூலம் மரம் அல்லது செடி என்ற உணர்வு தானாகவே உண்டாகின்றது. பரம் பொருளுக்கோ, தனியாக மூலம் என்ற எதுவுமேயில்லை. அதுவே மூலமாகவும், ஆதியாகவும், அதற்கு முற்பட்டது வேறு எதுவுமேயில்லை என்பதாகவும் இருக்கின்றது. ஆகையினாலே ஒரு கனியாகப் பரம்பொருளைக் கொள்வோமேயானால், அது இந்த இயற்கை நியதிப்படி மரத்தில் மலராக மலர்ந்து, அந்த மலரில் இருந்து காய் தோன்றி, பின்னால் பழுத்துக் கனியாக இருக்க முடியாது. வேறு ஒரு சிறப்பும் இங்கே இருக்கவே செய்கின்றது. 'கனியிருக்கக் காய் கவர்ந்தற்று' என்பது வள்ளுவர் வாக்கு. அதாவது, ஒரு பொருள் காயாகவும், பின் கனியாகவும் இருக்குமாயின், அவை இரண்டிலும் கனியை இன்பத்தைக் கொடுக்கக் கூடிய நிலையைக் குறிக்கவும், காயை இன்பம் கொடுக்காத நிலையைக் குறிக்கவும் நாம் ஆள்கிறோம். ஆக, கனியாவதற்கு முன் அது காயாக இருக்குமானால், இன்பத்தைக் கொடுக்காத நிலை ஒன்று அதற்கு இருந்ததாக ஆகும். ஆகவே, என்றுமே இன்பத்தைக் கொடுக்கக்கூடிய நிலையை உடையதாக அந்தக் கனி இருக்கவேண்டுமாயின், அந்தக் கனி ஒரு மரத்தில் இருந்து பூவாகி, காயாகி, கனி யாகாததாக, கனியாகவே மாத்திரம் என்றும் இருப்பதாக ஆகவேண்டும். ஆகவேதான், இந்தக் கவிஞர் இந்தப் பரம்பொருளை இத்தகைய 'கனி' என்று குறிப்பிடுகின்றார்.

கற்பகத்தின் பசுங்கொழுந்து!

இந்தக் கவிஞருக்கு இந்தப் பரம்பொருள் வேறொன்றாகவும் தோன்றுகின்றது. அதுதான் 'கொழுந்து'. 'கொழுந்து' என்று

சொன்ன மாத்திரத்தில் நம்முடைய மனக்கண்முன் தோன்றுவது இளமையான, அழகான, மென்மையான, பச்சைப் பசேல் என்ற, கண்ணுக்குக் குளிர்ச்சியான ஒன்று. அந்தக் கொழுந்து எப்பொழுதும் கொழுந்தாகவே இருக்கு மானுல், அது எந்த அளவுக்கு மனத்தைக் கவரும் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லே. ஆனுல், எந்தக் கொழுந்துமே முதிர்ந்து இலேயாகிக் கடைசியாகக் காய்ந்து உதிரக்கூடியதே. அப்படியானுல், இந்தக் கொழுந்தை நாம் இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்கின்ற பரம்பொருளோடு ஒப்பிடுவது பொருந்தாது. அதற்காகத்தான் இந்தக் கவிஞர் இந்தப் பரம் பொருளேச் சாதாரண பசுங்கொழுந்து என்று சொல்லாமல், கற்பகத்தின் பசுங்கொழுந்து என்று சொல்கின்ருர். ‘கற்பகம்’ என்பது சுவர்க்கத்தில் இருக்கும் ஒரு மரம் என்றும், அது விரும்பியவர்களுக்கு விரும்பியதைக் கொடுக்க வல்லது என்றும், இந்நாட்டு மக்கள் கருதி வருகின்ருர்கள். சுவர்க்கத்தில் இருக்கும் இத்தகைய மரம் என்றும் பசுமையாகவேதான் இருக்க முடியும். அத்தகைய மரத்தினுடைய பசுங்கொழுந்தாகவே இறைவனே இந்தக் கவிஞர் காண்கின்ருர்.

கருவமுதூட்டும் கருணே!

இவையாவற்றிற்கும் மேலாக, இந்தப் பரம்பொருளே வேருெரு கோணத்திலிருந்தும் இந்தக் கவிஞர் காண்கின்ருர். நாம் ‘கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிக்கும் இறைவன்’ என்று இறைவனுடைய அருளேயும், கருணேயையும் என்றுமே பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கின்ருேம். கல்லினுள் இருக்கும் தேரைக்கு மாத்திரம் அவன் இரையளிப்ப தில்லே; கருவில் இருக்கும் சிசுவுக்கும் அவனே உணவு அளிக்கச் செய்கின்ருன். ஒரு தாயினுடைய கருப்பையில் இருக்கும் குழந்தை எதை ஆகாரமாகக் கொண்டு வளர்கின்றது என்பதைச் சிந்தித்துப் பார்ப்பவர்கள், இறைவனுடைய சிருஷ்டியின் அழகைக் கண்டு, ஆச்சரியத்தில் மூழ்கத் தவற மாட்டார்கள். இதிலும்கூட ஓர் அருமையான சிறப்பு அமைந்து

தான் இருக்கின்றது. ஒரு தாய் தான் கருவுற்றிருப்பதைத் தெரிந்து கொள்வது, அப்படி கருவுற்ற சில நாட்களுக்குப் பிறகு தான். நம்முடைய வாழ்க்கை அனுபவத்தில் இருந்து நாம் காண்பது, ஒரு பெண் கருத்தரித்த அன்றே அவள் கருத்தரித்து விட்டாள் என்பதை உணர முடியாதது. அவள் கருத்தரித் திருக்கின்ருள் என்பதைப் பின்னுல் நிகழ்கின்ற ஒன்றின் காரணமாகத்தான் நாம் அறிந்து கொள்கின்ரும். ஆகவே, கருத்தரித்த காலத்திற்கும், அதை அந்தத் தாயும் பிறரும் உணர்கின்ற காலத்திற்கும் இடையே, ஓர் இடைவெளி இருக்கத் தான் செய்கின்றது. இந்த இடைவெளியில் அந்தக் கருவொன்று உருவாகியிருக்கின்றது என்பதை உணராததின் காரணமாக, அதைப்பற்றி யாரும் எந்தக் கவலையும் காட்டுவதில்லை. ஆனுல், ஒரு பெண் கருத்தரித்திருக்கின்ருள் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு, அந்தக் கரு நன்ருக, எவ்வித இடைஞ்சலும் இன்றி வளரவேண்டும் என்பதற்காக, அந்தத் தாய் பல காரியங்களில் முன்னெச்சரிக்கையாக இருந்து கொள்கின்ருள்; தன்னுடைய பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்கின்ருள்; தன்னுடைய உணவையும் மாற்றிக் கொள்கின்ருள். ஆனுல், இந்தக் கரு வளரத் தொடங்குவது இப்படி இவள் செய்ய ஆரம்பித்ததில் இருந்தல்ல, அதற்கு முன்னதாக. எப்பொழுது கருத் தரித்ததோ அன்றிலிருந்தே அது வளரத் தொடங்கு கின்றது. ஆக, ஒரு பெண் கருத்தரித்த வேளைக்கும், அந்தப் பெண் கருத்தரித்திருக்கின்ருள் என்று உணர்ந்து கொள்கின்ற வேளைக்குமிடையில் இருக்கின்ற இடைவெளியில், அந்தக் கருவை வளர்க்கச் செய்கிறவனும் அந்தப் பரம்பொருள் தான்.

ஆக, பரம்பொருளுடைய இந்தத் தன்மையை எண்ணி, சிந்தித்து, உணர்ந்து பார்க்கும் பொழுது, அந்தப் பரம் பொருளினுடைய கருணைத் திறனும், அருள் வெள்ளமும் நம்முடைய அறிவையும், உணர்வையும் ஒருங்கே ஆட்கொண்டு விடவே செய்கின்றன. இத்தகைய பரம்பொருள் அறியாத செயல் ஒன்று இருக்க முடியுமா? என்று இந்தக் கவிஞர் கேட்கின்ருர். இத்தகைய பரம்பொருள் அறியாத செயல் ஒன்று

இருக்க முடியுமா என்று இந்தக் கவிஞர் கேட்பதற்கு ஒரு பொருளுண்டு. நாம் இவ்வுலகில் எவ்வளவோ காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றோம். சில காரியங்கள் பிறருடைய பாராட்டுதலைப் பெறுவதற்காகவே செய்கின்ற காரியங்கள். வேறு சில காரியங்கள் நம்முடைய மன இச்சையைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்கின்ற காரியங்கள். இப்படி மன இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகச் செய்கின்ற காரியங்கள் சிலவற்றை, நாம் பிறர் முன்னிலையில் செய்யத் துணிய மாட்டோம். காரணம், அவை பெரும் அவமானம் உண்டாக்கும் என்று எண்ணுகின்றோம். இது நாம் ஒவ்வொரு வரும் நம்முடைய வாழ்க்கையிலே காண்பதாகும். தாம் செய்கின்ற எந்தக் காரியத்தைப் பற்றியும் தாம் அஞ்சு வதற்கோ, அவமானப்படுவதற்கோ, பிறரிடத்தில் வெட்கப்படு வதற்கோ ஒன்றுமில்லை என்று சொல்லக்கூடியவர்கள், எத்தனை பேர் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவரும் இறைவன் அறியாத செயல் எதுவுமேயில்லை என்று உணர்வார்களேயாயின், பிறர் அறியாத செயல் ஒன்றிருப்பினும், அது இறைவனால் அறியக் கூடியதே என்ற எண்ணத்தின் காரணமாக, அந்தச் செயல் நன்மையாக இருந்தால் இறைவனுடைய நன் மதிப்பும், பரிசும் கிடைக்கும்; அந்தச் செயல் இறைவனுடைய ஆணைக்கும், கட்டளைக்கும், ஏற்புக்கும் அப்பாற்பட்டதாக இருந்தால், அதற்காக அந்த இறைவனுடைய தண்டனையை அனுபவிக்க வேண்டி வரும் என்ற அச்சம் உண்டாக, நம்முடைய செயல் எதுவுமே இறைவன் அறியாததல்ல என்ற உணர்வு நமக்கு என்றுமே இருக்குமேயானால், நம்முடைய வாழ்வு நல்வாழ் வாவதற்கு உதவும் என்ற எண்ணத்தில்தான், அந்தக் கவிஞர் சொல்கின்றார்.

நீயறியாச் செயலுண்டோ?

இப்பொழுது அந்தக் கவிஞருடைய பாடலை முழுமையாகப் பார்க்கலாம் :

"ஈயறியாப் பூந்தேனே யெழுத்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவிலிருந் தமுதூட்டுந் தாய்த்துணையே
நீயறியாச் செயலுண்டோ நிகிலபரம் பரமூர்த்தி"

இந்தப் பாடல் மேலகரம் திரிகூட ராஜப்ப கவிராயர் அவர்கள் இயற்றிய திருக்குற்றாலத் தலபுராணத்தில் அமைந்திருப்பது. 'நீயறியாச் செயலுண்டோ நிகிலபரம் பரமூர்த்தி' என்ற சொற்களுக்குச் சற்று விளக்கம் தேவை. 'பரமூர்த்தி' என்ற சொல் இறைவனை, பரம்பொருளைக் குறிக்கும். ஆனால், 'நிகில பரம்' என்ற சொற்கள் எதனைக் குறிக்கின்றன என்பதைக் காணவேண்டும். 'நிகிலம்' என்ற சொல்லுக்கு, 'எல்லாம்', 'முழுவதும்', 'யாவற்றும்' என்று பொருள். 'பரம்' என்ற சொல்லே மிகப்பரந்த பொருளையுடையது. 'கடவுள்' என்ற பொருள் அதற்கு உண்டு. அதுவல்லாமல், 'மேலானது', 'திவ்வியம்' என்ற பொருள்களும் அதற்குண்டு. ஆக, 'நிகில பரம் பரமூர்த்தி' என்பது எல்லாவற்றிற்கும் மேலானதாகவும், தலைவனாகவும் இருக்கின்ற பரம்பொருளைக் குறிக்கின்றது. இப்பாடலை முழுமையாகப் படிக்கும்பொழுது, இதனுடைய சொல்லழகும், கருத்துச் செறிவும், ஆழ்ந்த தத்துவக் கருத்தும் அற்புதமாகப் பின்னிப் பிணைந்து மிளிர்வதை நாம் அனுபவித்த நிறைவு உண்டாகின்றது.

1980 கல்கி தீபாவளி மலரில் வெளியானது.

பிரார்த்தனை

பரவலான சீர்கேடு

இன்றைய சமுதாயத்தில் வாழ்கின்ற நம் அனைவருக்குமே ஏதோ ஒரு அதிருப்தி இருந்துகொண்டேயிருக்கின்றது. எதில் அந்த அதிருப்தி இருக்கின்றது என்பது, அவரவர்களுடைய வாழ்வின் முறையையும், வாழத் தங்களுக்குத் தாங்களே வகுத்துக் கொண்ட முறையையும், பிறருடைய நன்மை தீமைகளை அணுகுகின்ற முறையையும் பொருத்ததாகும். இப்படிப் பார்க்கும்பொழுது பொதுவாக நம்மிடையே ஒழுக்கம் குலைந்துவிட்டது; சத்தியம் சிதைந்துவிட்டது; நேர்மை நலிந்து விட்டது என்ற எண்ணமே உண்டாகின்றது. இது மிகப் பரவலாக இருப்பதின் காரணமாக, 'இந்த நிலையில் இருந்து நமக்கு ஈடேற்றம் உண்டா?' என்ற சந்தேகமே நம்மில் பலருக்கு உண்டாகியிருக்கின்றது.

'தீமை' என்று கருதப்படுவது சிறிய அளவில் இருக்குமே யானால் அதை நீக்குவதற்கு நம்பிக்கையும், நல்வழியும் கிடைக்கும். ஆனால், அதே தீமை மிகப் பரவலாகப் போய் விடுமேயானால், அதைத் தீமை என்று தெரிந்துகொள் வதற்குரிய வாய்ப்பும் அழிந்து போக, அந்தத் தீமையே இயல்பானதாக நிலவத் தொடங்கிவிடும். 'இந்த நிலைமைக்குப் பரிகாரம் உண்டா?' என்ற கேள்வி, மனச்சாட்சி உறுத்திக் கொண்டிருக்கும் பலருடைய உள்ளங்களில் எழவே செய்கின்றது. எத்துணையளவுக்குச் சிந்தித்துப் பார்த்தாலும் இதற்கு ஒரு நிச்சயமான வழி தோன்றுவதாகத் தெரியவில்லை.

இந்த நிலைமை, இன்று நாம் வாழ்கின்ற சூழ்நிலையில், மக்களுடைய உயர்வாழ்வுக்கு ஒத்ததல்ல; அதனை மாற்றியே யாகவேண்டும், என்று எண்ணுகின்றவர்களுடைய கடமை என்ன என்ற கேள்வி நியாயமாக எழக்கூடியதே.

தூய்மை தொடங்குக!

தீமை எப்பொழுது பரவலாக இருக்கின்றதோ, அப்பொழுது உலகத்தாரையோ, மற்றவர்களையோ திருத்தி விட முடியும் என்ற எண்ணத்தில் ஒரு காரியத்தில் இறங்குவது அதற்குரிய பலனைக் கொடுக்காது. பிறருடைய தீங்கை எடுத்துக் காட்டுகின்றபொழுது, அவர்கள் நம்மிடத்திலே குரோதம் பாராட்டுவார்களே தவிர, நம்முடைய நல்லெண்ணத்தையும், அதன் அடிப்படையில் பிறந்த முயற்சி யையும் பாராட்டமாட்டார்கள். எனவே, இதற்குரிய ஒரே வழி, அதுவும் நீண்ட கால வழி, ஒன்றுகத்தான் இருக்க முடியும் என்று தோன்றுகின்றது; அதாவது, இந்தத் தீமையை உணர்பவர்கள், இந்தத் தீமையைப் போக்கவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள், தங்களுடைய சொந்த வாழ்க்கையிலே, தங்களுடைய குடும்பத்தாரிடத்திலும் மேலும் தங்களுக்கு மிக நெருக்கமாக உள்ளவர்களிடத்திலும் தூயவாழ்வைத் துலங்கச் செய்வதுதான். இப்படி ஒவ்வொருவரும் செய்யத் தொடங்கு வார்களேயானல், நாளடைவில் இந்நிலைமைக்கு ஒரு பரிகாரம் கிடைக்காமல் போகாது என்று நிச்சயமாக நம்பலாம்.

தெய்வ சிந்தனை தீய நினைவைத் தடுக்கும்

இந்த வழியிலே ஒன்றை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தெய்வம் என்று ஒன்று உண்டு; அது நன்மையை விரும்புகின்றது; நன்மை செய்தவர்களுக்கு நல்வாழ்வளிக் கின்றது; தீமை செய்தவர்களைத் தண்டிக்கின்றது; அவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது; தற்காலிகமாக அவர்கள் ஆனந்தத்திலும் செல்வத்திலும் மிதந்து கொண்டிருப்பதாகத் தோன்றிய போதிலும், நாளடைவில் அவர்கள் தங்கள் செயலினுடைய பலனை அனுபவித்துத்தான் ஆகவேண்டும்

என்ற உறுதியான நம்பிக்கை ஒன்று இருக்குமேயானால், அந்த நம்பிக்கை இந்தக் காரியத்தில் வெற்றி பெறுவதற்குப் பெருத்த அளவில் உதவும். இக்காலத்திலோ, தெய்வ நம்பிக்கையும், அதனால் பிறக்கும் தெய்வ பயமும் குறைந்து வருவதின் காரணமாக, யார் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; பண பலமும், அதிகார பலமும் இருந்துவிட்டால், சட்டத்தின் பிடியில் இருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்; செல்வமும், செல்வாக்கும் இருந்துவிட்டால், யாரை வேண்டுமானாலும் தம்முடைய கைக்குள் போட்டுக்கொள்ளலாம், என்ற எண்ணம் உண்டாகிவிட்டது. இந்த எண்ணத்தை அடிப்படையிலேயே வளர விடாமல் தடுப்பது இதற்கான ஒரு சிறந்த வழியாக இருக்கும்.

ஆசை வேட்கையும் கடமை உணர்வும்

தெய்வத்தை நம்புகிறவர்களும், அதை வழிபடுபவர்களும் எதற்காக அப்படிச் செய்கிறார்கள் என்றால், அந்தத் தெய்வத்தி னிடமிருந்து தமக்கு இந்த நன்மை அல்லது அந்த நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே செய்கிறார்களேயன்றி, தம்மைப் படைத்த தெய்வத்தை வணங்குவது தம் கடமை என்ற உளப்போக்கில் செய்வதில்லை. தெய்வத்தை, அதைக் கொடுக்க வேண்டும், இதைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு வணங்கி, அதன் மூலமாக இவற்றைப் பெறமுடியும் என்ற எண்ணம் ஏற்படுமேயானால், அத்தகைய தெய்வ நம்பிக்கையும், தெய்வ வழிபாடும் சிறந்தவை என்று சொல் வதற்கில்லை. இந்த நிலையில்தான் நம்முடைய நாட்டுக் கவிஞர்கள் தெய்வத்தை எப்படி அணுகியிருக்கிறார்கள்; தெய்வத்தை எப்படிக் கண்டிருக்கிறார்கள்; அந்தத் தெய்வத்தி னிடமிருந்து எதை வேண்டியிருக்கிறார்கள் என்றெல்லாம் பார்ப்பது, நமக்குப் பெருத்த உதவியாக இருக்கும்.

பெறலாம் பயன்களைப் பாரதி சொல்கிறார்

கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றித் தெரிந்திருக்கும் பெரும்பாலோர் அவருடைய தேசியப் பாடல்

களைத்தான் திருப்பித் திருப்பிப் படித்திருக்கிறார்கள். ஆனால், அவருடைய தெய்வப்பாடல்களும், இலக்கிபப் பாடல்களும் தலைசிறந்தவை என்பதைப் பெருத்த அளவில் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் இந்தத் தெய்வப் பாடல்களும், இலக்கியப் பாடல்களும், மிகச் சிறந்தவையாகவே அமைந்திருக்கின்றன. இத்தகைய தெய்வப் பாடல்களில் அவர் பாடியிருக்கின்ற தோத்திரப் பாடல்கள் பல. அவற்றில், 'விநாயகர் நான்மணி மாலை' என்பதும் ஒன்று. இறைவனைக் கருத்திலே வைப்பதினால் என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்பதை அதில் அவர் கூறுகிறார்:

''குணமதிற் பலவாம்; கூறக் கேளீர்!
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்;
அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்
கட்செவி தன்னைக் கையிலே யெடுக்கலாம்
விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணித் துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து, நிலைபெற் றோங்கலாம்;
அச்சம் தீரும்; அமுதம் விளையும்;
வித்தை வளரும்; வேள்வி ஓங்கும்;
அமரத் தன்மை எய்தவும்
இங்குநாம் பெறலாம்; இஃதுணர் வீரே''

இப்படிப் பாரதியார் குறிப்பிடும் பலன்களில் நாம் இன்று அந்தஸ்துக்கும், செல்வத்துக்கும், செல்வாக்குக்கும் அடையாள மாகக் கருதுகின்ற எதுவுமேயில்லை. காரணம், இவை யனைத்தும் அழியக்கூடியவை. ஆனால், பாரதியார் எடுத்துக் காட்டுகின்ற பலன்களோ அழிவற்றவை.

தர நீ கடவாய்!

அதைப் போலவே, இறைவனிடத்திலே பாரதியார் கேட்கும் வரமும் அப்படியாகவே அமைந்திருக்கின்றது;

''மனத்திற் சலன மில்லாமல்,
மதியில் இருளே தோன்ருமல்,
நினேக்கும் பொழுது நின்மவுன
நிலேவந் திடநீ செயல்வேண்டும்;
கனக்குஞ் செல்வம், நூறு வயது:
இவையும் தரநீ கடவாயே''

இங்கும்கூட, அவர் வேண்டுகின்ற வரங்களில், 'கனக்குஞ் செல்வம், நூறு வயது' ஆகியவை இடம் பெற்றிருந்த போதிலும், அவர் முன்னர்க் கேட்டிருக்கின்ற 'சலனம் இல்லாத மனம், இருள் இல்லாத மதி, நினேக்கும் பொழுதெல்லாம் இறைவனுடைய மவுனநிலே வந்திடும் வாய்ப்பு' ஆகியவற்ருேடுதான், இவற்றைச் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

உயிரெலாம் இன்புற்றிருக்க வேண்டும்

உண்மையில், இந்தச் சலனம் இல்லாத மனம் ஒன்றிருக்குமேயாஞல், பிற அனேத்தும் இயல்பாகவே இடம் பெற்றுவிடும் என்பதை உணர்த்துகின்ற வகையிலேயே பாரதியார் மேலும் பாடுவார்:

''தன்னேத்தான் ஆளுந் தன்மை நான் பெற்றிடில்,
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்,
அசையா நெஞ்சம் அருள்வாய்; உயிரெலாம்
இன்புற் றிருக்கவேண்டி, நின் இருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா! வாழ்வேன் களித்தே.''

'தன்னேத்தான் ஆளும் தன்மை நான் பெற்றிடில், எல்லாப் பயன்களும் தாமே எய்தும்' என்ற சொற்கள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை.

தன்னே ஆளும் தன்மை வேண்டும்

'தன்னேத்தான் ஆளும் தன்மை' என்ற சொற்களில் பல உண்மைகள் அடங்கியிருக்கின்றன. நம்முடைய வாழ்க்கையின் அனுபவத்தை வைத்துக்கொண்டு எதையெதை அடக்க

வேண்டும், எதையெதை ஆளவேண்டும் என்று வரிசைப் படுத்திச் சொல்ல முடியும். ஆனுல், தன்னைத்தான் ஆளும் தன்மை என்பது இவையெல்லாவற்றையும்விடப் பெரியது, உயர்ந்தது. தன்னை மீறி, தன்னுடைய குறிக்கோளுக்கு மீறி, தன் கட்டுத்திட்டத்திற்கு மீறி, தன் இலட்சியத்திற்கு மீறி எதுவும் சொல்லாமலோ, செய்யாமலோ இருப்பதும் இந்தத் தன்னைத்தான் ஆளும் தன்மையில் அடங்கும். இந்தத் தன்மை ஒருவனுக்குக் கிடைத்துவிடுமாயின், அந்த நிலையில் இறைவனை நன்ருக அறிந்து கொள்வதோடு, அந்த இறைத்தன்மையோடு இணைந்துவிடுகின்ற பண்பையும் பெற்றுவிட முடியும். அந்த நிலை இலகுவில் கிடைப்பதல்ல. இறைவனுடைய அருளிஞ லேயே கிடைக்கக் கூடியது. ஆகவேதான், அந்த நிலையைத் தரவேண்டுமென்று இறைவனையே பிரார்த்திக்க வேண்டிய கட்டாயம் உண்டாகிவிடுகின்றது.

கண் பார்ப்பாய்!

இந்த நிலையைப் பெற்றவர் பற்பல கட்டங்களில் இவ்வுலக வாழ்வில் பற்றில்லாமல், சமுதாயத்தினின்றே ஒதுங்கி விடுவதும் உண்டு. இப்படி ஒதுங்கிவிடுவது அவர்களுடைய வீடு பேற்றுக்கு உதவின போதிலும், பிறர்க்கு உதவும் என்று சொல்வதற்கில்லை. சிற்சில சமயங்களில் அவர்களுடைய இந்த நிலையே பிறருடைய மனத்தில் மரியாதையையும், பக்தியையும் உண்டுபண்ணி, அவர்களுடைய வாழ்க்கையைத் திருத்த உதவக்கூடும் என்ருலும், சமுதாயத்தோடு ஒட்டி, அதனேடு வாழ்ந்து, அதனுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொள்வ தற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

இதை மனத்திற் கொண்டு பாரதியார், மறுபடியும் கடவுளிடத்தில்,

“இங்குப்பழியற்று வாழ்ந்திடக்கண் பார்ப்பாய்—ஒளிபெற்றுக்
கல்விபல தேர்ந்து கடமையெலாம் நன்காற்றித்
தொல்வினைக்கட் டெல்லாம் துறந்து”

என்று கேட்பார்.

வாழ்விப்பாய் மனமே!

ஆனால், இவையனைத்துக்கும் மூலமாகவும், காரணமாகவும் இருப்பதும் ஒருவருடைய மனமேயாகும். வாய் எதை வேண்டுமானாலும் முணுமுணுத்துக் கொண்டிருக்கலாம்; கை எதை வேண்டுமானாலும் செய்துகொண்டிருக்கலாம்; கண் எங்குவேண்டுமானாலும் பார்த்துக் கொண்டிருக்கலாம்; ஆனால், இவையனைத்தும் ஒரு மனப்பட்டு மனத்தின் ஆட்சிக்கு அடங்காத வரையில், ஒருவருடைய வாழ்க்கை தூய்மை யடையாது. அங்குமிங்குமாக மனத்தூய்மை வெளிப்படக் கூடும். ஆனால், அந்த மனத்தூய்மையினுடைய ஆட்சியில் பிற பொறிகளுடைய செயல்கள் அடங்காமல் போனால், அந்த மனத்தூய்மை பலனற்றதாக ஆகிவிடும். எனவே, ஐம்பொறி களையும் அடக்கி ஆளுகின்ற பொறுப்பும் மனத்தையே சார்ந்தது. அந்த மனம் தூய்மையாக இருக்க வேண்டும்; அந்த மனம் வழிதவறிப் போகக்கூடாது. அந்த மனம் ஐம்பொறிகளையும் தன்னுடைய ஆட்சிக்குள் அடக்கி வைத் திருக்குமேயானால், மனத்தின் தூய்மை வாழ்க்கையினுடைய தூய்மையாகப் பரிமளிக்கும். இதை நன்கு உணர்ந்த பாரதியார், மனத்தினிடமே ஒரு பிரார்த்தனை செய்கிறார்:

“யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய்,
யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய்
வாழ்ந்திட விரும்பினேன்; மனமே! நீயிதை
ஆழ்ந்து கருதி, ஆய்ந்தாய்ந்து, பலமுறை
சூழ்ந்து, தெளிந்து, பின் சூழ்ந்தார்க் கெல்லாம்
கூறிக் கூறிக் குறைவறத் தேர்ந்து,
தேறித் தேறி நான் சித்திபெற் றிடவே,
நின்று லியன்ற துணைபுரி வாயேல்,
பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்;
மனமே! எனைநீ வாழ்வித் திடுவாய்!”

பாரதியார் புனைவதாகக் கூறுவது பொற்கோயில். அப்படி அவர் புனைவதாகக் கூறும் கோயில் யாருக்குத் தெரியுமா?

எந்தத் தெய்வத்துக்குமல்ல. தம்முடைய மனத்துக்குத்தான். காரணம் என்ன தெரியுமா? தூய மனமே தெய்வத்தின் திருக் கோயில். தெய்வத்தை இந்தக் கோணத்திலிருந்து அணுகி, அதனிடமிருந்து இவ்வாறெல்லாம் வரம் கேட்கலாம் என்ற எண்ணமே அருமையாகிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், பாரதியாருடைய இத்தகைய பாடல்களை நினைவு கூர்வது நலன் பயக்குமல்லவா?

★

1980—'குங்குமம்' தீபாவளி மலரில் வெளியானது.